
# தென்கிழக்கு மின்னல்



இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்

# தென்கிழக்கு மின்னல்

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை-600 017.

முதற் பதிப்பு : ஜூன் 1999
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 2000
உரிமை : ஆசிரியருக்கு

THENKIZHAKKU MINNAL
By : INDIRA SOUNDARRAJAN
Second Edition : October 2000
Pages : 180
Paper used 11.6 Cream wove

விலை ரூ. 40-00

30164
4655921

THIRUMAGAL NILAYAM
Old No. 55, New No. 16
Venkatanarayana Road,
T. Nagar, Chennai - 600 017.
Phone : 4342899, 4327696
Fax : 91 - 044 - 4341559

திருமகள் நிலையம்
பழைய எண் : 55, புதிய எண் : 16,
வெங்கட் நாராயணா சாலை
தியாகராய நகர், சென்னை - 600 017
போன் : 4342899, 4327696
Fax : 91 - 044 - 4341559

அச்சிட்டோர் :
கண்ணா பழநி அச்சகம்
11, டாக்டர் நடேசன் ரோடு முதல் தெரு,
சென்னை - 600 005

# என்னுரை

இந்த புத்தகத்தில் உள்ள இரண்டு நாவல்களும் என்மேல் பதித்த மர்ம முத்திரைக்கேற்ப நான் எழுதியவை.

மர்மதேசம் தொலைக்காட்சித் தொடரின் மகத்தான வெற்றி காரணமாக என்னைச் சந்திக்கும் பத்திரிகை ஆசிரியர்களும் சரி, வாசகர்களும் சரி என்னிடம் மர்மமும் அமானுஷ்யமும் கலந்த படைப்புகளையே பெரிதும் எதிர்பார்த்துக் கேட்டனர்.

ஒரு பக்கம் மகிழ்வாகவும், மறுபக்கம் அது எனக்கு அச்சத்தையும் ஏற்படுத்தியது.

ஒரு எழுத்தாளன் எப்பொழுதும் குறிப்பிட்ட ஒரு வட்டத்துக்குள் தன்னை அடைத்து வைத்துக்கொண்டு விடக்கூடாது என்பது என் கருத்து.

அவனது கற்பனைக்கு எல்லைகள் கூடாது. அது வானம்போல திசைகளற்று விரிந்து கிடப்பதாக இருத்தல் வேண்டும். சாதி மதம் இனம் மொழி என்கிற அடையாளங்களிலும் அவன் அடங்கிச் சுருங்கி விடக் கூடாது.

எனவேதான் பயந்தேன். பயத்தால் எழுதும் எழுத்தில் இலக்கியத்தன்மை, இறவாத்தன்மைகளை சேர்க்க முடியுமா என்று பயந்தேன்.

தென்கிழக்கு மின்னலில் அது ஓரளவு கை கூடிற்று. ஆனால் சர்ப்ப பலி அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஒரு நூறு நாள் மசாலா தமிழ் சினிமாபோல அதற்கொரு தன்மை வந்துவிட்டது.

ஆனால் தென்கிழக்கு மின்னலை வாசித்த பலர் இதை இன்னமும் பிரமாதப் படுத்தியிருக்கலாம். மறக்க முடியாதபடி செய்திருக்கலாம் என்றெல்லாம் கூறிய போது அடடா தவறு செய்து விட்டோமே என்று வருந்தியது நிஜம்.

எது எப்படி இருப்பினும் இரண்டு நாவல்களும் சூடு, சுவை குன்றாதவை. படித்து முடித்தபின் நல்லவித மாகவோ, கெட்டவிதமாகவோ பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை.

மகிழ்ச்சிக்குரிய இதில் நெகிழ்ச்சிக்குரிய விஷயங் களை எதிர்பார்த்து ஏமாற வேண்டாம். அது தனி... அதிலும் என் கவனம் செல்லாமலில்லை. அப்படித்தான் இப்பொழுது 'என் பெயர் ரங்கநாயகி'யை எழுதி வருகிறேன்.

என் எல்லாவித சிந்தனைகளுக்கும் வரவேற்பும் உற்சாகமும் அளித்து வரும் வாசக உலகத்துக்கும் என் கதைகளை தனித்துவத்தோடு வெளியிட்டு வரும் திருமகள் பதிப்பகத்தாருக்கும் என் நன்றி.

27-4-99
மதுரை-3

அன்புடன்
**இந்திரா சௌந்தர்ராஜன்**

## வாசகர் கடிதங்கள்

பொதுவாக இன்றைய எழுத்தாளர்கள் கதையை அவர்கள் கோணத்தில் மட்டுமே சிந்தித்து, அதில் தங்கள் கருத்தை நியாயப்படுத்தி, வாசகர்களின் மேல் திணிக்கும் முயற்சிக்கு நடுவில், தனது கதைகளை பல கோணங்களிலிருந்து அலசி, ஆராய்ந்து எழுதுவதில் திரு. இந்திரா சௌந்தர்ராஜன் தனித்து நிற்கிறார். அதற்கு இந்த 'தென்கிழக்கு மின்னல்' நாவல் ஒரு மிகச் சிறந்த உதாரணம்! ரம்மியமான வர்ணனைகள் சூழ்நிலையை கண்முன்னால் நிறுத்துகின்றன! அள வில்லா விறுவிறுப்பு ஆர்வத்தை அதிகப்படுத்திக் கொண்டே போகிறது!

'சர்ப்ப பலி' நாவல்... படித்து முடித்தவுடன் காணுமிடமெல்லாம் விதவிதமான பாம்புகள் பய முறுத்துகின்றன! ('சர்ப்ப பலி பூஜா க்ருதி' என்ற நூலை உருவாக்கியவர் (!) இந்திரா சௌந்தர்ராஜன்தானா?) 'அதீத கற்பனையான விஷயங்களைகூட இயல்பான 'Artifical Nativity' (!) யோடு 'Narrate' செய்து கொடுப் பதில் நாவலாசிரியர் சூரர்!

இந்த இரண்டு நாவல்களையும் படித்தவுடன் 'இந்திரா சௌந்தர்ராஜன்' வேறொரு மனிதராகவும் இருப்பாரோ என சந்தேகம் வருகிறது! அவர் இறுதி வரை எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜனாகவே இருக்க வேண்டும்.

**மீரா. ப. தயாளன்,**
**விழுப்புரம்.**

★

விறுவிறுப்புக்கு மறு பெயர்தான் இந்திரா சௌந்தர் ராஜனோ? கோட்டைப்புரத்து வீடு தொடரிலிருந்தே உங்கள் கதைகளைப் படித்து வருகிறேன்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். படித்து முடித்த பின் பத்துப் பேரிடமாவது ஆசை தீர பேச வேண்டும் என்று என்னைத் தூண்டுகிறது. புதுப்புது செய்திகள். கதையை படித்து முடித்த பின் ஒரு விவாத மேடையே அல்லவா உருவாகி விடுகிறது?

காமினி சந்திரசேகர்
கோபி செட்டிப்பாளையம்.

★

தென்கிழக்கு மின்னலை என்னால் மறக்க முடியாது. இது நிச்சயம் திரைப்படமாக வந்தால் சக்கைபோடு போடும். தனஞ்ஜெயின் பாத்திரவார்ப்பு அருமை. விமானத்தைத் தொடரும் அந்த கழுகை என்னால் மறக்கவே முடியாது.

பாண்டியராஜன்
கடலூர்.

★

எங்க சார் பிடிக்கறீங்க இப்படி ஒரு கருவை? அசாதாரணமாக படிக்கத் தொடங்கி, திரும்பத் திரும்ப படித்தேன். அந்த இடிந்த கோயில், கழுகு, எந்திர வழிபாடு எல்லாமே மனதை மிக பாதித்தன, பாடாய் படுத்தின.

ஃபாத்திமா தன்ராஜ்
குலசேகரம்.

□★□

# தென்கிழக்கு மின்னல்

# சர்ப்ப பலி

இந்திரா சௌந்தர்ராஜன்

□●□

## ஆசிரியரின் பிற நூல்கள்


| | |
|---|---|
| தப்பித்தே தீருவேன் | 80.00 |
| பாண்டிய நாயகி | 67.00 |
| காதலா இது காதலா? | 40.00 |
| விட்டுவிடு கருப்பா...... (மர்ம தேசம்- விடாது கருப்பு) | 85.00 |
| நீலா நீலா ஓடி வா | 35.00 |
| காற்று காற்று உயிர் | 62.00 |
| வைகை வனசுந்தரி | 14.00 |
| நீரெல்லாம் கங்கை நிலமெல்லாம் காசி | 14.50 |
| காத்திருந்த நாகம் | 40.00 |
| மனசுக்குதான் கற்பு | 50.00 |
| அசுர ஜாதகம் | 47.00 |
| தொடத் தொடத் தங்கம் | 85.00 |
| மேலே உயரே உச்சியிலே I | 100.00 |
| மேலே உயரே உச்சியிலே II | 50.00 |
| சொர்ணரேகை | 38.00 |
| காதல் சதுரங்கம் | 63.00 |
| பொற்காசு தோட்டம் | 43.00 |
| உயிரின் மறுபக்கம் | 45.00 |
| புருஷ வேட்டை | 37.00 |
| கலைக்க முடியாத வேஷங்கள் | 43.00 |
| மந்திர விரல் | 45.00 |
| ஆசை ஊஞ்சல் | 52.00 |


□●□


3264
965592


# தென்கிழக்கு மின்னல்!

## 1

வெள்ளம் பாய்வது, யானை ஓடுவது, மயில் ஆடுவது மட்டும் அழகில்லை. விமானம் இறங்குவதும் தான்...

மதுரையின் சின்ன விமான நிலைய காரைத் தரையில் ஒரு சிறகு விரித்த ராட்சஸ வெள்ளை அன்னமாட்டம் அது வளைந்து திரும்பி நிற்பது பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துகிறது.

வெளியே காத்து நிற்கிறது ஒரு கூட்டம்.

இறங்குபவர்கள் அத்தனை பேரும் நிச்சயம் குபேரக் கூட்டம். குறிப்பாக தனஞ்ஜெயன், அவன் மனைவி லிண்டா!

லிண்டா நல்ல சிகப்பு. அமெரிக்க சிகப்பென்றால் கோவைப்பழம் கூட நாணிப் போகுமே... அப்படி ஒரு சிகப்பு. பழுப்பு நிறத் தலைமுடி. சற்றே பூனைக் கண்கள்!

ஐந்து வயது மகன் அனிருத்தை நடக்க விட்டு கை பிடித்தபடி நடந்து வருகிறாள்.

இது முதல் விஜயம்

இந்தியா— அதில் தமிழகம்— அதிலும் மதுரை அவளுக்கு புதிய உலகாய் தெரிய— சற்றே கூடுதலான சூரிய ஆதிக்கம், பூரிப்பில்லாத பசுமை என்று இயற்கையும் அவளை என்னவோ செய்ய, மிரண்டுவிட்டதைப் போன்ற தோற்றத்தோடு நடந்து வருகிறாள்.

ஆனால், தனஞ்ஜெயன் அப்படியில்லை! என்ன இருந்தாலும் அவன் பிறந்து வளர்ந்த மண்ணல்லவா? அமெரிக்காவில் எட்டு வருஷத்துக்கும் மேலாக இந்திய நினைப்பே இன்றி கிடந்து விட்டாலும், திரும்ப வந்து இறங்கியிருக்கும் இந்த தருணம் ஒரு ஏழெட்டு நாளை வெளி நாட்டில் கழித்துவிட்டு வந்துவிட்ட மாதிரிதான் ஒரு இணக்கத்தை உருவாக்கியிருக்கிறது.

மதுரை ஒன்றும் பெரிதாக மாறிவிட்டிருக்கவில்லை போகும்போது பார்த்த நிலையில்தான் இருக்கிறது ஏர்போர்ட்! அதோ குண்டுத் திண்டாக டபராவைக் கவிழ்த்து வைத்த மாதிரி திருப்பரங்குன்றமலை... ஏர்போர்ட்டுக்கு வெளியே பிச்சைக்காரன் சட்டை மாதிரி கிழிந்து கிடக்கும் தார்ச்சாலை.

அவன் மலையை பார்க்க, அவனையும், லிண்டாவையும், அனிருத்தையும் பார்த்துக் கையசைக்கிறது ஒரு கூட்டம்.

''தனா!... அனிருத்!''

''அம்மா!... அப்பா!...''— தனஞ்ஜெயனும் பதில் கூவல் கொடுக்கிறான்.

''லிண்டா, அதோ என் அம்மா... அப்பா...'' அவளுக்கும் காட்டுகிறான். அவள் சற்று நெர்வஸ் ஆகிறாள்.

''லிண்டாங்கற வெள்ளைக்காரியையா கல்யாணம் பண்ணிக்கப் போறே? நோ... கூடாது தனா... கூடவே கூடாது...''



எப்பொழுதோ இப்படிச் சொல்லி தடை உத்தரவு போட்டவர்கள்தானே இவர்கள்?

அவளையும் மீறி அவர்களின் எதிர்ப்பே அவள் மனதில் ஓடுகிறது. இதற்குள் அவர்களை நெருங்கியாகி விட்டது.

'தனா எப்படிப்பா இருக்கே?'வில் தொடங்கி, சௌக்யமாவில் பரவி, கட்டி அணைத்துக் கண்ணீர் வடிப்பதில் முடிந்து நிற்கிறது. லிண்டா அறிமுகமாகிறாள். எல்லோர் பார்வையும் இப்படியா தோட்டாவாகத் துளைக்கும்?

இருந்தும் அதை விலக்கிக் கொண்டு அவளிடமும் இணக்கம் காட்டி க்ஷேமலாபங்களை விசாரித்து விட்டு அனிருத்தை தூக்கிக் கொள்கிறாள் தனஞ்ஜெயனின் அம்மா பிரகதாம்பாள்.

''வாட் ஈஸ் யுவர் நேம்? ஐ ஆம் யுவர் கிரேண்ட் மதர்டா...'' என்று அவனோடு ஆங்கில மல்லுக்கட்டல் வேறு.

''எல்லாரும் கார்கிட்ட இருங்க, லக்கேஜோட வரேன்...'' என்று பேக்கேஜ் கிளியரென்ஸ் ஏரியா பக்கம் டிக்கெட் மற்றும் டேகுடன் செல்கிறான் தனஞ்ஜெயன்.

பிரகதாம்பாள் பேரனை விடுவதாக இல்லை. தனாவின் அப்பா சங்கர நாராயணனும் பேரனைப் பார்த்துப் பார்த்து பூரித்துப் போகிறார். அருகில் என்ன பேசுவது என்றே தெரியாதபடி மிரள மிரள லிண்டா நிற்கும் போதுதான் நடக்கக் கூடாத அந்தச் சம்பவம் நடக்க ஆரம்பித்தது.

அனிருத் பாட்டியின் தோள் மேலேயே வாந்தி எடுக்க ஆரம்பித்தான். ரத்த வாந்தி!

# 2

ஜவஹர் ஹாஸ்பிடல்.

இன்டென்சிவ் கேர் யூனிட்...

வெளியே வருகிறார் டாக்டர் நரசிம்ம ஹரி.

எதிரில் ஆலாய் பறந்தபடி தனஞ்ஜெயன் முதல் எல்லோரும்.

"நத்திங்... அவனுக்கு எதுவுமில்லை. எல்லா டெஸ்ட்டும் பண்ணிட்டேன். எவ்ரிதிங் நார்மல். ஈ.சி.ஜி. பீட்டிங் ரொம்ப பர்ஃபெக்டா இருக்கு. நீங்க இவன் ரத்த வாந்தி எடுத்த பையன்னு சொன்னதை என்னால இப்ப ஒத்துக்கவே முடியாது."

டாக்டரின் விளக்கம் அனைவர் நெற்றியிலும் பூரானை ஓடவிடுகிறது.

"டாக்டர் ஒரு தடவை இல்ல... பல தடவை இப்படித்தான் ரத்த வாந்தி எடுக்கறான். அமெரிக்கால நான் காட்டின ஆஸ்பத்திரிலையும் இதையேதான் சொன்னாங்க. நீங்களும் அதையேதான் சொல்றீங்க. ஆனா, அவன் வாந்தி எடுக்கும்போது பார்த்தா நீங்களே பயந்து போய்டுவீங்க...

வாந்தி எடுத்து வாந்தி எடுத்தே எவ்வளவு அனிமிக்கா அவன் இருக்கான் பார்த்தீங்களா?''

டாக்டர் நரசிம்ம ஹரி அதைக் கேட்டு தோளை உயர்த்தி ஒரு சிரிப்பு சிரித்தபடி சொல்கிறார்.

"ஆச்சரியமா இருக்கு!... ரொம்ப ஆச்சரியமா இருக்கு...!"



"அப்ப என்ன பண்ணலாம்?"

"அனிமிக்குக்கு டானிக் தரேன். மத்தபடி எதுவும் தேவையில்லை." — நரசிம்ம ஹரி திரும்ப தோளைக் குலுக்குகிறார். தனஞ்ஜெயன் லிண்டாவையும், அம்மாவையும் பார்க்கிறான். அவர்கள் அவன் காதைக் கடிக்கின்றனர்.

"டேய் இந்த ஆளைப் பார்த்தா டாக்டர் மாதிரியே தெரியலை. வா, வேற நல்ல டாக்டர்கிட்ட காட்டுவோம்."

இடத்தையும் மீறிச் சிரித்து விடுகிறான் தனஞ்ஜெயன். டாக்டருக்கும் புரிந்ததோ என்னவோ "அவங்க பேசலை தனஞ்ஜெயன், அவங்க பாசம் பேச வைக்குது" — என்கிறார்.

பிரிஸ்க்ரிப்ஷனை வாங்கிக் கொண்டு வெளியே வருகின்றனர்.

ஏ. சி. பியூஜியட் வரவேற்கிறது. ஓடிப்போய் ஏறி உட்கார்ந்து கொள்கிறான் அனிருத்.

"அப்பப்பா என்ன ஒரு வெப்ப பூமி..." உதட்டில் முணுமுணுப்பு. லிண்டாவும் முணுமுணுக்கிறாள்.

"தன்... எப்படி இங்கே நீங்க பிறந்து வளர்ந்தீங்களோ தெரியல" என்கிறாள். "ஹைலி பொலூடட்..." என்று முகத்துக்கு முன் கைகளை வீசி விட்டுக் கொள்கிறாள்.

"என்னடா சொல்றா உன் பொண்டாட்டி?" பிரகதாம்பாள் கேட்கவும், "ரொம்ப வெயில். அசுத்தம்னு சலிச்சுக்கறாம்மா உன் மருமக..." என்கிறான்.

காருக்குள்ளிருந்தபடி அனிருத் கையசைத்து எல்லோரையும் அழைக்கிறான். உள் ஏறி அமர்கின்றனர். பாட்டியின் மடி ஏறி அமர்கிறான் அனிருத். அவளது

பட்டுப்புடவை முந்தியும், அதன் ஜரிகையும் அவனுக்கு ஆச்சரியம் தருகிறது.

''ஒண்டர் ஃபுல் க்ளாத்'' என்கிறான்.

''நீ என் ஒண்டர்ஃபுல் பேரன்...'' என்று பிரகதா வும் அவனைக் கட்டியணைத்து முத்தமிடுகிறாள்.

அப்பொழுதுதான் அந்த அடுத்த சம்பவம் நடக்க ஆரம்பித்தது. முத்தமிட்ட பாட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்ட அனிருத் அப்படியே நறுக்கென்று அவன் பற்களால் பாட்டியின் கழுத்தில் ஒரு கடி கடித்து ரத்தத்தை ஸ்ட்ரா போட்டு உறிஞ்சுவது போல் உறிஞ்ச ஆரம்பித்தான்.

ஒருபுறம் சொட்டுச் சொட்டாக ரத்தம்—மறுபடியும் சலைன் பாட்டில் நடுவில் படுக்கையில் செத்து விட்ட வளைப் போல பிரகதாம்பாள். வெளியே குட்டி போட்ட பூனைபோல குடும்பம். அப்பா சங்கர நாராயணன் தனஞ்ஜெயனை அழுக்குத் துணி என்று நினைத்து விட்டாரோ என்னவோ அப்படி தோய்த்துக் கொண்டிருக்கிறார்.

''சம்திங் ராங் தனா... ஹைலி ராங். உன் பைய னுக்கு மிஸ்டீரியஸா ஏதோ பிராப்ளம்.''

''மிஸ்டீரியஸான்னா?''

''எனக்கு சொல்லத் தெரியல. ஆனா டெஃப னட்டா சொல்றேன். அவனுக்கு வியாதியெல்லாம் இல்லை.''

''எனக்கும் இது தெரியும்ப்பா...''

''தனஞ்ஜெயா... எப்ப இருந்து இப்படின்னு சொல்ல முடியுமா?'' — நடுவில் தந்திக் குரலோடு அப் பாவின் அப்பாவான தாத்தா தணிகாசல மூர்த்தியின் கேள்வி.



''ஒரு ரெண்டு வருஷமா தாத்தா...''

''இப்படி குத்துமதிப்பா சொல்லாம சரியாச் சொல்ல முடியுமா?''

''எதுக்கு தாத்தா கேக்கறீங்க... எனக்கு சரியா ஞாபகம் இல்லை''— தாத்தா பதில் சொல்லாமல் நெற்றி தேய யோசிக்கிறார். தனஞ்ஜெயனும் அவரைச் சில நொடி பார்த்து விட்டு விண்டாவைப் பார்க்கிறான். அவள் கலக்கத்தின் உச்சத்தில் இருக்கிறாள்.

''ஏம்மா உன்கிட்ட எப்பவாவது அவன் இப்படி நடந்துகிட்டிருக்கானா?''— தாத்தா கேள்வி அவள் பக்கம் திரும்புகிறது.

''நோ... இல்ல... ஆனா ஒரேயொரு தடவை வீட்டு நாய்க்குட்டியோட கழுத்தை, இதே மாதிரி கடிச்சு ரத்தம் குடிச்சிருக்கான்...''

தனஞ்ஜெயனே திடுக்கிட்டு திரும்புகிறான். ''விண்டா வாட் எ சர்ப்ரைஸ்... ஒய் டோன்ட் யூ டெல் மீ எ இன்சிடென்ட்.''

''ஐ ஆம் சாரி தன்... அப்ப நான் இவ்வளவு சீரியஸா நினைக்கலை. ஜஸ்ட் அது ஒரு கோபம்னு தான் நினைச்சேன்.''

''அதாவது என்னிக்குன்னு கரெக்டா சொல்ல முடியுமாம்மா?'' தாத்தாவின் கேள்விக்கு சில நிமிடம் வரை கணக்கு போட்ட விண்டா ஒரு தேதியைச் சொல்ல, தாத்தாவும் அடுத்த நொடி அந்தத் தேதியை விரல்விட்டுக் கூட்டி ஏதோ கணக்குப் போட்டுவிட்டு பிறகு நிதானமாய் சொல்கிறார்.

''இது அந்த சண்டி முண்டி வேலை!''

# 3

**வீட்டுக்கூடம்!**

எல்லோரும் ஆளுக்கொரு கோணத்தில் உட்கார்ந் திருக்கின்றனர். முகத்தில் பூச்சி பறக்க வாசலையே பார்க்கின்றனர்.

ஒரு காரும் வந்து தேங்கி நிற்கிறது.

நல்ல வயதான மனிதர் ஒருவர் இறங்குகிறார்.

இரண்டு பேர் கைத்தாங்கலாக பிடித்து அழைத்து வருகின்றனர்.

''வாங்கோ... வாங்கோ, சித்தப்பா வாங்கோ.''

தாத்தா தணிகாசலம் விழாக் குறையாக வரவேற் கிறார். பிரகதாம்பாள் விழுந்தே கும்பிடுகிறாள்.

அவர் பட்டு வேட்டி உடுத்தி தடிமனான தங்கச் சங்கிலியும் தரித்து அதில் ஏதோ தாயத்து போல மின்ன காட்சி தருகிறார்.

தலைமுடி வெண்மை பூத்து சடை பிடித்தும் போய் விட்டது. கண்களில் பீளை சேர்ந்து அப்புறப்படுத்த மாட்டாது சேர்ந்து கிடக்கிறது. கழுத்து, கன்னம், மார்பில் எல்லாம் கோழிக் கொண்டைபோல தொங்கும் சதைப் பாகம்!

லிண்டா கேட்கிறாள்.

''தனா ஹூஸ் தட் பர்சன்?''

''ஹி ஈஸ் ஏ கிரேட் ரிலிஜியஸ் பர்சன். நேம் டு சக்ரவர்த்தி. லைக் போப். தட் மீன்ஸ் கிங் ஆஃப் தி வேர்ல்ட்.''



—அவன் போப் ஆண்டவரைப் போல என்று உதாரணம் சொல்லி அவர் பேரையும் சொல்கிறான். இதற்குள் அவர் பார்வை கண்ணுக்கு கூரை கொடுத்து, தனஞ்ஜெயனைப் பார்க்கிறது.

''தனஞ்ஜெயன் நீதானா?''— கேட்கிறார்.

''ஆமாம் தாத்தா...''

''நான் வெறும் தாத்தா இல்லை. கொள்ளுத் தாத்தா...'' அவரிடம் விளக்கம்.

''கொள்ளுத் தாத்தான்னா?''— லிண்டா இடை நறுக்குகிறாள்.

''தட்மீன்ஸ், என் அப்பாவோட அப்பாவோட அப்பாவோட தம்பி... ஐ ஆம் தி ஃபோர்த் ஜெனரேஷன்.''

''வாவ்...'' லிண்டா வாய் பிளக்கிறாள். இரண்டு காரணங்கள். ஒன்று, இத்தனை வருடம் அவர் உயிரோடு இருப்பது. அடுத்தது, நான்கு தலைமுறை யாக உறவு முறை அறுபடாமல் தொடர்ந்திருப்பது.

இதெல்லாம் அமெரிக்காவுக்கு அதிசயமான விஷயங்கள்.

''என்ன கேக்கறா உன் பொண்டாட்டி?''— தாத்தா வின் அடுத்த கேள்வி தனஞ்ஜெயனை திணற அடிக்கிறது.

''நீங்க யாருன்னு கேட்டா, சொன்னேன்.''

''சொன்னே சரி... உன் குடும்பம் பத்தி அவளுக்கு எதாவது சொன்னியா?''

''சொல்லிருக்கேன்...''

''என்னன்னு...?''

''பெரிய மிட்டா மிராசு குடும்பம். தமிழ் நாட் டிலேயே ரொம்ப பிரபலம்னு...''

"அது சரி... உன் கொள்ளுத் தாத்தா அதாவது என் அண்ணா சந்திரமௌலீஸ்வரன் பத்தி எதாவது சொன்னியா?"

"......"— தனஞ்ஜெயன் திருதிருவென விழிக்கிறான்.

"ஏண்டா சங்கர நாராயணா உனக்குத்தான் உன் தாத்தா பத்தி ஏதாவது தெரியுமா?"

அவரும் கிட்டத்தட்ட திருதிரு! கூடவே வந்த விஷயத்தை விட்டுவிட்டு எதற்காக இவர் இப்படி வேறு விஷயம் பேசி நேரம் கடத்துகிறார் என்கிற கவலை.

"தாத்தா தப்பா எடுத்துக்கப்படாது... அந்த மாதிரி விஷயங்களை பின்னால பேசிக்கலாம். இப்ப என் பேரனைப் பாருங்கோ. நம்ம தலைமுறையோட கடைசி நபர் இப்ப அனிருத்தான். அவன் இப்ப..."

"தெரியுண்டா... அது உன் அப்பன் கணிச்ச மாதிரி சண்டி முண்டி வேலதான்."

கொள்ளுத் தாத்தா பதில், தாத்தா தணிகாசல மூர்த்தி முகத்தில் மிதப்பைப் பரப்புகிறது. கொள்ளுத் தாத்தா தொடர்கிறார்.

"எனக்குத் தெரியும்... இப்படி ஏதாவது நடக்கும்னு! அதுலையும் வேலைக்குப் போன இடத்துல அமெரிக்காவுலையே நீ ஒரு வெள்ளைக்காரியையே காதலிச்சுக் கல்யாணம் பண்ணிண்டதால இந்தப் பிரச்சினை அதிகமாகும்னும் தெரியும்..."

"எந்தப் பிரச்சினை... கொஞ்சம் விபரமா..."

அப்பா நாராயணன் கேட்கிறார். "சொல்றேன் சொல்றேன்.

நூத்தி ஏழு வயசு எனக்கு... இன்னும் சாவு வரலை. எதுக்காக உசுரோட இருக்கேன்னு எனக்கு நானே கேட்டுப்பேன். அண்ணா சந்திரமௌலி செய்த மிருத்யஞ்சய ஹோமத்துல கலந்துண்ட புண்ணியத்தாலன்னு கூட சொல்வேன். ஈஸ்வரா சீக்கிரம் கூட்டிக்கோப்பான்னு வேண்டாத நாள் இல்லை. ஆனா இப்பதான் தெரியறது, அவன் எதுக்காக என்னை உசுரோட விட்டு வெச்சுருக்கான்னு..."



கொள்ளுத் தாத்தா பலமாகவே பீடிகை போடுகிறார்.

எல்லோர் முகமும் அவர் விளக்கத்திலேயே இருக்கிறது.

அனிருத் லிண்டா மடியில் ஒரு மாதிரியான பார்வையோடு உட்கார்ந்தபடி இருக்கிறான். சோர்ந்து இருப்பதால் துறுதுறுப்பு அவ்வளவாக இல்லை.

தாத்தா தொடர்கிறார்.

"என் அண்ணா சந்திர மௌலீஸ்வரன் 1888ம் வருஷம் எட்டாம் மாசம், எட்டாம் தேதி, எட்டு மணிக்கு பிறந்தவன். அடேயப்பா எத்தனை எட்டு பார்த்தியா அவன் பொறப்புல?

அவன் பொறந்த அன்னிக்கு சரியான மழை காத்து வேற... அசுரன் ஜனிச்சாதான் இயற்கை இப்படி சத்தம் போடும்னு சொல்லுவா. அது உண்மையா இருந்தது.

எதுக்கு இதை சொல்றேன், பேரன் அனிருத்துக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்னு பாக்கறேளல...?"

அந்தக் கிழட்டு மனிதர் கேள்வி கேட்டு, சற்று இடைவெளி விடுகிறார். சுற்றி இருப்பவர்கள் முகத்தில் ஈயாட்டம் கூட இல்லை. ஆனால் லிண்டா கச்சிதமாக தனஞ்ஜெயன் காதைக் கடிக்கிறாள்.

"தன்... அனிருத்ஸ் பர்த் ஆல்ஸோ ஹேவிங் எ நம்பர் எய்ட் டாமினேஷன். 8-8-1988 சாடர்டே மார்னிங் எய்ட் ஒ கிளாக்...!"

தனஞ்ஜெயன் கண்ணில் புதுமின்னல். தாத்தா காரணமில்லாமல் கொள்ளுத் தாத்தா பற்றிப் பேசவில்லை என்கிற புரிதல் மெல்ல அவனுள் வலுப்பட தாத்தாவிடம் ஊன்றுகிறான்.

"என்ன, தனா... உன் பிள்ளை கூட எட்டாம் தேதி எட்டாம் மாசம் எண்பத்தி எட்டாம் வருஷம் பொறந்தவன் தானே...? அதுவும் காலைல எட்டு மணிக்கு...?"

தாத்தாவின் கேள்வி தனஞ்ஜெயனை நிமிர்த்தி தலையை ஆட்டச் செய்கிறது.

"அனிருத் வேற, என் அண்ணா சந்திரமௌலி வேற இல்ல தனஞ்ஜெயா. இவன் என் அண்ணன்." — தாத்தா சொன்ன சூட்டோடு அனிருத்தை பார்க்க, அனிருத்தின் கண்கள் இடுங்கின நிலையில் கொள்ளுத் தாத்தா சக்ரவர்த்தி ராஜ சாஸ்த்ரிகளை பார்க்கிறது.

"என்ன தாத்தா சொல்றேள். என்ன கணக்கு இது? நாங்க இவன் ரத்த வாந்திக்கும், ரத்தம் குடிக்கறதுக்கும் காரணம் தெரிஞ்சுக்கக் கூப்ட்டா நீங்க எது எதுக்கோ பதில் சொல்றேளே..."

தணிகாசலமூர்த்தி தடுமாறியபடி நடுங்கும் குரலில் கேட்கிறார்.

"எது எதுக்கோ பதில் சொல்றேனா? இவன் விஷயத்துக்கு தாண்டா சொல்றேன். அவன் சாகும் போது சொன்னது உங்க யாருக்காது ஞாபகம் இருக்கா?"

அந்தக் கேள்வி தணிகாசல மூர்த்திக்கு மட்டும் தான். ஏன் என்றால் அவர்தான் அப்பொழுது தாத்தா சந்திரமௌலி தலைமாட்டில் பத்து வயதுச் சிறுவனாக நின்று கொண்டிருந்தவர்.

"என்ன தணி... ஞாபகம் வரலையா?"



நிமிண்டுகிறார் சக்கரவர்த்தி தாத்தா. "ஞாபகம் இருக்கு... நம்ம தலைமுறைல யாரும் உறவு விட்டு வெளியே கல்யாணம் பண்ணிக்காதீங்கோ. மந்திர சாஸ்திரம் தெரியாத, அப்படின்னா ஏன்னன்னே புரியாத குடும்பத்தோட சாதாரண உறவு கூட வச்சுக்க வேண்டாம்னு சொன்னதா ஞாபகம்..."

"சபாஷ், அதேதான்... அதேதான் இப்ப சிக்கலுக்குக் காரணம்."

"என்ன சொல்றேள்...?"

"சொல்றதுக்கு முந்தி நீ ஒண்ணு கேட்டுக்கோ. உன் தாத்தா அப்ப என்ன பண்ணிண்டிருந்தார்?"

"அவர் ஒரு சக்தி உபாசகர் — அவ்வளவுதான் எனக்கு தெரியும்..."

"புடலங்கா — மிச்சத்த நான் சொல்றேன் கேட்டுக்கோ. அதுக்கு நீங்க எல்லாரும் அவரைப்பத்தி தெரிஞ்சுக்கணும்." தாத்தா தன் சகோதரன் பற்றி சொல்லக் களம் அமைக்கிறார். அனிருத் பொறுமை இழந்து லிண்டா மடியில் இருந்து எழுந்திருக்கிறான்.

"உக்காரு... எங்க போறே?" — லிண்டா அதட்டுகிறாள்.

"ஐ வான்ட் டு ப்ளே..." அவனிடமிருந்து ஒரு வரியில் பதில்.

"நோ... யூ டோன்ட் ப்ளே. யுவர் ஹெல்த் ஈஸ் ஸோ வீக்."

"நோ... ஐ வாண்ட் ப்ளே..." அவன் அழுத்தமாகச் சொல்லிவிட்டு சக்கரவர்த்தி தாத்தா அருகில் வந்து கழுத்தில் இருக்கும் அந்தத் தாயத்து மாலையைத் தொடக் கையை நீட்டுகிறான்.

அவர் பயந்து அந்த மாலையைக் கைகளால் பற்றியபடி சொல்கிறார்.

"அண்ணா தெரியும்ணா... ஜென்மம் கடந்தாலும் இதுமேல் உங்களுக்கு இருக்கற குறி போகலையே!"

# 4

கொள்ளுத் தாத்தா சந்திர மௌலீஸ்வரர் படம் தேடி எடுத்து வரப்பட்டிருக்கிறது. நடுக்கூடத்தில் அதை வைத்து மாலை போட்டு ஊதுபத்தி எல்லாம் ஏற்றி வைத்து...

முன்னால் ஒரு ஈஸிசேர் போட்டு அதில் சக்கர வர்த்தி தாத்தாவை உட்கார்த்தி வைத்திருக்கின்றனர்.

அவருக்கு முன்னால் பவ்யமாக ஒரு ஜமுக்காளம் விரித்து எல்லோரும் அமர்ந்திருக்கின்றனர். அனிருத் தனஞ்ஜெயன் மடியில் கியூப் ஒன்றுக்கு சொல்யூஷன் தேடியபடி...

"தேடியபடியே இரு மகனே — தாத்தா சொல் வதில் உனக்கு விடை இருக்கறதா பார்க்கிறேன்."

தனஞ்ஜெயன் தாத்தாவை தொண்ணூறு டிகிரிக்கு விலகாதபடி பார்க்கிறான்.

"தன்... வாட்ஸ் கோயிங் ஆன் ஹியர்?" — லிண்டா நைஸாக தனஞ்ஜெயன் காதைக் கடிக்கிறாள்.

"தாத்தா வான்ட்ஸ் டு டெல் எ ப்ரீவியஸ் ஹிஸ்டரி."

"தட் மீன்ஸ்..."



"மை கிரேண்ட் கிரேண்ட் ஃபாதர் வாஸ் எ மிஸ்டீரி யஸ் பர்சன். அவர் பத்திதான் சொல்லப் போறார்."

"எதுக்கு?"

"பொறுத்துப் பார்... போகப் போகத் தெரியும். உனக்குதான் இப்ப தமிழ் நல்லாப் புரியுதே."

தாத்தா சொல்ல ஆரம்பிக்கிறார்.

உபன்யாசம் செய்ய நினைப்பவர்கள் இப்படித் தான் முஸ்தீபுகள் செய்வார்கள். எல்லோருக்கும் அந்த ஞாபகம் வருகிறது.

சின்னத் தாத்தா பேச்சை தொடங்கும் முன் பெரிய தாத்தா புகைப்படத்தை ஒரு பார்வை பார்க்கிறார். பின் கைகூப்பல், நமஸ்காரம் என்கிற இத்யாதிகள்.

'சக்ரவர்த்தி செத்துட்ட பிறகும் நான் வாழ் வேண்டா. நீ பாக்கதான் போறே.' — அவர் சொன்ன தாக ஒரு குரல் அவர் காதில் ஓடி நுழைகிறது. அப் படியே நிமிர்கிறார். எல்லோரையும் ஆழமாக ஒரு பார்வை பார்க்கிறார்.

"சொல்லுங்க தாத்தா... எதுக்கு இத்தனை தாமதம்?"

"மணி என்ன?"

"நாலரை..."

"இன்னிக்கு ஞாயித்துக்கிழமை. நாலரை ஆறு ராகு காலம். என் அண்ணனைப் போன்ற உபாசகர்களைப் பற்றி சொல்ல இதுதான் சரியான சமயம்."

தாத்தாவின் பதிலில் இன்னொரு ஆச்சரியம்.

"ராகு காலம் ஆகாதும்பாங்களே..."

"அது நல்ல விஷயம் பேச."

"அப்ப நீங்க பேசப் போறது கெட்ட விஷயமா?"

"இப்படி நேரா கேட்டா எப்படி?"

"சரி தாத்தா... எனக்கு இதுக்குமேல தாங்காது. விஷயத்தைச் சொல்லுங்க."

"சொல்றேன். சின்ன வயசுல சந்திரமௌலிக்கு பள்ளிக்கூடப் படிப்புல இஷ்டமேயில்லை. அப்பல்லாம் பள்ளிக்கூடம்னா இப்ப மாதிரியா... ஆத்தங்கரை ஈர மணல்வெளிதான் எங்க பள்ளிக்கூடம். மணல்ல எழுதி எழுதி வாசிப்போம். இதோ இந்த ஆள்காட்டி விரல் இருக்கே இது தேய்ஞ்சு போற அளவு..."

தாத்தா பேசப் பேச எரிச்சல் பீறிடுகிறது தனஞ்ஜெயனுக்கு. சொல்ல வேண்டிய முக்கியமான விஷயத்தைவிட்டு அவர் வெளியே போய் விடுவதால் வரும் எரிச்சல் அது.

"தாத்தா சட்டுன்னு சொல்றீங்களா? நான் கதை கேட்க வரலை."-- தனஞ்ஜெயனின் திடீர் கோபம் எல்லோரையுமே உசுப்புகிறது. பெரிய தாத்தாவும் கொத்தப்பட்ட மாதிரி நிமிர்கிறார்.

"என்னடா சொன்னே?"

"கதை கேட்க வரலை. அனிருத் நல்லபடியாகணும் அதுக்கு வழி சொல்லுங்க."

"அதுக்குதானே பேச்செடுத்தேன்."

"நீங்க பாடசாலை படிச்சது எழுதினதெல்லாம் யார் கேட்டா?"

"அதுக்கும் என் பேரனுக்கும் தொடர்பு இருக்குடா..."

"என்ன தொடர்பு?"



"எல்லோரும் ஆனா, ஆவன்னா எழுதினா என் அண்ணா கோலம் போட்டுண்டு இருப்பான்."

"கோலமா?"

"ஆமா...கோலம்னா என்ன கோலம்னு நினைச்சே, எந்திரக் கோலம்...!"

"அதுக்கென்ன?"

"அதுக்கென்னவா... அடேய் அமெரிக்க பிரபு, எந்திர கோலங்கள் பத்தி என்ன நினைச்சே நீ. அது உன் அணுசக்தியை விட சக்தி படைச்சது."

"புரியல எனக்கு?"

"நம்ம சாஸ்த்ரத்துல யந்திர வழிபாடுன்னு ஒண்ணு இருக்கு — அதாவது தெரியுமா உனக்கு?"

"தெரியாது."

"அப்படிப் போடு. உன்னைச் சொல்லிக் குத்தமில்லை. உன் அப்பா அம்மாவுக்கு தெரிஞ்சாதானே உனக்கு அவங்க சொல்ல..." பெரிய தாத்தா, சங்கர நாராயணனையும் — பிரகதாம்பாளையும் பார்க்கிறார். அவர்கள் தலையை தாழ்த்திக் கொள்கின்றனர்.

"சரி இப்ப சொல்றேன் கேட்டுக்கோங்கோ. யந்திரம்கறது ஒரு மகா சாதனம். ரொம்ப நுட்சமமானது. எங்கேயோ தயாராகற மின்சாரம் செம்புக்கம்பி வழியா வந்து வீட்ல விளக்கா எரியறமாதிரி தெய்வ அனுக்ரகம் யந்திரத் தகட்டுல பட்டு பிரதிபலிச்சு, அது இருக்கற வீட்டையே வாழ வைக்குது.

அப்படிப்பட்ட யந்திரங்கள்ள பல தினுசு உண்டு. யந்திரங்களை வெச்சு நல்லதும் செய்யலாம், கெட்டதும் செய்யலாம்.

என் அண்ணாவும் உங்க கொள்ளுத் தாத்தாவுமான சந்திர மௌலீஸ்வரய்யர் அதுல மகா மேதையா விளங்கினார். டாக்டராவேன் எஞ்ஜினியராவேன்னு சொன்னவாளுக்கு நடுவுல, நான் பெரிய உபாசகன் ஆவேன்னு சொன்னவர். அவர் சொன்ன மாதிரி ஆகியும் காட்டினார். தன் யந்திரங்களுக்கு பூஜை செய்து அவர் எமதர்மனையே பிடிச்சு இழுத்துக் கட்டி வெச்சிருந்தார்...''

தாத்தா முடிக்கும் முன்னையே சிரித்து விடுகிறான் தனஞ்ஜெயன்.

''எதுக்கு சிரிக்கறே...''

''வேண்டாம். உங்களுக்கு கோபம் வரும். நான் கிளம்பறேன். நீங்க உங்க கதையை இவங்களுக்கு சொல்லுங்க. கமான் விண்டா.''

—தனஞ்ஜெயனின் புறப்பாடு எல்லோருக்குமே அதிர்ச்சி தருகிறது.

''தனா... என்னடா இது முஞ்சில அடிச்சமாதிரி...''

''முஞ்சியிலையும் அடிக்கலை, முகரைலையும் அடிக்கலை. எங்களுக்கு என்ன அம்புலி மாமா கதை கேக்கற வயசா? இந்தக் குடும்பத்துல மிச்சமிருக்கற ஒரு பெரியவர், நாலு விஷயம் தெரிஞ்சவர் நல்லது சொல்லி அனிருத் சிக்கலுக்கு வழிகாட்டுவார்னு பார்த்தா எமதேவனையே பிடிச்சு வெச்சவர்னுல்லாம் சொல்லிண்டு...''

''ஏன் உன்னால நம்ப முடியலையா?''

''நம்ப முடியலையாவா... எப்படிம்மா இப்படி கேக்கறே? ஒவ்வொரு நாளும் குறைஞ்சது லட்சம் பேர் பிறக்கறாங்க — லட்சம் பேர் இறக்கறாங்க. அதுவும் ஒரே சமயத்துல. அத்தனை பேர் கழுத்துலையும் பாசக் கயிறு போட்டு ஒரு எமன் இழுத்துக்கிட்டு போறது சாத்யமா...? அதுலையும் அப்படிப்பட்டவனை இவர் பிடிச்சு வெச்சுக்கிட்டா உங்க தியரிப்படியே அவர் மாட்டிக்கிட்டிருக்கிற நிமிஷத்துக்கு சாவே உலகத்துல நடக்காதுன்னு அர்த்தம் ஆறது.



கொஞ்சமாவது நம்பும்படி இருக்கா...? என்ன ஒரு இடியாட்டிக் இல்லாஜிக். யந்திரமாம் — எமனாம்... கட்டி வெச்சுருந்தாராம்... இந்தக் கதை கேட்க எனக்கு விருப்பமில்லம்மா...

இந்தியான்னாலே அமெரிக்கால என்ன இமேஜ் தெரியுமா? — எல்லோரும் பார்க்க ''இது ஒரு ஏமாத்துப் பேர்வழிகளோட சாம்ராஜ்யம். பாம்பாட்டிகள்தான் இங்க அதிகம்னு பேசிக்கறாங்க. கூடவே, குடிக்க தண்ணி கிடைக்காத ஊராமே...? வெட்டவெளியில டாய்லெட் போவிங்களாமேன்னும் கேள்விகள். எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கலாமான்னு இருக்கும். அதோட 'இது ஒரு பொய் சொல்லிகள் ராஜ்யம்'னும்னு சேர்த்துக்க வேண்டியதுதான். கமான் விண்டா — கமான் அனிருத்...''

படபடவென்று பொறிந்து தள்ளிவிட்டுக் கிளம்புகிறான் தனஞ்ஜெயன். வேறு வழியின்றி அவனைப் பின் தொடர்கின்றனர் விண்டாவும்— அனிருத்தும்... அனைத்தையும் பார்த்துவிட்டு தாத்தா ஒரு வார்த்தை மட்டும் சொல்கிறார்.

''சங்கரநாராயணா... தணிகாசலமூர்த்தி, என்னை மன்னிச்சிடுங்கடா உங்க குலக்கொழுந்தை என்னால காப்பாத்த முடியாது. அவன் என் அண்ணாபோல மந்திர உலகம் போகப் போறான்...''

''ஐய்யோ தாத்தா என்ன இது அபசகுனமா...?''

''நான் என்னடா பண்ணட்டும்? அவன் அப்பனுக்கு நான் சொல்றத கேட்டுக்கற பொறுமை இல்லை,

விஞ்ஞானம் பேசறான். அவன் பொறப்பு பத்தி எல்லாம் அவன் என்ன நினைக்கறான்னு தெரியல. அவன் எத நினைச்சாலும் சரி, அவன் பிள்ளை— அதாவது நம்ம பேரப்பிள்ளை என் அண்ணாபோல அந்த இடம் நோக்கி போவான்.

அதோட அறிகுறிதான் ரத்த வாந்தி— ரத்தம் குடிக்கறது எல்லாம். பெத்தவனுக்கும் கேட்டுக்கற பொறுமை இல்லை. ஒருவேளை பட்ட பிறகு வரும்னா அப்படியே நடக்கட்டும். அப்பதான் சரிப்படும்...''

''அவன் கிடக்கட்டும். எங்க கிட்டையாவது சொல்லலாமே...''

''சொல்றேன் நீங்களும் நம்பினாலும் சரி, நம்பலேன்னாலும் சரி. ஆனா நான் சொல்லப் போறதெல்லாம் சத்யம்.''

''சொல்லுங்கோ...''— அவர் சொல்லத் தயாராகிறார். நடுவில் கொஞ்சம் கேரளத்து கண்ணனூர் பக்கமுள்ள பஞ்சாரா வரை போய் வரலாமா?

# 5

பஞ்சாரா!

கேரளத்து கிராமம்.

தமிழகத்து கிராமங்களில் ஆறு ஓடினால் இங்கு கடல்! வயலும், நெல்லும் தமிழக கிராமங்களில் முக்கிய பங்கு என்றால், கடலும் மீனும் இங்கே முக்கிய பங்கு. கரை ஓரமாக அலைக் கூத்து நடந்து கொண்டிருக்கிறது. வண்டு விளையாட்டும் நுரைப் பூ தேக்கமும் வழக்கம் போல்...



அவ்வளவாக ஜன நடமாட்டமில்லை. வலசம்மாவும் அவள் மகன் கிறிஸ்டோபரும் ஆளுக்கொரு கூடையுடன் மீன் அள்ளிச் செல்லத் தோதாக வந்தபடி உள்ளனர்.

பௌர்ணமி நிலா ஏற்றத்தால் நேற்று அலை ஒரு ஃபர்லாங் தள்ளி இருந்தது. இன்று உள்ளடங்கிக் கிடக்கிறது. இதனால் கடல்வெளி மேல் தெரியும் ஒரு சின்ன தென்னந்தோப்பை நன்கு பார்க்க முடிகிறது.

இருவரும் அந்தத் தோப்பு நோக்கி தண்ணீரில் இறங்கி நடக்கின்றனர். மார்பளவு தண்ணீர்! அவர்கள் நடக்க நடக்க அது கூடவும் இல்லை, குறையவும் இல்லை.

தெரிந்துதான் நடக்கின்றனர்.

அவ்வப்போது சில பொல்லாத அலைகள் முகம் வரை வந்து மோதினாலும் அவர்கள் பயந்த மாதிரித் தெரியவில்லை. பழக்கம்.

தென்னந்தோப்பின் வேரோடிய நிரடலான கரையும் வந்துவிட்டது. ஏறுகிறார்கள். உள் நடக்கிறார்கள். கிட்டத்தட்ட ஆயிரம் தென்னை இருக்கும். நிறைய காய்ந்த மட்டைகள் விழுந்தும், உரிச்சட்டை விழுந்தும் ஒரே குப்பைக் கூளமாக கிடக்கிறது தரைப் பரப்பு.

கிறிஸ்டோபர் கூடையைக் கீழே வைத்துவிட்டு அண்ணாந்து தென்னையைப் பார்க்கிறான்.

''அம்மே இளநீர் பறிக்கட்டுமா?''— கேட்கிறான்.

''பாத்து பறிக்கணும்...''— அவள் சொன்னபடி அந்தத் தீவுத் தோப்பின் ஈசான்ய பாகம் நோக்கி நடக்கிறாள். அங்கு முதல் நாள் பிடித்த மீன்களை வரிசையாகத் தரையில் பரத்திக் காய வைத்திருக்கிறாள்.

சிறியதும் பெரியதுமான மீன்கள். என்ன காரணத்தாலோ மறந்துபோய் ஒரு கூடை நிறைய மீன்களை உலரப்போடாமல் தென்னை மரத்தின் அடித்தண்டின் கீழ் வைத்துவிட்டுப் போனது அதை பார்க்கவும் நினைவுக்கு வருகிறது.

தலையிலடித்துக் கொண்டு மீன் கூடையை நோக்கி செல்பவள் கூடையை கீழே கொட்டிக் கவிழ்க்கிறாள்.

பாதி உலர்ந்ததும் உலராத மீன்களின் நாற்றத்தோடு மொத்த மீன்களும் தரையில் பரவ ஒரு மீனின் வயிற்றுப் பாகம் மட்டும் சற்று பருமனாகத் தெரிகிறது. கையால் அழுத்திப் பார்க்கிறாள். திடமாக இருக்கிறது. இடுப்பிலே செதில் வெட்டுக் கத்தி வைத்திருக்கிறாள். அதால் வயிற்றுப் பாகத்தை கிழிக்கிறாள். அறுபடும் சதைபாகத்தை விலக்கி உள்ளே பார்த்தபோது ஒரு குழாய்போல ஒன்று கையை நெருடுகிறது. நெம்பி வெளியே எடுக்க அந்தக் குழாய் ஒரு தகட்டின் சுருட்சி என்பது புரிகிறது.

ஆர்வமாக விரிக்கிறாள். ஏதோ யந்திரத் தகடு! உள்ளே புரிந்துகொள்ள முடியாத கோலம்.

என்ன இது? இதை எப்படி மீன் விழுங்கியிருக்க முடியும்? சமயங்களில் பாலிதீன் பையை விழுங்கிய மீன்கள் அகப்பட்டிருக்கின்றன. கடல் பயணிகள் தின்றுவிட்டுப் போட்ட பைகளை தவறிப்போய் விழுங்கி ஜீரணமின்றி திணறும் மீன்கள் சுலபமாக வலையிலும் அகப்படும். சமையலுக்காக அவைகளை அரித்தெடுக்கும்போதுதான் நிரடி வெளிப்படும்.

ஆனால் இத்தனை வருட கடலாட்ட வாழ்வில் ஒரு செப்புத் தகடு விழுங்கிய மீனை அவள் பார்த்ததில்லை.



இன்றுதான் பார்க்கிறாள். அந்தத் தகடும் அவளை என்னவெல்லாமோ யோசிக்க வைக்கிறது. கையில் பார்த்தபடியே திரும்பி நடக்கிறாள்.

''கிறிஸ்டோபர் கிறிஸ்டோபர்''— குரல் இளநீர் பறிக்க கைகளை விசைக்கும் கிறிஸ்டோபரை மேலிருந்தே கீழே பார்க்கச் சொல்கிறது.

''நோக்கடா இவ்விட... தகடு.''— கீழிருந்தே தகட்டை காட்ட அதில் சூரியக் கதிரின் சந்திப்பு நிகழ்கிறது. ஒரு வெளிச்சக் கூட்டம் உருவாகிறது.

''எந்தா அது...?''

''மீன் வயத்துக்குள்ள இருந்ததுடா. எனக்கு ஒண்ணும் புரியலை.''— அவன் மர உச்சியில் இருந்துகொண்டே ஒரு கையால் தாடையை யோசனையோடு வருடும்போதுதான் நடக்கக் கூடாத அந்தச் சம்பவம் நடக்கத் தொடங்கியது. அவன் பாதி வெட்டிய தென்னங்குலை அப்படியே முழுவதுமாய் பிய்ந்து வலசம்மாவின் தலை நோக்கி விசையுடன் இறங்கத் தொடங்கியது.

அவள் நகர நினைப்பதற்குள் உச்சந்தலைமேல் விழுந்து அவளை ஓங்கியும் அலற விட்டது.

''அம்மே...'' கிறிஸ்டோபரும் அதிர்ந்து பிடியைவிட அப்படியே மேலிருந்து கீழே உதிர்கிறான்.

விழுந்த வேகத்தில் எலும்புக் கூட்டு பாகம் மொத்தமும் நொறுங்க, அசையக்கூட வகையின்றி உயிரை விடுகிறான்.

அருகிலேயே வலசம்மாவும் பிணமாக! அந்த விரிபட்ட கைக்கடக்கமான யந்திரம் எகிறி ஒரு தென்னை மரத்தடியில் வேர்த்தண்டை ஒட்டிக் கிடக்கிறது.

கள்ளிக்கோட்டை!

வீதிக்கு நான்கு பல்கலைக் கழகம் உள்ள கல்லூரி நகரம். நைட் கிளப்புகளுக்கும் பஞ்சமில்லை. ஒன்றின் முன் ஒய்யாரமாக காரில் இருந்து இறங்குகிறார் ராகவன் குட்டி நாயர்.

கிளப்புக்குள் நுழைபவர் ஒரு சீட்டாட்ட கோஷ்டி முன் சென்று அமருகிறார். அவரைப் பார்க்கவும் ஒவ்வொருவராகக் கழன்று கொள்ளப் பார்க்கின்றனர்.

"உக்காருங்கடா எங்க கிளம்பிட்டீங்க?"

"இல்ல... நாங்க வரோம்— உங்ககூட ஆட எனக்கு விருப்பமில்லை."

"ஏண்டா..."

"எப்ப ஆடினாலும் நீதான் ஜெயிப்பேங்கறது எங்களுக்கு நல்லாத் தெரியும். அதனாலதான் சொல்றோம் வேண்டாம்."

"பேடிங்களா... புத்தியக் காட்டுங்கடா. அதை விட்டுட்டு பயந்தா என்ன அர்த்தம்...?"

"தலைவா உனக்கொரு பெரிய கும்பிடு. கிளம்புறியா? இந்தக் காலிகட்ல உன்னைப் பத்தி தெரிஞ்ச ஒருத்தனும் உன்னோட சீட்டாட வரமாட்டான்."

அவர் நின்று நின்று பார்த்துவிட்டு வெளியே வருகிறார். கைவசம் ஒரு மினி சூட்கேஸ். அது நிறைய லட்சத்துக்கும் கூடுதலான தொகை.

டிரைவர் அவரை சற்று கேலிச் சிரிப்புடன் பார்க்கிறான்.

"என்ன முதலாளி யாரும் ஆட வரமாட்டேங்கறாங்களா... இந்த ஊர்ல ஆட முடியாது. தலைச்சேரி போகலாமா?"



"சரி எடு..."

தலைச்சேரி

ஃபைவ் ஸ்டார் கிளப் முன் கார் நிற்கிறது. இறங்கி உள்செல்கிறார் ராகவன் குட்டி நாயர். கோல்ட் ஸ்பெக்ஸ் கண்ணாடி! சந்தனக் கலர் ஜிப்பா, அர்விந்த் மில் வேட்டி! நடையில் பணக்கார பவிசு.

ஒரு டேபிளில் ஆட்டம் களை கட்டிக் கொண்டிருக்கிறது.

நூறு, இருநூறு என்று சில்லறையில்...

பார்ப்பவர் கண்களில் கேலி வழிகிறது.

"பெரிய கேம் போடலாம்னு பாக்கறேன். யார் இருக்கா?"

"பெரிய கேமா... எவ்ளோ?"

"லட்சம் வரை நான் தயார்..."

"லட்சம் வரையா... பைத்தியமாய்யா நீ?"

"அது என்கிட்ட தோக்கறவனுக்கு பிடிக்கப் போற சமாச்சாரம்."

"அவ்வளவு நம்பிக்கையா?"

"ஆமா... நான் காலிகட் சூதாடி. எதுக்கும் அஞ்சாத ஊர்க்காரன்."

"தலைச்சேரிகாரனை என்ன நினைச்சே— பேடின்னா...?"

"இல்லன்னா ஆட வாங்க... பாத்துடுவோம்."

பேச்சின் சூடு ஆட்டத்துக்கு தாவுகிறது. ஒருவன் கழுத்துச் சங்கிலியில் இருந்து இடுப்பு வேட்டிவரை வைத்து இழக்கிறான்.

ராகவன் குட்டி நாயரை பார்த்து மிரள்கிறான்.

சீட்டுக் கட்டு சொன்னபடி கேட்கிறது.

நடுநடுவே கை புஜத்தில் கட்டப்பட்டிருக்கும் தாயத்துப் பக்கம் மட்டும் செல்லத் தவறவில்லை.

அதை கவனிக்கும் ஒருவன் இன்னொருவனிடம் சொல்கிறான். "டேய் இவன் ஒரு மாயக்காரன். கைல பார்த்தியா தாயத்து. அதை தொட்டு தொட்டுப் பார்த்துக்கறான்."

"அதை கழட்டி வச்சுட்டு ஆடச் சொல்வோமா?"

"சொல்..."

"ஏய் காலிகட்... என்ன நீ தாயத்தையே தொட்டுத் தொட்டு பாக்கறே? அது இருந்தா நாங்க இனி உன்கூட ஆடமுடியாது. அதுல ஏதோ விஷயம் இருக்கு..."

ராகவன் குட்டி நாயர் முகம் மாறுகிறது.

"அது... அதுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை."

"இல்லைல்ல... அப்ப கழட்டு."

"முடியாது... விளையாட இஷ்டமிருந்தா ஆடு. இல்லாட்டி விடு. அதவிட்டுட்டு தாயத்த கழட்டு— கழட்டுன்னா என்ன அர்த்தம்?"

"நீ பெரிய கைகாரன்னு அர்த்தம்." — பேச்சு வளர்ந்து முற்றி கைகலப்பில் முடிகிறது. அந்த கைகலப்பில் ஒருவன் தாயத்தை அவரிடமிருந்து பறிக்கிறான்.

உள்ளங்கையில் வைத்து, உற்றுப் பார்த்து அதன் பக்கவாட்டு மூடியைத் திறக்க, சுருண்டுகிடக்கும் ஒரு சக்கரம் தெரிகிறது. எடுத்து திறக்கிறான். அதில் சில



எழுத்துக்களை அவனால் படிக்க முடிகிறது. 'குபேர யந்திரம்' என்று எழுதப்பட்டிருக்கிறது.

"அதே... அதே... எடோய் இந்த யந்திரம்டா இவன் நம்மை ஜெயிச்ச காரணம்! நோக்கு... நோக்கு..." அவன் எல்லோரிடமும் காட்டுகிறான்.

ராகவன் குட்டி நாயர் தப்பித்தால் போதும் என்று வெளியே வருகிறார். காரை எடுத்துக் கொண்டு கிளம்புகிறார்! ஊஹூம் பறக்க ஆரம்பிக்கிறார்!

# 6

சக்ரவர்த்தி ராஜ சாஸ்திரிகள் விவரித்துக் கொண்டிருக்கிறார். "சுத்தமான செப்புத் தகட்டை எடுத்து வடக்கு பார்த்து உட்கார்ந்து, சப்த மந்திரங்களை சரியா உள் வாங்கி அதை செப்பு முனை ஊசியால் அந்தத் தகட்டுல எழுதி – சக்கரத்துக்கு உகந்த கோலம்' போட்டு ஒரு மண்டலம் முதல் மூணு மண்டலம் வரை பூஜைல வெச்சு சந்திர மௌலி உருவேத்துவான் பாருங்கோ... அதை பார்க்கப் பார்க்க நமக்கே பயமா இருக்கும். சோறு தண்ணி இல்லாம ஒட்டின வயித்தோட உலர்ந்த உதட்டோட அவன் சக்கரங்களுக்கு மந்திரம் சொல்லி உருவேத்தற காட்சி இப்பவும் என் ஞாபகத்துல இருக்கு. அதுல ஒண்ணுதான் மகாருத்ர யந்திரம்!"

தாத்தா பேச்சை நிறுத்திவிட்டு துளி தண்ணீர் குடிக்க முனைகிறார். இன்னமும் அவர் அனிருத்தின் ரத்தப் பசிக்கான காரணத்துக்கு வந்திருக்கவில்லை.

இருந்தாலும், தன் முன்னோரில் ஒருவரானவர் இப்படி வித்தியாசமான ஒரு மனிதராக இருந்திருக்

கிறார் என்கிற தகவலே அவர்களுக்கு மிகப் புதிதாக ஆச்சரியமாக அதிர்ச்சியாக எல்லாமுமாக இருக்கிறது.

"இன்னொரு யந்திரம் தனாகர்ஷண யந்திரம். குபேர மந்திரம் சொல்லி உருவாக்கற யந்திரம். தகட்டு முனைல வடக்கு பாகம் கூர்மையா இல்லாம மழுங்கி இருக்கும். சரியான அளவு சதுரத்தகடு எடுத்து, அதுக்குன்னு உரிய கோலம் ஒண்ணு இருக்கு. அதைப் போட்டு அதுல குபேரமந்திரத்தை பொறிக்கணும். பின்னே மந்திர சப்த அலைகளை ஓதி ஓதி அதுமேல படிய வைக்கணும். அப்படி படிஞ்ச தகடு யார் கிட்ட இருக்கோ அவங்களை நோக்கி செல்வம் சேரும். அவர்கள் எதைத் தொட்டாலும் வெற்றிதான். தோல்வியே அவர்கள் அகராதிக்கு கிடையாது."

"மகாருத்ர யந்திரம் பற்றி சொல்லிட்டு தனாகர்ஷண யந்திரத்துக்கு போயிட்டீங்களே... அந்த ருத்ர யந்திரம். எதுக்கு... அது என்ன செய்யும்?" — சங்கர நாராயணன் சுவாரஸ்யவசப்பட்டு கேட்கிறார்.

"அது மட்டும் உரிய முறைல இருக்கணும். இல்லேன்னா தொலைஞ்சுது. அண்ணா அதை ஒரு கோயிலுக்காக செய்தான். மகா காளி கோயில் பீடத்துல வைக்கறதுக்காக செய்த அதை கடைசில கோயில் பீடத்துல வைக்கலை. அது எங்க போச்சோ யார்கிட்ட இருக்கோ தெரியாது. ஆனா ஒண்ணு, அது எங்க இருந்தாலும் பூஜைநேத்ரங்கள் இருந்தா சாகக்கிடக்கறவனையும் பிழைக்க வைக்கும். இல்லேன்னா அது உயிரையே வாங்கிடும், அப்படி ஒரு சக்தி அதுக்கு..."

"எல்லாம் சரி... அனிருத் ரத்த வாந்தி எடுக்க என்ன காரணம்னு சொல்லலியே..."

"சண்டி முண்டி வேலை அது. அண்ணா செய்த ரொம்ப விசேஷமான யந்திரம் அது. இதை அண்ணா



செய்யும்போது, அண்ணா தரையில் இல்ல, வானத்துலையும் இல்ல..."

சக்ரவர்த்தி தாத்தா விளக்கம் அனைவரின் பொட்டிலும் சூட்டைப் பொறிக்கிறது... "ரொம்ப கஷ்டமான யந்திரம். தண்ணிக்குள்ள மூழ்கி தரையைத் தொடாம காற்றும் படாத நிலைல நீர்ல நீந்தினபடி அந்த யந்திரத்தை வரைஞ்சு வெளியே எடுத்து வந்து அதன் மேல வீரபத்ரர் சிலையை பிரதிஷ்டை பண்ணி அண்ணா தினம் பூஜை செய்து வந்தார்."

"எங்க வெச்சு?"

"நம்ம குலதெய்வமான சாரதாம்பாள் கோயில்லதான்."— அப்பொழுதுதான் அவர்களுக்கு குலதெய்வம் என்று ஒன்று இருப்பதும், அதை பல வருஷங்களாக மறந்து போய்விட்டதும் ஞாபகத்துக்கு வருகிறது.

"இப்ப அங்க இருக்கா?"

"நிச்சயமா இருக்கணும். வீரபத்திரர் மட்டுமில்ல... ரத்த சண்டி, பாணா முனி, வஜ்ர பேரி, அமிர்த வர்ஷினின்னு அண்ணா பல விசேஷ தேவதா யந்திரங்களை செய்து பூஜை செய்து வந்தார். அதுல வீரபத்திரர் யந்திரம் மட்டும் ஒரு மண்டல வருஷம் பூஜை நேத்ரம் இல்லேன்னாலும் சக்தி இழக்காது. மற்றதெல்லாம் சக்தி இழந்திருக்கும்.

சக்தி இழக்காத சண்டி முண்டியை வீரபத்திர விக்கிரகம்தான் கட்டி வெச்சுருக்கு. அந்த விக்கிரகம் விலகி இருந்தாலோ, இல்லை பழுதாயிருந்தாலோ சண்டி முண்டிக்கு விடுதலை கிடைச்ச மாதிரி.

அது தன் சக்தியைக் காட்டி எஜமானனைத் தேடி வரும்.

எனக்கு பூஜை செய்யுன்னு சொல்லும். செய்யாத வரை விடாது. ரத்தமா கக்க வைக்கும், சமயங்கள்ல குடிக்கவும் வைக்கும்.

அண்ணா மரணிச்சுட்டான். அவன் யந்திரம் மரணிக்கலை. அது தன் எஜமானனைத் தேடிப் போனதுல அகப்பட்டவன்தான் அனிருத்.''

''அதான் அனிருத்த பார்த்து அண்ணா சந்திர மௌலீன்னு சொன்னீங்களா?''

''ஆமாம். அனிருத் அண்ணாவோட இன்னொரு பிறப்புன்னும் சொல்லலாம். அந்தப் பிறப்புல அண்ணா கைவிட்ட எந்திர வித்தைகளை இந்தப் பிறப்புல செய்ய விரும்பலாம்.''

''அவன் இருக்கறது அமெரிக்காவுல. படிக்கறது கம்ப்யூட்டர் சைன்ஸ்!''

''புடலங்கா. எங்க இருந்தாலும் அவன் தளம் இங்க தான் இருக்கு. கடைசில அதுதான் ஜெயிக்கும்...''

''அப்படின்னா?...''

''இப்படியே விட்டா அனிருத்தும் அண்ணாபோல யந்திர மேதையாவான். ஏட்டுக் கல்வி படிக்க மாட்டான்.''

''ஐய்யய்யோ... இந்தக் காலத்துக்கு அதெல்லாம் சரிப்பட்டு வருமா?''

''எந்த காலமா இருந்தா என்ன?... பெண்தானே பிள்ளை பெக்கறா? நீர்தானே தாகம் தீக்கறது... இதெல்லாம் மாறிடுத்தா என்ன?''

தாத்தா சொல்லி முடித்து விட்டார். அது எந்த அளவு சரியானது, நிதர்சனமானது தெரியலியே?



எல்லோர் முகமும் கலங்கி விட்டிருக்கிறது. என்ன சொல்வது என்பது தெரியாத குழப்பம் பரவிக் கிடக்கிறது. இதற்கு நடுவே தடவித் தடவி சங்கரநாராயணன் கேட்கிறார்.

''தாத்தா... எல்லாம் சரி— அனிருத் நல்லபடியா அமெரிக்கா கிளம்பணும். அவனோட ரத்த வியாதி தீரணும்— டாக்டர்கள்லாம் புதிரா இருக்குங்கறா. நீங்க வழி சொல்லுங்கோ. என்ன பண்ணணும்?''

''முதல்ல குலதெய்வம் சாரதாம்பாளை போய் சேவிங்கடா! அப்புறமா குலதெய்வத்துக்கு மொட்டை போடுங்கோ. அப்படியே அந்த வீரபத்திரசாமி விக்ரகத்தோட நிலையைப் பாருங்கோ. ரொம்ப ஜாக்ரதையா செயல்படணும்.

எனக்கு தெரிஞ்சு அந்த தேவதா சொருப அறையை அண்ணா பூட்டி வெச்சிருக்கான். அதைத் திறக்கவே திறக்காதீங்கோன்னு சொல்லியிருக்கான்.

இப்ப இவ்வளவு ஆன பிறகு அதைத் திறந்து பார்க்கறதுல தப்பு இல்லைன்னு தோணறது. பாருங்கோ. வீரபத்ரசாமி சிலைக்கு எதாவது ஆகியிருந்தா சந்தேகமே படாதீங்கோ. சண்டிமுண்டிதான் அனிருத்தை பிடிச்சிருக்கு. அனிருத்கிட்ட இருந்து சண்டி முண்டிய பிரிக்கறதுக்கு இன்னொரு உபாசகன் தான் வரணும். ஞாபகமா அப்ப அந்த சண்டி முண்டி யந்திரத்தையும், மற்ற விக்ரகத்தையும் எடுத்துண்டு வந்துடுங்கோ. மிச்சத்த நான் பாத்துக்கறேன். ரொம்ப முக்கியம், முடி எடுக்கற அன்னிக்கு இரவு தனஞ்ஜெயன் குடும்பத்தோட கோயில்ல தங்கணும். என்ன ஆனாலும் பயப்படக் கூடாது.''

அப்பாடா! தாத்தா ஒரு வழி சொல்லி முடித்து விட்டார்.

# 7

மாடியில் ஏ. சி. அறை!

சுவற்றில் அருவி பாயும் ப்ளோ அப் போஸ்டர்.

பார்த்தபடி அனிருத்தை வருடிக் கொண்டு படுத்திருக்கிறாள் லிண்டா. உள்ளே வருகிறான் தனஞ்ஜெயன்.

''தாத்தா என்ன சொன்னாராம்?''— மிக ஷார்ப்பாக கேட்கிறாள்.

''பொழப்பென்ன, எல்லாம் ஒரே பேத்தல்...''

''வாட்ஸ் தட்?''

''அனிருத்த ஒரு டெவில் பிடிச்சிருக்காம். அதுக்காக குலதெய்வத்துக்கு பூஜை போடணுமாம்.''

''குலதெய்வம்?''

''ஹிந்துஸ்க்கு ஃபேமிலி காட்னு பர்சனலா ஒண்ணு உண்டு.''

''இட்ஸ் பெக்கூலியர்.''

''ஆமா லிண்டா... இங்க எல்லாமே பெக்கூலியர். எனக்கு ஒண்ணும் புரியல. நமக்கு மேல ஒரு சக்தி இருக்கு. தட்ஸ் ஆல்! ஆனா யந்திரம், மந்திரம், தந்திரம்லாம் என்னன்னு தெரியல. தகடு கோலம்னு தாத்தா அடிச்சு விட்ருக்கார்.''

''அவ்வளவு பெரியவர் பொய் சொல்வாரா என்ன...?''

''நான் அப்படி சொல்லலை லிண்டா. இங்க சில பைத்தியக்காரத்தனங்கள் உண்டு. ஒரு கல்லுக்கு



பொட்டு வெச்சு, பூ போட்டு, நீ நாலு தடவை கும்பிட்டுட்டா, அதை பாக்கறவங்களும் அப்படியே செய்ய ஆரம்பிச்சிடுவாங்க. யோசிக்க மாட்டாங்க...''

''ஏன் இப்படிப்பட்ட ஜனங்க அமெரிக்கால இல்லையா? லாஸ்வேகாஸ்ல கோஸ்ட் கிளப் இருக்கே... நியூயார்க் லியன்ஸ்ல ஜீசஸ் டெய்லி வந்து பேசி, புனித நீர் தந்துட்டு போறார்னு சொல்றவங்க இருக்காங்களே...''

''இருக்காங்கதான். சரி நீ என்ன சொல்றே? தாத்தா சொன்னபடி செய்வோம்கறியா?''

''தாத்தா என்ன சொன்னார்?''

''எங்க குலதெய்வ கோயிலுக்குப் போய் மொட்டையடிக்கணுமாம். அங்க இருக்கற திறக்காத அறைக் கதவைத் திறந்து பார்க்கணுமாம். அனிருத் மேல சண்டிமுண்டி இருக்காம்...''

''யார் இந்த சண்டி முண்டி?''

''அரக்க தேவதைகள்.''

''இவங்க எதுக்கு நம்ம அனிருத் மேல இருக்கணும்?''

''நல்ல கேள்வி. நம்ம அனிருத் என் கிரேண்ட் ஃபாதரோட அம்சமாம். அவர் பூஜை செய்து வெச்சிருந்த சக்திகளாம் இவங்க...''

''ஓ... எவ்வளவு விஷயங்கள்! இதெல்லாம் ஹைலி ஃபாண்டசியாதான் இருக்கு தன்.''

''அதான் என் அபிப்பிராயமும். ஆனா அம்மா, தாத்தா சொன்னபடி செய்தாகணும்கறாங்க...''

லிண்டா உடனேயே யோசிக்க ஆரம்பிக்கிறாள். அனிருத் தூங்கிவிட்டிருக்கிறான். பார்க்க அழகுப் பதுமையாக இருக்கிறான். இவன் மேலா டெவில்ஸ் இருக்கின்றதா? நோ... நோ... இவனுக்கு வேறு ஏதோ நோய்... நாம் தப்பான பாதையில் போய் கொண்டிருக்கிறோம்."

அவளது பகுத்தறிவும், உள்ளுணர்வும் இப்படித்தான் சொல்கிறது.

"தன் என்ன செய்யலாம்?"

"பேசாம யு.எஸ். போலாம். இனி இங்க இருக்க வேண்டாம்."

"அதான் சரி. என்னென்னவோ சொல்றாங்க. நாம கிளம்பிடுவோம்."—இறுதி முடிவாக ஊருக்குப் போவது என்று முடிவு செய்து படுக்கின்றனர்.

# 8

**விடிந்துவிட்டது!**

கண்களை கசக்கியபடி கிடக்கும் தனஞ்ஜெயன் சோம்பல் முறித்தபடி எழுகிறான். லிண்டா இன்னமும் எழுந்திருக்கவில்லை. எங்கே அனிருத்? பார்வை துழாவுகிறது.

'அனிருத்... அனிருத்...' கத்தத் தோன்றி, அடக்கிக் கொண்டு படுக்கையை விட்டு எழுகிறான். பாத்ருமைப் போய் எட்டிப் பார்க்கிறான்.

"அனிருத்... அனிருத்..." குரலை அனுப்புகிறான். சப்தமில்லை. கீழே இறங்கி வருகிறான். அப்பா சங்கர நாராயணன் ஹிந்துவை மேய்ந்து கொண்டிருக்கிறார்.



"அப்பா, அனிருத் வரலை?"

"வரலியேப்பா!"

"எங்க போனான்?"

"இங்கதான் எங்கேயாவது விளையாடிக்கிட்டு இருப்பான்." — கால்களை வேகமாக செலுத்தி வாசல் புறம் வந்து போர்டிகோ சார்ந்த போகன்வில்லா நிழற் பரப்பை பார்த்துவிட்டு பக்கமாக பவழமல்லிச் செடிக் கூட்டம் உள்ள தோட்டம் பக்கம் செல்கிறான்.

எங்கும் அனிருத் இல்லை.

காலை நேரக் குளுமையை மீறி நிறைய வியர்த்து விட்டிருக்கிறது. லிண்டாவும் வந்து இணைந்து கொள்கிறாள்.

"எங்கேங்க அனிருத்?"

"தெரியல லிண்டா... நானும் தேடிக்கிட்டுதான் இருக்கேன்." — வீடு முழுவதும் இப்பொழுது இறங்கி வந்து 'அனிருத்... அனிருத்' என்று அரற்றத் தொடங்கி விட்டது.

லிண்டா கண்கள் கலங்கி விட்டிருக்கிறாள்.

"தன்... என்னால இங்க நடக்கற எதையும் தாங்கிக்க முடியலை. அனிருத் வேணும் எனக்கு இப்போ..." அழத் தொடங்குகிறாள் லிண்டா.

"ஸ்டுப்பிட்... உன்னை மாதிரிதானே நானும்? எனக்கென்ன ஆசையா அவனை தொலைக்க...?"

"நோ... நோ... ஐ வான்ட் மை சன்" லிண்டா அவன் சட்டையைக் கொத்தாக எகிறிப் பிடிக்கிறாள்.

சங்கரநாராயணன் அதைப் பார்த்து கனன்று போகிறார்.

''இந்தாம்மா... எடு கையை — என்ன இது? உன் பையனா எழுந்து எங்கேயோ போனதுக்கு தனஞ் ஜெயன் என்ன பண்ணுவான்?''

''சார்...'' கத்தரிக்கிறது ஒரு குரல். திரும்பினால் யாரோ ஒருவர். அவரிடம் அனிருத்!

''அனிருத்த்த்...'' அவனைப் பார்த்து ஓடுகிறாள் லிண்டா. வாங்கிக் கட்டியணைத்துக் கொள்கிறாள்.

''பஸ் ஸ்டாண்டுல போடிநாயக்கனூர் போற பஸ்ல ஏறி உட்கார்ந்துகிட்டு, தேனூத்து மலைக்கு ஒரு டிக்கட் தாங்கன்னு கேட்குக்கான். தம்பி நைட் டிரஸ்ல, கையில காசு இல்லாம இங்கிலீஷ்ல கேட்ட தோரணை கண்டக் டரை அசத்திடுச்சு.

நான் அப்பதான் அந்த பஸ்ல இருந்து இறங்கியிருந் தேன். பையனைப் பார்த்து விசாரிச்சேன். உங்க பேர் அம்மா பேரை சொன்னான். வித்தியாசமா இருந்துச்சு. எனக்குத் தெரிஞ்சு தனஞ்ஜெயன் தம்பிதான் நம்ம ஊர்ல வெள்ளைக்கார பொண்ணை கட்டியிருக்கு. ஆகையால நீங்களாதான் இருக்கணும்னு தோணிச்சு. கூட்டிகிட்டு வந்தேன். நல்லவேளை... என் யூகம் சரி யாப் போச்சு.''

வந்தவர் விவரிக்கிறார். சங்கர நாராயணன் நெருங்கிச் சென்று கைகளைப் பிடித்துக் கொண்டு நன்றி சொல்லத் தொடங்குகிறார். ''உங்க பேர்...''

''ராஜாமணி!''

''ரொம்ப நன்றி... கொஞ்ச நேரத்துல பையனைக் காணாம தவிச்சுப் போய்ட்டோம்.''

''தனா... உன் பிள்ளை போக நினைச்சது நம்ம குலதெய்வம் கோவிலுக்கு. இனியாவது நம்பு—சொன்ன பேச்சக் கேளு...'' தாத்தா தணிகாசல மூர்த்தி தள்ளா மையிலும் படுபாய்ச்சலுடன் பேசுகிறார்.



தனஞ்ஜெயன் மகனைப் பார்க்கிறான். அவன் சிரிக்கிறான். 'டாட்... ஐ வான்ட் டு விசிட் தேனூத்து ஹில்... லாட் ஆஃப் டாய்ஸ் ஈஸ் தேர். ஐ வான்ட் டு ப்ளே வித் தெம்...''

சிரித்தபடியே சொல்கிறான். தனஞ்ஜெயனுக்கு சிலிர்ப்பாய் இருக்கிறது. தாத்தா வாய்க்கு வந்தபடி பேசவில்லை... அவர் சத்யம்தான் பேசியிருக்கிறார்.

''யெஸ் அனிருத் டுடே ஆஃப்டர் நூன் வீ வில் பி தேர்...''

செருமியபடி கிளம்புகிறது கார்! உள்ளே லிண்டா, தனஞ்ஜெயன், அனிருத், சங்கரநாராயணன், பிரகதாம் பாள் உடல் நலம் தேறாததால் போகவில்லை. தாத்தா தணிகாசலமூர்த்தி தள்ளாமை காரணத்தால் போக வில்லை. டாட்டா காட்டி வழி அனுப்புகிறார். அப் படியே திரும்புகிறார். பஸ் ஸ்டாண்டில் இருந்து அனிருத்தை சுமந்து வந்ததாகக் கூறியவன் சிரித்தபடி எதிரில் வருகிறான்.

''ரொம்ப தேங்க்ஸ்பா... நாம போட்ட பிளான்தான் தனஞ்ஜெயன் இவ்வளவு சீக்கிரம் கிளம்பக் காரணம். தூங்கிகிட்டிருந்த பையனைத் தூக்கிச்சிட்டு போய் திரும்ப கொண்டு வந்து விட்டதுக்கு நன்றி. இல் லேன்னா தனா கிளம்பியிருக்கமாட்டான்!

அந்த பையன் மனசுக்குள்ளேயும் அங்க விளை யாட பொம்மை இருக்கு— அது இருக்குன்னு சொல்லி அவனும் ஆசைப்படற மாதிரி செய்துட்டே. ரொம்ப தேங்க்ஸ்...''

அவன் சிரிக்கிறான்.

''இந்த திட்டம் மட்டுமில்ல... மற்ற திட்டங்களும் நாம போட்ட மாதிரி நடந்துடும்தானே?''

"நடந்துடும் தானேவா?— நடத்திக்காட்டணும். இல்லேன்னா சக்ரவர்த்தி தாத்தாவுக்கு யார் பதில் சொல்றது?"

போர்ட்டிகோ வாசலிலேயே நின்று பேசுகின்றவர்,

"வா உள்ளே போய் பேசலாம்" என்கிறார். அவன் அவரைத் தொடர்கிறான்.

உள்ளிருக்கும் அறை ஒன்றில் சக்ரவர்த்தி ராஜ சாஸ்த்ரிகள் தன் பருமனான கனபாடியுடன் தள்ளாடிய படி இருவரையும் பார்த்துத் திரும்புகிறார்.

"என்ன போய்ட்டாங்களா?"

"போய்ட்டாங்க தாத்தா..." என்கிறான் ராஜாமணி.

"எங்க, உன்கூட நர்மதா வரலை?"

"வந்துருக்கா."

"அவளை தைரியமா இருக்கச் சொல். அந்த லிண்டாவும், அந்தப் பையனும் திரும்ப வரப்போற தில்லை. தனஞ்ஜெயன், நர்மதாவுக்குதான்."

அவன் கை எடுத்து கும்பிடுகிறான்.

"ரொம்ப சந்தோஷம் தாத்தா. எல்லாம் நல்லபடியா நடந்தா சரி."

"நடக்கும். ஒரு கல்லுல இரண்டு மாங்கா அடிக்கத் தான் காலம் என்னை இன்னும் விட்டு வெச்சுருக்கு... ஒண்ணு நர்மதா கல்யாணம்! அடுத்தது அங்க பூட்டின அறைக்குள்ள இருக்கற விக்ரகங்களுக்கெல்லாம் விலை!"

சக்ரவர்த்தி தாத்தா அச்சு அசல் வில்லனைப் போலவே சிரிக்கிறார். சிரிப்பு வீடு முழுக்க எதிரொலிக் கிறது.

# 9

தேனூற்று மலைக்கு செல்லும் வழித்தடத்தில் போடிநாயக்கனூர் மெயின் சாலையிலிருந்து பிரிந்து காரைச் செலுத்திக் கொண்டிருக்கிறான் தனஞ்ஜெயன்.

குண்டு குழியான சாலை!

சில இடங்களில் யானையைப் போட்டு மூடலாம். அத்தனை பெரிய பள்ளம்.

லிண்டா குலுங்கும் குலுக்கலில் வெலவெலத்துப் போகிறாள்.

அவளுக்கு மேலாக அனிருத்...

"அனிருத்துக்கு மருந்து தந்துட்டியா லிண்டா?" சங்கரநாராயணன் அந்தக் குலுக்கலுக்கு நடுவிலும் மறக்காமல் கேட்கிறார்.

"கொடுத்துட்டேன் மாமா..." சொல்லிவிட்டு அனிருத்தை வருடித் தருகிறாள்.

அவன் அவளைத் தன் தேன் நிறக் கண்களால் சற்று கிறக்கமாகப் பார்க்கிறான்.

"நாம இப்ப எங்கப் போய்க்கிட்டிருக்கோம்?"

"குலதெய்வம் கோவிலுக்கு கண்ணா..."

"அப்படின்னா?"

"உனக்குச் சொன்னாப் புரியாது."

"போய் என்ன பண்ணப் போறோம்?"

"We Should pray."

"Why?"

"Now it's highly necessary."

அனிருத் அதற்கு மேல் கேட்காமல் கண்ணாடிச் சதுரம் வழியாக வெளியே பார்க்கிறான்.

லேசான அமெரிக்க பசுமை தெரியும் வயல்வெளிகள். ஈரம் மிகுந்த காற்று ஊடாடிப் பறக்கும் கொக்குகள்.

"மாம் சீ தேர் ஒய்ட் ஜாக்!"

"அது ஜாக் இல்ல... கொக்கு..." மகனுக்கு விளக்கம் தந்தபடி கார் பயணம் தொடரும்போது நெஞ்சைக் கரிக்கிறது அவனுக்கு... இருமுகிறான். இதற்கு முன் இப்படி இருமியதே இல்லை என்கிற மாதிரி. விண்டா சற்று பயப்படத் தொடங்குகிறாள்.

"தன் சம்திங் ராங்... ப்ளீஸ் ஸ்டாப் த கார்..." கத்துகிறாள். தனஞ்ஜெயனும் காரை ஓரம் கட்டுகிறான். அனிருத்தை பார்க்கும்போது அவன் உதட்டோரம் ரத்தக் கோடு.

"மை குட் நெஸ்!" சங்கரநாராயணன் விடைத்து போய் கை கூப்புகிறார். வாய்விட்டு பிரார்த்திக்கிறார்.

"தாயே சாரதா... என் வம்சவாரிசுக்கு இப்படி ஒரு சோதனையா, காப்பாத்து தாயே!..."

"என்னப்பா பண்ணலாம். திரும்ப ரத்தம் வருதே... பக்கத்துல ஹாஸ்பிடல் இருக்கா..."

"ஒண்ணும் ஆகாது தனா... நேரா கோவிலுக்குப் போவோம். மிச்சத்த அவ பாத்துப்பா..."

"என்னப்பா இது பைத்தியகாரத்தனமான நம்பிக்கை. கடவுள் மேல நம்பிக்கை இருக்குங்கறதுக்காக டாக்டர்கிட்ட காட்டக் கூடாதா என்ன?"



"அப்படியில்லை தனா... இந்த மாதிரி விஷயத்துல முதல்ல எதுக்காகக் கிளம்பினோமோ அதை முடிக்கணும். நடுவுல பாதை மாறக்கூடாது."

"நோ... நான் ஒத்துக்க மாட்டேன். முதல்ல அனிருத்த டாக்டர்கிட்ட காட்டுவோம். பிறகு மத்ததெல்லாம்."

கோபமாகச் சொன்னபடி நிமிர எதிரில் ஒரு விவசாயி கலப்பையும் கையுமாக போய்க் கொண்டிருக்கிறார்.

"ஏங்க இங்க பக்கத்துல நல்ல ஆஸ்பத்திரி எங்க இருக்கு?"

"நல்ல ஆஸ்பத்திரியா? டவுனுக்குல்ல போகணும்."

"அதான் எவ்வளவு தூரம்?"

"அதுக்கு போடிக்கோ, இல்லை தேனிக்கோல்ல போகணும்."

"சரி கிளம்புவோம்..." வேகமாகிறான்.

"இருங்க, என்ன சிக்கல்...?"

"பையனுக்கு வாய்ல, மூக்குல ரத்தமாகப் போகுது. அதான்..." சங்கரநாராயணன் சிம்பிளாக சொல்கிறார்.

"ரணஜன்னியா?" அவனிடம் சாதாரணமாக எதிர் கேள்வி.

"யாருக்குத் தெரியும். டாக்டர்கிட்டக் காட்டணும்."

"இந்த பாதைலயே போங்களேன். ஒரு சித்த வைத்தியர் இருக்கார். அஞ்சே நிமிஷத்துல உங்க பையனை சரிப்படுத்திடுவாரு."

அவன்சொல்வதை எந்த அளவுக்கு ஏற்பது... ஒரு தடுமாற்றம் தொற்றுகிறது.

"என்ன யோசனை. கமான் கிளம்பு தனா..." அனிருத்தை மடியில் போட்டுத் தட்டியபடி விண்டா பரபரக்கிறாள்.

"சரி நாங்க பாத்துக்கறோம்..." தனஞ்ஜெயன் சித்தவைத்தியரை பொருட்படுத்தத் தயாராக இல்லாத தன் எண்ணத்தை, காரினை திருப்பி நிறுத்துவதில் காட்டுகிறான். அந்த விவசாயிக்கு அவன் முடிவு என்னவோ பண்ணுகிறது.

"எங்க வைத்தியர் பற்றி தெரியாதுங்க உங்களுக்கு... சரி சரி போங்க" — என்கிறான் வருத்தமாக. கார் கிளம்பிப் திரும்பிப் பறக்க அவன் நடையும் தொடருகிறது.

எதிரில் இன்னொரு கார்!

அந்தக் கார் இப்பொழுது அந்த விவசாயி அருகே உரசியபடி நிற்க, கார் கதவின் கண்ணாடி கீழிறங்குகிறது.

உள்ளிருந்து எட்டிப் பார்ப்பவர் ராகவன்குட்டி நாயர்.

"இவ்விட தேனூற்று மலா எவ்விடமுண்டு?" — என்று மலையாளத்தில் கலாய்க்கிறார்.

"தேனூத்துமலையா?"

"அதே... அதே..."

"நீங்க என்ன மலையாளமா?"

"அதே... அதே..."

"அங்க எங்க போகணும்?"

"அது நினக்கு வேண்டா. நீ பாதை பறைஞ்சால் மதி."



"என்ன சொல்றீங்கன்னே விளங்கலை."

"பாதை...பாதை... அதாவது வழி."

"வழியா? இப்படியே நேராப் போங்க. ஏழெட்டு மைலு போகணும்."

சொல்லிவிட்டு அவன் தாடையை வருடியபடி தனக்குத்தானே பேசிக் கொள்கிறான்.

"என்ன இது... தேனூத்து மலைக்கு இன்னிக்கு இத்தனை பேர் — அதுவும் கார்ல..." அவன் நடை தொடர அந்தக் காரும் புழுதிப் படலம் நடுவே கோடு போட்ட மாதிரி பறந்து கொண்டிருக்கிறது.

## 10

30164
4655921

சாரதாம்பாள் கோவில்!

தூர்ந்துபோய் குட்டிக் கோபுரத்தில் எல்லாம் ஆலமும் வேலமும் முளைவிட்டிருக்க, சாம்பல் தட்டிக் கிடக்கிறது. கோபுர கலசம் இருக்கும் இடத்தில் கழுகு ஒன்று அமர்ந்திருக்கிறது.

கோயிலைச் சுற்றிலும் சிதைந்த மதில்சுவர். செங்கல்லால் கட்டாமல் மண்ணால் மெழுகிக் கட்டியது. உதிர்ந்து உடைந்து எருக்கம் பூத்திருக்கக் கிடக்கிறது.

கோயிலுக்கும், மதிலுக்கும் இடையில் நெருஞ்சி முள்ளின் கொத்துக் கொத்தான கூட்டணி. சுவர் ஓரமாக நீண்ட கம்புபோல் வளைவு நெளிவின்றி படுத்திருக்கும் சாரை ஒன்று.

அங்கங்கே அமோக வளர்ச்சியில் காட்டுச் செடிகள். ஒரு கோயில் இப்படியா கேட்பாரற்றுப் போகும்?

மெல்ல மதிலை ஒட்டி எட்டிப் பார்க்கும் ராகவன் குட்டி நாயர் உட்புறமாக பார்வையை விட்டு ஆச்சரியத்தை அள்ளிப் பூசிக் கொள்கிறார்.

கேரளத்துக் கோயில்களும் கிட்டத்தட்ட இருண்டுதான் கிடக்கும். வேப்பெண்ணையும், ஆமணக்கெண்ணையும் நல்லெண்ணையோடு கலந்து எரியும் சுடரொளியோடு மட்டுமே மின்னும்.

எலெக்ட்ரிக் மின்னொளி கூடவே கூடாது. சுடரொளியோடு உருவாகும் நைட்ரஜன் வாயு மன ஒருமைக்கு உதவும் ஒரு வித்தியாச மருத்துவகாரணி. ஆனால், இங்கே அதெல்லாம் தெரியவில்லை.

கோயில் கிட்டந்தட்ட சமாதியாட்டம் கிடக்கிறது.

ஈ காக்கை கூட எட்டிப் பார்க்கத் தயாராக இல்லை.

அதனால்தான் ஊருக்குள் வழிகேட்டபோது சில விடலைச் சிறுவர்கள் 'பேய்க் கோயிலுக்கா?' என்று திரும்பிக் கேட்டனரோ?

'அது பேய் கோயில் இல்லை. பெரிய பொக்கிஷமுள்ள கோயில்! ஒரு காலத்தில் என் குருமகாநாதர் அங்குதான் இருந்தார். எனக்கு உபதேசமும் செய்தார். எப்பேர்ப்பட்ட தேவசாதகர் தெரியுமா அவர்?

ரத்த சண்டியும், பாணா முனியும், வஜ்ரபேரியும், அமிர்தவர்ஷிணியும் அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து ஏவல் செய்தாங்க.

ஆனா அவருக்குப் பிறகு அவைகளைப் பூஜிக்கவோ பாதுகாக்கவோ அவர் வம்சத்துல யாருக்கும் விதி இல்லை. அதனாலேயே அந்தத் தேவதைகளை அவர் நித்ர பந்தனத்துல போட்டுட்டார். இது எனக்கு மட்டும்தான் தெரியும். போ...போய் அவைகளோட



நித்திரையை கலைக்காம அந்தத் தேவதை உருவங்களையும், அவைகளோட யந்திரங்களையும் எடுத்துக்கிட்டு வா. அந்த யந்திரத்துல ஒண்ணு அமிர்தவர்ஷிணி. அது உன்கிட்ட இருந்தா ரிசர்வ் பேங்க்கே உன்கிட்ட இருக்கிற மாதிரி...?''

ராகவன் குட்டிநாயர் காதுகளில் மலையாளத்து குருவாயூர் குன்னம்குளம் தாந்தரீகர் குளத்து நாயர் சொன்னது ஓடி நுழைகிறது.

செருப்புக் கால்களுடன் உள்ளே பிரவேசிக்கத் தொடங்குகிறார் நாயர். கட்டைத் தோல் செருப்பு பட்டு நெருஞ்சிகூட கமருகிறது.

யாரது? சுவர் ஓர சாரை, முன் தலையை சில அங்குலம் உயர்த்திப் பார்க்கிறது.

'கர்ரக்... கர்ரக்... கர்ரக்...'

எழுத்தில் எழுதிக் காட்ட முடியாத சப்தம் போட்டபடி நுழைகிறார் ராகவன் குட்டிநாயர்.

கொடிக்கம்பம் இருந்த இடத்தில் இப்பொழுது மலையரசி.

''அங்க நின்று நேரே பார்... கோவில் சன்னதிக் கதவின் பூட்டு தெரியும். அதனுள்ளே நான் தரும் இரும்பிளக்கிச் சாற்றை விடு. பூட்டு கழண்டு போகும்.

செருப்பை ஞாபகமா வெளிய விட்டுடு. உள்ளே போ. இருட்டா இருக்கும். ஆதித்த ஹ்ருதய ஸ்தோத்திரம் சொன்னபடி உள்ளே போய் அகல் விளக்கை ஏத்திக்கோ... டார்ச் லைட் வேண்டாம். தீச்சுடர் ஒளிதான் முக்கியம்.

ஒரு பத்தடிக்கு கர்பகிரகம் முன்னால வராண்டா தெரியும். அதில் நடந்து கர்பகிரக கதவைப் பார். மரக்

கதவு! அதன் முன்னே நெய்தீபம் போட்டு, ஒரு லலிதாத்ரிசதி நாமாவளியைச் சொல்.

சொன்னபடிபடி இடது பக்கம் பார். ஒரு அறை தெரியும். மூடியிருக்கும். பூட்டுக்கு சீல் வைக்கப்பட்டு படிகள் மேல களிமண் விக்ரகங்கள் உட்கார்ந்திருக்கும்.

அநேகமாக அந்த விக்ரகங்கள் சக்தி இழந்திருக்கும். ஆகையால் தைரியமா சீல் வைக்கப்பட்ட பூட்டை இரும்பிளக்கி சாறநால் உடை. உள்ளே எட்டிப் பார்.

வரிசையா, வீரபத்ரர்!

ரத்த சண்டி!

பாணாமுனி, அமிர்தவர்ஷிணி.

வஜ்ரபேரின்னு தேவ அரக்க ஸ்தூலங்கள் படுக்கை வாட்டுல படுக்க வைக்கப்பட்டிருக்கும். அவர்கள் நின்றிருந்த பீடத்துல அவர்களுக்கான யந்திரத் தகடு விரிச்சு அடிக்கப்பட்டிருக்கும்.

எனக்குத் தேவை அந்த யந்திரத் தகடுகளும் ஸ்தூலங்களும்தான். அப்படி ஒரு எந்திரம் போட எனக்கு ஞானமில்லை. அந்த மாதிரி ஸ்தூலம் செய்யவும் இப்ப ஆள் இல்லை.

அவைகளை அந்த இருட்டறை விட்டு இங்க கொண்டு வந்து நான் பூஜிக்கணும். பின்னே சந்திர மௌலீஸ்வரனைவிடவும் பெரிய உபாசகன் ஆகணும்.

இதை எனக்காகச் செய் ராகவா. உனக்கு நான் அமிர்தவர்ஷிணியை தாரை வார்த்து தரேன். அந்த யந்திரமும் தேவதையும் உன்னிடம் வந்திட்டா நீ குபேரன். சந்தேகமேயில்லை..."

தன்னை அனுப்புமுன் குன்னம் குளத்து தாந்திரீகர் குளத்து நாயர் சொன்னபடியே எல்லாம் இருக்கிறது. ராகவன் குட்டி நாயர் மெல்ல நடந்து இரும்பிளக்கியால் பூட்டை உடைத்து ஆதித்ய ஹ்ருதயம்



சொன்னபடி உள்ளே கால்பதித்து அன்னை சாரதாம்பிகையின் கருவறைச் சன்னதியைப் பார்க்கிறார்.

சாரதாம்பிகை பொலிவிழந்து, ஒளியிழந்து, கருப்பாய் ஒரு சிலைக் கல்லாட்டம் மட்டுமே காட்சி தருகிறாள். நெய் விளக்கின் வட்ட ஒளி அவளை இத்தனை கோரமாக காட்டி இருக்க வேண்டாம்.

ராகவன் குட்டி நாயர் தனது ஒளிவட்டத்தை இடப் பக்கம் திருப்பிக் காட்ட, அந்த முக்கிய அறையின் கதவு, இதில்தான் மிகப்பெரிய பொக்கிஷங்கள் இருக்கின்றன. அல்லும் பகலும் போராடிப் போராடி சந்திர மௌலீஸ்வரய்யர் உருவாக்கிய தேவதா விக்ரகங்கள்.

தியானத்தில் அவர்களை உபாசித்து அவர்கள் கண்ணுக்குத் தெரியத் தொடங்கவும் அப்படியே கரித் துண்டால் வரைந்து கொண்டு பின் சிற்பியைப் பார்த்து அந்த வரைந்த உருவைக் காட்டி இப்படியே வர வேண்டும் என்று சொல்லி, தட்டித்தட்டி உருவாக்கிய சிற்பங்கள்!

'புஜத்தில் தீ ஜ்வாலை... தலைக்கேசம் எல்லாம் பாம்புடம்பு கண்கள் இரண்டும் சிதைவில்லாத வட்டம் மூக்கில் சதையே இல்லாதபடி நாசித் துவாரங்கள்.

இப்படித்தான் பாணாமுனி கண்களுக்குத் தெரிந்தது!

முழு நிர்வாணமுடன் பதினாறு கரமுடன் ஒவ்வொரு கரத்திலும் ஒரு பாத்திரமுடன், அதிலெல்லாம் மூலிகை மருந்துடன் காட்சி தந்தது அமிர்தவர்ஷிணி.

செந்நிற சொருபம், பெரிய உதடுகள், மார்புவரை தொங்கும் நாக்கு. மாட்டின் காது, பெரிய மார்பகம், மனிதக் கை. ஆனால், அதில் குரங்கின் விரல்கள் என்று திடுக்கிட வைக்கும் சொருபம் ரத்த சண்டிக்கு.

இடுப்பு வரை சடை முடி. நான்கு கரங்கள். நான்கிலும் வில், வாள், அம்பு, ஈட்டி என்கிற ஆயுதம். இரண்டு கரிய பெரிய விழிகள்— ருத்ரன் போல நெற்றியில் மூன்றாவது கண்— இது வஜ்ரபேரி. அன்று சந்திர மௌலீஸ்வரர் சொன்னதைக் கேட்டு குளத்து நாயர் சொன்னது போலவே இந்த அறைக்குள் உருவங்கள் உள்ளதோ? கேள்வி பிடுங்க சந்தனம் பூசின மாதிரி மனது பயம் பூசிக் கொள்ள, இரும்பிளக்கியை ஜிப்பா பாக்கெட்டின் கண்ணாடிக் குப்பியில் இருந்து எடுத்து அந்த பூட்டப்பட்ட அறைக் கதவின் சாவித்துவாரம் வழியாக விட நெருப்பெறிந்த மாதிரி புகைக்கிறது பூட்டு.

பின் தூக்குத் தண்டனை பெற்ற தேகம் போல பிடிப்பு விலகி உதிர்ந்து விழுகிறது.

'*சர்ரக்... சர்ரக்... சர்ரக்...*' கதவைத் திறக்கையில் பயமாகத்தான் இருக்கிறது.

'மறக்காதே ராகவா... கதவைத் திறக்கும் போது அர்ச்சன ஸ்தோத்ரம் சொல்லு. பலமா சொல்லு. தப்பித் தவறி உள்ளிருக்கும் விக்ரகங்களுக்கு சக்தி இருந்தா அது உன்னை தாக்க நினைச்சாலும் அர்க்களம்* உன்னைத் தடுக்கும்.

'ஜயந்தீ மங்களா காளி பத்ரகாளி கபாலினி

துர்க்கா க்ஷமா சிவாதாத்ரி ஸ்வாஹா ஸ்வதா நமோஸ்துதே...!'

ராகவன் குட்டி நாயர் பலமாக உச்சரித்தபடி அந்த அறைக் கதவை திறக்க மூக்கை நிரடி வயிற்றைக் குமட்டுகிறது ஒரு தினுசான வாசம். மற்றபடி அசம்பாவிதமாக ஏதும் நிகழவில்லை.

---

* இடையூறுகள் நீங்க சொல்லப்படும் ஸ்தோத்ரம்.



அகல் விளக்கின் ஒளிவட்டம் அறைக்குள் சரிந்து கிடக்கும் உருவங்களைக் காட்டுகின்றன. உருவங்களை ஒட்டி ஒரு நாற்பது பக்க நோட் ஒன்று கிடக்கிறது. அதில் மௌலீஸ்வரய்யர் இப்படி எழுதியிருக்கிறார்.

"என்மேல சத்தியம்... யாரும் இந்த விக்ரகங்களை நிமிர்த்தி நிறுத்தக் கூடாது.

இந்த அறையையும் 48 வருஷ காலத்துக்கு திறந்து பார்க்கக் கூடாது... பின்னால திறந்தா பாதகமில்லை.

தப்பித்தவறியும் இங்குள்ள யந்திரங்களை தங்களுடையதாக்கி உபாசிக்க கூடாது.

இந்த தேவதைகள் மகா ரௌத்ரமானவை. நானே இவைகளை உருவாக்கிவிட்டு இவைகளை வைத்துக் கொண்டு, உபாசிக்க முடியாமல், பூஜிக்க முடியாமல் திணறிப் போனேன்... பாணாமுனிக்கு நைவேத்தியமாக பசுவின் ரத்தம் தரவேண்டும். பசுவை கொல்வதோ பஞ்சமா பாதகம்! எனவே அதை பராமரிக்க மிக சிரமப்பட்டேன்.

வஜ்ரபேரி அதைவிட மோசம். அதற்கு கருங்குவளை மலர் தூவி அர்ச்சிக்க வேண்டும். தேவாங்கை உயிரோடு படையலிட வேண்டும். இரண்டுமே கிடைப்பது அரிது... வஜ்ரபேரி கோபித்துக் கொண்டு இதனால் தன் சவுக்கால் என்னை அடித்திருக்கிறது.

உலகில் விதவிதமான சக்தி சொருபங்கள். அவைகளை ஆசைக்காக உருவாக்கி விட்டு பின் பராமரிக்க முடியாமல் பட்டபாட்டை சராசரி மனிதர்களால் உணரவே முடியாது. இன்னொரு தாந்திரிகனால்தான் இதை உணரமுடியும்.

இன்றைய ஜனங்களுக்கு தங்கள் சக்தி பற்றி பெரிதாக எதுவும் தெரியாது. நூறு கிலோ, இருநூறு கிலோ

எடையை தூக்குவதும், புஜபல பராக்ரமம் காட்டுவது மட்டுமே பெரிய சக்தி என்று நினைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

இதெல்லாம் அற்பம். மகா அற்பம்.

கண்ணாகிய நேத்திரத்தால் உற்றுப் பார்த்தே ஒரு இரும்பை வளைக்க முடியும். அதே இரும்பை இருவிரல் களால் நசுக்கி பொடியாக்கி விபூதி போல கொட்ட வைக்க முடியும்.

எல்லாம் சக்தி ரகசியங்கள்! இதை தெரிந்து கொள்ள மனது முதலில் ஒருமுகப்பட வேண்டும். பின்பு தியானம் சித்திக்க வேண்டும். உடம்பை ஒடுக்கி பசி தாகம் ஜெயிக்க வேண்டும். இவைகளை செய்ய பயிற்சிகள் உண்டு. அவைகளில் ஈடுபாடு காட்ட, அசைக்க முடியாத நம்பிக்கை உணர்ச்சியும், தீவிர பற்றுதலும் இருக்க வேண்டும். எல்லோருக்கும் இது சாத்தியமா என்றால் இல்லை என்றுதான் சொல் வேன்.

இப்படி சக்தியை வசப்படுத்தும் மனிதர்களைக் கூட இயற்கைதான் தீர்மானிக்கிறது. அந்த வகையில் சனியின் ஆதிபத்யத்தில் எண் எட்டின் கூடுதலான பிடியில் உள்ளவர்கள் இவைகளை சாத்தியப்படுத்திக் கொள்வது மிக சுலபம். மற்றவர்கள் முயன்றால் மரணம் நிச்சயம்.

நோட்டை நின்ற நிலையில் ஒரு மூச்சில் வாசிக்கப் பார்க்கும் ராகவன் குட்டி நாயர் சற்று கலவரப்பட்டு போகிறார். தமிழ்த் தெரியாத தடுமாற்றம் காரணமாகத் தான் சந்திரமௌளீஸ்வரய்யர் இப்படி எழுதி வைத் திருக்கிறார். தப்பித்தவறி இந்த விக்ரகம் பற்றி அறிந்து யாராவது இங்கு வந்து விட்டாலும், இதைப் பார்த்



தாவது தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள் ளட்டுமே என்பதற்காக இருக்குமோ?''

ராகவன் குட்டி நாயர் தீவிரமாக யோசிக்கத் தொடங்குகிறார். யந்திரங்களையும், விக்கிரகங்களை யும் எடுக்கலாமா வேண்டாமா என்ற குழப்பம் உள்ளே வந்துவிட்ட நிலையில் உருவாகிவிட்டது.

நின்று கொண்டிருக்கும் அறைக்குள் விளக்கின் ஒளியில் விக்கிரகங்கள் பிணம்போல படுக்க வைக்கப் பட்டிருக்கின்றன.

பார்க்கப் பார்க்க பயமாக இருக்கிறது.

சந்திரமௌளீஸ்வரரே போதுமடா சாமி என்று படுக்க வைத்துவிட்டு, தப்பித்தால் போதும் என்று விட்டுவிட்டதை திரும்பத் தொட்டு மாட்டிக் கொள்ள வேண்டுமா? கேள்வி பலமாக எழும்புகிறது.

இருந்தும் குளத்து நாயர் தைரியம் தந்தது ஞாபகத் தில் பரவுகிறது.

'திடமாக இதை செய்... நீ குபேரனாவாய். உன்னை தேடி பணம் வரும். தங்கமும் வைரமும் வரும். ஒரு சாதாரண தனாகர்ஷண யந்திரமே உன்னை சர்வ வெற்றியாளனாய் மாற்றியது. இது கேட்கவே வேண் டாம். பல திடீர் பணக்காரர்கள் இப்படி சக்தி ரகசியம் அறிந்து உருவானவர்கள்தான். பயப்படக்கூடாது. பயந்தால் ஜெயிக்க முடியாது. அதற்கு முட்டை தூக்கப்போ, ஐந்தும் பத்தும் கிடைக்கும். அந்த வாழ்வு போதும் என்று முடிவு செய்துவிடு.'

குளத்து நாயர் சரியான கோபக்காரர். அவருக்கு கோழைகளை பிடிக்காது.

'எனக்கு ஒரு கால் இல்லை. நொண்டி. நான் நடக்க முடிந்தால் இந்நேரம் நானே போய் அவைகளை

எடுத்து வந்திருப்பேன். உன்னை அனுப்பமாட்டேன்' என்று சொன்னதும் நினைவுக்கு வருகிறது.

சே... இத்தனை தூரம் வந்துவிட்டு இப்படியா குழப்பிக் கொள்வது?

ராகவன் குட்டி நாயர் மளமளவென்று செயல்பட ஆரம்பிக்கிறார். திட்டமிட்டு கொண்டு வந்திருந்த மரப்பெட்டி காரின் டிக்கியில் இருக்கிறது.

போய் அதை எடுத்து வர முடிவெடுக்கிறார்!

# 11

நடுக்காட்டுக்குள் உள்ள கோவில் அது. சீர் குலைந்து போய்விட்டதால் எட்டிப் பார்க்க ஆள் இல்லை. அதுவரை காரை ஓட்டி வந்ததே பெரும் பாடாக இருக்கிறது. டிரைவருக்கு... வந்த களைப்பு தீர கார்மேல் சாய்ந்தபடி பீடி பற்றவைத்து இழுத்துக் கொண்டிருக்கிறான்.

"உண்ணி..." என்று ராகவன் குட்டி அழைப்பதை கேட்டு திரும்பி பார்க்கிறான்.

"ஆ மரப்பெட்டிய டிக்கியில் இருந்து எடுக்கு..." என்கிறான். அவரை ஆழமாக ஒரு பார்வை பார்த்து விட்டு டிக்கியை திறந்து பெட்டியை எடுக்கிறான்.

"விக்ரகங்களை கண்டோ?" என்கிறான் இணக்க மாக.

"கண்டு... சுந்தரமாய விக்ரகங்கள். பட்சே கொறச்சு பேடிச்சு போயி..."

"பேடிக்காண்டா குருஜி சக்திமானாக்கும்" என்று பெட்டியை இறக்கி வைக்கிறான். பின் அதை சுமந்தபடி உள் செல்கிறான்.



கோபுரக்கலசம் இருக்கும் இடத்தில் அமர்ந் திருக்கும் கழுகு அதிசயமாக இருவரையும், பெட்டி யையும் பார்க்கிறது. ஓரமாக படுத்துக்கிடந்த சாரை நடமாட்ட சப்தம் கேட்டு எழுந்து ஓடி காட்டுச் சீவேலி செடியின் அடர்வில் புகுந்து கொண்டு அதுவும் பார்க் கிறது.

உள்ளே நுழைபவர்கள் சில நிமிடங்களில் வெளியே வருகிறார்கள். பெட்டியை தூக்க மாட்டாது தூக்கிக் கொண்டுதான்... பூட்டை உருக்கித் திறந்த கதவை திரும்ப சாத்திவிட்டு பூட்டையும் வெறுமனே பூட்டிக் கிடப்பது போல மாட்டிவிட்டு காரில் ஏறிக் கிளம்பு கின்றனர்.

கழுகும் காருக்கு மேலே பறக்கத் தொடங்குகிறது!

எவ்வளவோ முயன்றும் பள்ளத்தில் இறங்கி விட்ட காரை கிளப்ப முடியவில்லை. சரியான பள்ளம். டுர்ர்... டுர்ர்... என்று என்ஜின் அசுர சப்தம் போட்டும் கிளம்ப மறுக்கிறது.

ச்சே! – சலித்துக் கொள்கிறான் தனஞ்ஜெயன்.

"முடியலியா?" உள்ளிருந்து லிண்டா கேட்கிறாள்.

"யெஸ் டியர். இடியாட்டிக் லாக். சம்படி வீ நீட்."

"நான் தள்ளிப் பாக்கட்டுமா?" சங்கரநாராயணன் மகனைப் பார்த்து கேட்கிறார்.

"வேண்டாம்ப்பா... நாலு பேராவது வேணும், யாராவது கண்லபட்டா கூப்பிடுங்க... நாம போறாது... நல்ல கோயில் நல்ல பிரார்த்தனை" — என்று சலித்துக் கொள்கிறான்.

"அப்படிச் சொல்லாத தனஞ்ஜெயா. காரணமில் லாம இப்படி நடக்காது..." சமாதானிக்கிறார் அப்பா.

"போறும்ப்பா... எதுக்கெடுத்தாலும் ஒரு சமா தானம். அதுல மூடுமந்திரமா ஒரு அர்த்தம். போதும்

ஸ்டேட்ஸ்ல இருந்த வரை இந்த மாதிரி சிந்தனைகளே கிடையாது தெரியுமா?''

சங்கர நாராயணன் அவன் கோபம் உணர்ந்து வாயை மூடிக் கொள்கிறார். சுற்றும்முற்றும் பார்க்கிறார். யாராவது தென்படுகிறார்களா?

தொலைவில் ஒருவர் நடந்து வருவது தெரிகிறது. ''தனா அதோ ஒருத்தர் வரார் பார்...'' கை காட்டுகிறார்.

''ஒருத்தர் போறாதுப்பா...'' அவனும் சொன்னபடி வருபவரை பார்க்க, காருக்குள் அனிருத் ஓயாத இருமலில் நிறைய ரத்தத்தை கக்கி சட்டைக் காலரை எல்லாம் சிவப்பாக்கி இருக்கிறான்.

விண்டா பித்துப்பிடித்த மாதிரி ஆகி விட்டிருக் கிறாள்.

''தன்... ஐ ஆம் ஸ்கேர்ட். அனிருத் கண்டிஷன் ஈஸ் சோ ப்பேட் சீ!'' — வெளியே நிற்பவனை அழைத்துக் காட்டுகிறாள். தனஞ்ஜெயனும் எட்டிப் பார்க்கிறான். தேன் நிறக் கண்களில் சோர்வு வழிய அனிருத்தும் அப்பாவை பார்த்து பீதியை உருவாக்குகிறான்.

''அப்பா நெஞ்செல்லாம் எரியறதுப்பா...'' என் கிறான் ஆங்கிலத்தில்.

''டோன்ட் ஒர்ரி அனிருத், அப்பா டேக்கேர், டோன்ட் ஒர்ரி...'' அப்படித்தான் சொல்ல முடிகிறது. இதற்குள் தொலைவில் நடந்து வருபவரும் நெருங்கி விட்டார். அழுக்கேறிய வேட்டி, திறந்த மார்பு, கை இடுக்கில் ஒரு மான் தோல் பை. சற்றே சடை பிடித்த தலைமுடி என்று கிட்டதட்ட பக்கிரி மாதிரி இருக்கிறார் அவர்.

''சார்...'' அழைக்கிறான்.



''என்னையா?''

''ஆமாம்... கார் பள்ளத்துல இறங்கிடிச்சு. கொஞ்சம் தள்ளிவிடணும்...'' தயங்கித் தயங்கி கேட்கிறான். நடுவில் இருமல் சப்தமும் குறுக்கிடுகிறது.

''யார் நீங்க... காருக்குள்ள யார் இருமறது?''

''நாங்க தேனூத்து சாரதாம்பாள் கோவிலுக்கு போறோம். எங்க குலதெய்வம் அது. வழியில இப்படி ஆயிடுச்சு...'' அவர் உள்ளே எட்டிப் பார்க்கிறார். அனிருத் ரத்த உதட்டை அப்பொழுது துடைத்துக் கொள்ள,

''பையனுக்கு என்ன உடம்புக்கு?'' — கேட்கிறார்.

''இருமல்! ரத்த வாந்தி... என்னத்த சொல்ல. டாக்டர்களாலேயே புரிஞ்சுக்க முடியல... இப்ப கூட டாக்டர் கிட்ட காட்டத்தான் போய் கிட்டிருக்கோம்.''

தனஞ்ஜெயனின் விளக்கம் அந்த பக்கிரி முகத்தில் சின்ன சிரிப்பை உருவாக்குகிறது. அது தனஞ்ஜெயனை என்னவோ செய்கிறது.

''எதுக்கு சிரிக்கறீங்க?''

'சிரிக்காம... இது ரணஜன்னி தம்பி. நான் ஒரு சித்தவைத்யன். ஒரு சூரணம் தரேன் கொடுத்துப் பாருங்க சரியாயிடும்.'' — என்கிறார் மிக சாதாரண மாக. சொல்லிக் கொண்டே உரிமையோடு காரின் கதவைத் திறந்து அனிருத்தின் கையை பிடித்து நாடியும் பார்க்கிறார்.

பார்த்தபடியே ''பையன் நிறைய ஐஸ்கிரீம் சாப்டுவானோ?'' — கேட்கிறார்.

''ஆமாம்.''

"இனி சாப்பிட வேண்டாம். இந்தவயசுல இப்படி ரத்தம் எகிறி வெளிய பெருகி வருதுன்னா, உள்ள ரத்தத்தை கொதிக்கச் செய்து தூண்டி விடற உணவுப் பொருள் எதனா இருக்கணும்..."

"அப்படின்னா?"

"சூர்ய மாதுளைப் பொடியோட செந்தூர சந்தியை கலந்து யார் சாப்டாலும் அவர்கள் ரத்தத்துல உஷ்ணம் பெருகும். அவர்கள் உடம்பு கணச்சூட்டு உடம்பா இருந்தா அந்த உஷ்ணம் பல மடங்கு பெருகும். இந்த சந்தர்ப்பத்துல சட்டுனு குளுமையை உருவாக்கற உணவுப் பொருள் சாப்பிட்டா சூடும் குளுமையும் ஒவ்வாமையை உருவாக்கி ஜன்னி வரை போயிடும். இது நடக்கும்போது டாக்டர்கள் சோதிச்சா உடம் போட பிரச்சினை தெரியவரும். மற்ற நேரத்துல செய்தா இந்த உடம்புல கோளாறே இல்லேன்னுதான் சொல்வாங்க..."

அந்த பக்கிரிச் சித்தவைத்யர் பேசுவதை தனஞ்ஜெயனால் ஒரு வெட்டிப் பேச்சாக நினைக்கவே முடியவில்லை. ஒருவேளை இவரைத்தான் சற்று முன் பார்த்த விவசாயி சொன்னானோ?

ஏகப்பட்ட யோசனைகளோடு அவரைப் பார்க்கும் போது, அவர் தன் மான்தோல் பையைத் திறந்து ஒரு மரக்குப்பியில் இருந்து செங்கல் பொடி நிறத்தில் சூரணப் பொடி ஒன்றை உள்ளங்கையில் கொட்டி பின் தேன் பாட்டிலைத் திறந்து ஒரு ஸ்பூன் தேனையும் அதில் கொட்டிக் கலக்கி ஆட்காட்டி விரலால் வழித்து அனிருத்தின் நாவருகே கொண்டு செல்கிறார்.

அவன் வாயைத் திறக்காமல் மிரண்டு போய் பார்க்கிறான்.

"ப்ளீஸ் ஓபன் யுவர் மௌத் மைடியர் கிட்..." அவரின் ஆங்கிலப் பேச்சு அவனை மட்டுமல்ல, தனஞ்ஜெயனை ஒரு உசுப்பு உசுப்ப, தனஞ்ஜெயன் அரை. மனதாக "ஓபன் தி மௌத் அனிருத்..." என்கிறான்.



அனிருத் வாயைத் திறக்க மருந்துக் கலவை வாயுள் பரவுகிறது. அந்த இனிப்பும் நெடியும் மிகப் பிடித்துப் போன மாதிரி விழுங்குகிறான்.

திரும்புகிறார் பக்கிரி.

"சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதீங்க... இந்த சூரணத்தை தேன் கலந்து கொடுங்க. இருமல் அடங்கும். ரத்தம் வராது. சூர்யமாதுளைப் பொடி மட்டும் வேண்டாம். கொடுக்காதீங்க..."

தனஞ்ஜெயன் திகைப்போடு பதில் தருகிறான் "அப்படி ஒரு பேரையே இப்பதான் கேள்விபட்றேன். அமெரிக்காவுல ஏதுங்க அது?"

"நீங்க அமெரிக்காவா?"

"ஆமா..."

"ஆச்சரியமா இருக்கு... அது ஒன்னுக்குதான் இப்படி ஒரு விபரீதமான குணம் உண்டு. எதுவா இருந்தாலும் இனி சரியாயிடும். கார் தள்ளிவிட வேண்டியவன் என்னடா மருந்து தந்து உபதேசம் பண்றானேன்னு நினைக்க வேண்டாம். ஒரு நல்ல வைத்யன் நோயாளியை பார்த்த மாத்திரத்துல கடமையைச் செய்யணும். கடவுள், மருத்துவர்கள் வடிவத்துலதான் கருணையை வாழ வைக்கிறார். அதான் இப்படி செய்தேன். ஆமா சாரதாம்பாள் கோயிலுக்கா போகணுமிங்க..."

"ஆமாம்... எங்க குலதெய்வம் அது..."

"அப்போ நீங்க மணக்கால் சந்திரமௌலீஸ்வரய்யர் குடும்ப வகையறாவா?"

"ஆமாம்..."

"ரொம்ப சந்தோஷம். ஐய்யர் ஒரு பெரிய சக்தி உபாசகர். மகா மேதை. கையை தொட்டு அருள் அலைகளாலையே பலபேரை குணப்படுத்தினவர்னு கேள்விப்பட்டிருக்கேன். அது சரி... கோயிலை இப்படியா போட்டு வைப்பீங்க..."

அந்தக் கேள்வி முன், அனைவரிடமும் ஒருவித மௌனம். "அந்த பக்கமே ஊர்க்காரங்க யாரும் போறதில்லை. காட்ல விறகு வெட்டப் போற சிலர் ஓய்வுக்காக கோயில் பிரகாரத்துல உட்கார்வாங்களாம். அவங்க காதுலையும் விபரீத சப்தம்லாம் விழுந்து அவங்களை மிரட்டி துரத்தியிருக்காம்.

ஒரு நல்ல சக்தி பீடம் பூஜையத்துப்போனா இப்படித்தான் ஆகும். அந்தக் காலத்துல உங்க கொள்ளு தாத்தா இருக்கறபோது தினமும் ஒரு யாகமும், பூஜையுமா இருந்த கோயில் அது. அன்னிக்கு அப்படி இருக்கவும் வேண்டாம். இன்னிக்கு இப்படியும் இருக்க வேண்டாம். நல்லது... நாம யார் இது இது இப்படித்தான் இருக்கணும்னு தீர்மானிக்க... எல்லாம் அந்த பராசக்தி சித்தம்ரானே? வரட்டுமா?"

அந்த பக்கிரி மனிதர் உடனேயே கிளம்ப ஆயத்தமாக தனஞ்ஜெயன் அவரைத் தடுக்கிறான்.

"ஒரு நிமிஷம்... உங்க வைத்யத்துக்கு எவ்வளவு தரணும்...?" சட்டைப் பாக்கெட்டில் கைவிட்டபடி கேட்கிறான், சிரிக்கிறார் அந்த வைத்தியர்.

"என்ன பெரிய வைத்யம்? சாகக் கிடந்தவனை பொழைக்க வெச்சுட்டேனா... இல்லை ஊமையைதான் பேச வெச்சுட்டேனா? ஒண்ணுமில்லை... நாலணா தூரணம் கொடுத்துருக்கேன், இதுக்கு போய்..."

"நாலணா தூரணமா?"— தனஞ்ஜெயன் வியந்து போய் அனிருத்தை பார்க்க, அனிருத்திடம் சுத்தமாக



இருமல் இல்லை. பழைய கலகலப்பும் விளையாட்டும் ஆரம்பமாகிவிட்டிருக்கிறது.

அவரோ கிளம்பி விட்டிருக்கிறார்.

எல்லாமே அதிசயமாக இருக்கிறது.

"சார், சார்... நில்லுங்க, கொஞ்சம் காரையாவது தள்ளிவிடுங்க..." அவர் திரும்பிப் பார்த்து நெருங்கி வருகிறார்.

"கார்ல ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் பண்ணுங்க. நான் தள்றேன்" தனஞ்ஜெயனும் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்கிறான். சங்கரநாராயணனும் தள்ள முனைய "நீங்களும் ஏறி உட்காருங்க" என்கிறார்.

"இல்ல இருக்கட்டும்" உங்களால மட்டும்னா ரொம்ப கஷ்டம்."

"ஒரு கஷ்டமும் இல்லை... உட்காருங்க!" கட்டளையிடும் தோரணையோடு பேசியவர் சொன்னதுபோல் இரு கைகளை போட்டு உந்தித் தள்ள முனைய கழுத்து பாகத்துக்கு கீழ் புஜம் புடைத்த புடைப்பு தனஞ்ஜெயனுக்கு ரியர் கிளாஸ் வழியாக தெரிகிறது.

அடேயப்பா என்ன ஒரு கட்டுமஸ்து? வியந்து முடிப்பதற்குள் கார் பள்ளம் கடக்கிறது. ஆச்சரியமும் அவர்களின் மனங்களைக் கடக்கிறது.

"ரொம்ப தேங்க்ஸ்... உங்க பேர்..."

"என் பேரும் சந்திரமௌலிதான். பெரிய சாமின்னும் சொல்வார்கள்."

"நிஜமா நீங்க பெரிய சாமிதான்..." தனஞ்ஜெயன் உற்சாகமாக ஆக்சிலேட்டரை அழுத்துகிறான்.

கார் சீற ஆரம்பிக்கிறது!

# 12

திரும்பவும் கேரளம்.

பஞ்சாரா கிராமத்து கடல் சூழ்ந்த தென்னந் தீவு!

நான்கு முரட்டு வாலிபர்கள் கட்டுமரம் ஒன்றில் கரை ஒதுங்கி தீவு நிலப்பரப்பில் கால் வைக்கிறார்கள். தலையில் உருமா, அழுக்கு டீ ஷர்ட், கோடுபோட்ட லுங்கி, உதட்டில் பீடி என்கிற மீனவ லட்சணங்களோடு...

''எனிக்கு நன்னாயிட்டு அறியும், வலசம்மாவும் கிறிஸ்டோபரும் இவ்விடத்தன்னே வந்தது...'' அவர்களில் ஒருவன் வலசம்மாவும், கிறிஸ்டோபரும் இங்குதான் வந்திருந்தார்கள் என்கிறான்.

''பொறுடா, போய் பார்ப்போம். மூணு நாளா வீட்டுக்கு வரலை, இங்க இரண்டு பேரும் என்ன செய்ய முடியும்? இருந்த ஒரு குடிசையையும் காத்து கொண்டு போயிடுச்சு.''

—என்றபடி முன் நடக்கிறான். நான்குபுறமும் நான்கு பக்கத்துக்கு பிரிகிறார்கள், கண்களை கூர்மையாக்கிக் கொள்கிறார்கள். மரங்களின் மேலும் பார்வையை பரப்பியபடி நடக்கிறார்கள் சின்னத்தீவுதான். இங்கு கத்தினால் அங்கு கேட்கும் தூரம்தான்! அவர்களில் ஒருவன், ஒரு தென்னை மரத்தடியில் வலசம்மா பிணமாகக் கிடப்பதைப் பார்த்து, 'ஊ...' என ஊளையிட, சத்தம் கேட்டு மற்றவர்கள் திரும்பிப் பார்க்க கிறிஸ்டோபரின் ரத்தம் சிதறிய உடம்பும் கண்களில் படுகிறது.

''ஓ... எந்தா கொடூரம்!''— வாய் பிளக்கின்றனர். சடலங்களை நெருங்கிச் சுற்றி வருகின்றனர்.



நல்ல நடுப்பகல் நேரம். சூரியன் உச்சிவானில் இருந்து கொண்டு தன் கதிர்கரங்களை தென்னங்கீற்றை ஊடுருவிக் கிழித்துக் கொண்டிருக்கிறான். அதில் ஒன்று அருகில் கிடக்கும் சக்கரச் சுருளின் மேல் பட்டு சற்று ஒளிப்பிழம்பெடுக்க,

''எடோய் நோக்கு அவ்விட...'' ஒருவன் கை அந்த யந்திரத்தை காட்டுகிறது. ஓடிப்போய் அடுத்தவன் அதை எடுக்க மற்றவர்கள் சூழ்ந்துகொள்ள அதை விரிக்கிறான் அவன். அதன் உட்கோலமும், எழுத்துக்களும் பார்த்த மாத்திரத்தில் அவனை என்னவோ செய்ய உதடுகள், ''இது ஏதோ யந்திரமாணு...'' என்று முணுமுணுக்கிறது.

அடுத்தவன் பார்வை கீழே துண்டுபட்டு உலர்ந்து கிடக்கும் மீனின் உடல் பாகம் பார்த்து அதை குனிந்து கைகளில் எடுக்கிறது.

அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஆனால், சிதறிக் கிடக்கும் தென்னங்குலை அது தலையில் விழுந்ததால் நிகழ்ந்த மரணம் என்று யூகிக்க விடுகிறது.

வீராவேசமாக வந்தவர்கள் இப்பொழுது குழம்பிப் போகிறார்கள். சற்று பயந்தும் போகிறார்கள். சுற்றிலும் பார்வையை விடுகிறார்கள்.

''இது மகா ருத்ர யந்த்ரம்... எங்கன கிட்டி?''— கேட்பது தலைச்சேரி சாஸ்தா கோயில் குருக்களான கோபாலன் நம்பூதிரி.

''மகாருத்ர யந்த்ரமோ... எங்கில்?''

''வல்லிய சக்தி கொண்ட யந்திரமாணு இது. ஜீவனை நசிப்பிக்கும். இது தொட்ட நீ எங்கன ஜீவிக்குன்னது...?''

அவர் அதை உடனடியாக சாஸ்தா கோயில் பிரசாதமான அரச இலை சந்தனத்தின் மேல் வைத்து விட்டு 'சாஸ்தாவே என்னை ரக்ஷி'— என்று பிரார்த் தித்துக் கொள்கிறார்.

"பஞ்சார கடல் தீவுல இது கிட்டி..." அவன் பயந்த படி முணுமுணுக்கிறான். அவர் முகத்தில் அதிதீவிர சிந்தனைகள். அவன் தொடர்கிறான். அருகில் மீன் உடம்பு ஒன்று வெட்டப்பட்டுக் கிடந்ததையும் கூறு கிறான்.

அவர் உடனேயே அந்த யந்திரத்தை இலைப் பிரசாதமோடு கையில் எடுக்கிறார். கைகளில் நடுக்கம் பரவியிருக்கிறது. தொடக் கூடாததை தொட்டுவிட்ட தாக கருதும் உள்ளுணர்வின் பிரதிபலிப்பு அது.

"சரி நீ போய்க்கோ... இதுபத்தி ஞான் மாதவன் நம்பூதிரியை சோதிச்சரியும்"— என்கிறார்.

அவன் ஒரு கும்பிடு போட்டுவிட்டு திரும்புகிறான். வலசம்மா உடம்பும், கிறிஸ்டோபர் உடம்பும் மார்ச்சு வரிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. உறவுக்காரர் கள் அடுத்தகட்ட சவ அடக்க காரியங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

# 13

சாரதாம்பிகை கோயில்!

முன்புறமாய் குடைபிடித்தபடி வளர்ந்திருக்கும் அடர்ந்த அறுநூறு வருஷத்திய ஆலமரம். அதனடியில் தேங்கி நிற்கும் காரில் இருந்து இறங்குகின்றான் தனஞ் ஜெயன். அதிசய காட்சியை பார்க்கிற மாதிரி இறங்கு



கிறாள் லிண்டா. அவள் தூக்கி வைத்துக் கொள்ள அவசியமேயின்றி துள்ளிக்கொண்டு அனிருத்!

சங்கரநாராயணன் வழியிலேயே இறங்கிக் கொண் டிருக்கிறார்.

"நீ போ தனா... நான் போய் குருக்களைப் பார்த் துட்டு அப்படியே நாவிதனையும் அழைச்சிண்டு வரேன்"— என்று தேனூத்து கிராமத்தின் துவக்கத் திலேயே இறங்கிக் கொண்டிருக்கிறார்.

கோயில் முன் நிற்பவன் சிறுபிராயத்தில் நடந்த சம்பவத்தை ஞாபகப்படுத்திப் பார்க்கிறான். அப் போதைக்கு இப்போது கோயில் இன்னமும் மோசமாகி விட்டிருக்கிறது.

லிண்டா கேட்கிறாள்.

"திஸ் ஈஸ் த டெம்பிள் தனா?"

"யெஸ் டார்லிங்..."— சொன்னபடி உள்ளே நுழைய காலெடுக்கிறான். காவி தீட்டி அது உதிர்ந்து போய் சுவரெல்லாம் பங்கரையாகிவிட்ட மதில் சுவரை யும், கரையான் புகுந்து விளையாடிவிட்ட உளுத்துப் போன கதவு நிலைகாலையும் கடந்து உள்ளே கால் வைக்கிறான்.

நெருஞ்சிமுள் கூட்டம், இளங்கோரைப் புற்களின் சகவாசத்தோடு காலைக் கசக்குகிறது, கர்ரக்... கர்ரக்... "முதல்ல கோயிலை சுத்தப்படுத்த சொல்லணும், இப் படியா போட்டு வைக்கிறது. அப்பாவும் அம்மாவும் ஆனாலும் மோசம்..."

அவன் முணுமுணுக்க லிண்டாவும் சேர்ந்து கொள் கிறாள். அனிருத்துக்கு ஆலமரமும் அதன் விழுதும் மிகப் பிடித்து விட்டபடியால் அதில் ஆடிக் கொண் டிருக்கிறது அவன் உடம்பு.

அவனையே பார்த்தபடி மரக்கிளை ஒன்றில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது முன்பு கலசம் இருந்த இடத்தில் அமர்ந்திருந்த கழுகு.

அதன் கழுத்தெல்லாம் முடி உதிர்ந்து பார்க்க கிழடு தட்டி குரூரமாக இருக்கிறது. மிக நீண்ட அலகு! நீண்ட கால்கள்! அலகால் காலை உரசியபடி அனிருத்தை பார்க்கிறது அது...

உய்ச்ச்... உய்ச்ச்... அவனிடம் உல்லாச ஆட்டம்.

உள்ளேயே தனாவும், விண்டாவும் சுற்றிவரத் தொடங்கியிருக்கின்றனர். இடவலமாகதான் கோயிலை சுற்றிவர வேண்டும். அந்த முறை இப்பொழுதும் மாறியிருக்கவில்லை.

சுற்றிவரவே வழியின்றி காட்டுச் செடிகளின் மதர்ப்பான வளர்ச்சி, ஊடே சாரை அவர்கள் வருவது தெரிந்து சீறியபடி செல்கிறது.

'ஆ!'— பார்த்துவிட்டு வாயைப் பிளந்துகொண்டு தனஞ்ஜெயனைக் கட்டிக் கொள்கிறாள் விண்டா. அவன் தட்டித் தருகிறான்.

"பயப்படாதே விண்டா... இது கோவிலை சுற்றி வரவேண்டிய பாதை, அம்மனை சப்பரத்துல வெச்சு தாத்தா சுத்திச் சுத்தி வந்திருக்கார். கிராமத்து ஜனங்கள்லாம் கலந்துக்கிட்டிருக்காங்க. ஹூம் எல்லாம் இப்ப பழைய நினைப்பு..."

அலுத்துக் கொள்ளும்போது காலை மோதுகிறது ஏதோ ஒன்று. குனிந்து பார்க்க கோபுரக் கலசம்!

"மைகாட்... இதுதானா, இங்க விழுந்துகிடக்கு?" தொட்டுத் தூக்குகிறான். நல்ல குடம் பருமன், பச்சை தட்டிப்போய் கிடக்கிறது. கூம்பான முனை. விழுந்ததில் அதுங்கல். உள்ளே ஏதோ இருப்பது பளுவாலும், சரசரவென்று அது அசைவதாலும் கேட்கிறது.



"வாட் ஈஸ் திஸ்!"

"இதுதான் கலசம்... எல்லா இந்து கோயில்லையும் இது இருக்கும் விண்டா. இது கோயிலுக்கு ஆன்ட்டனா மாதிரி. இதுதான் வானத்துல இருந்து கிரேஸை உறிஞ்சி கீழே கர்பகிரகத்துக்குள்ள இருக்கிற சுவாமி விக்ரகத்துக்கு கீழே இருக்கற பீடத்துக்கு அந்த சக்தியை அனுப்பும். அந்த சக்தி அங்க உள்ள யந்திரத்துல டெபாசிட் ஆகி மேல உட்கார்ந்திருக்கற சுவாமி சிலைல பாஸ் ஆகி நாம இரண்டு கையை குவிச்சு வணங்கும் போது நமக்கும் பாஸ் ஆகும்."

"அப்படின்னா கலசத்துக்கும், கீழே பீடத்துக்கும் கனெக்ஷன் உண்டா?"

"டெஃபனட்லி... ஒரு செம்புக் கம்பியை வெச்சு இணைச்சுருப்பாங்க. அதுக்குமேலே எனக்கு தெரியாது. ஆனா ஒண்ணு கலசம் ரொம்ப கிரேட் ஃபுல் பவர் வெசல் அது எனக்கு தெரியும்..."

சொன்னபடி நடந்து கோவிலின் முன்பக்கம் வருகிறான். கலசத்தை ஒரு ஓரமாக கீழே வைக்கிறான்.

"எங்க அனிருத்?" — விண்டா தேடியபடி கேட்க அவன் ஆல ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருப்பது தெரிகிறது.

"ரியலி அந்த சித்த வைத்தியர் ஒண்டர்புல்! இல்ல தனா!"

"ஆமாம்... எவ்வளவு பிரிஸ்க்கா இருக்கான். சரி வா உள்ள போய் பார்க்கலாம்." — தனஞ்ஜெயன் சொன்னபடி திரும்ப, தாழிட்ட பூட்டிட்ட கதவு வெறிக்கிறது.

"ஓ பூட்டியிருக்கு... குருக்கள் வரணும். வந்தாதான் திறக்க முடியும்..." சொல்லி நிமிர எதிரில் குருக்கள். உடன் சங்கர நாராயணன்.

"வரணும்... வரணும்..." அவரிடம் உற்சாகமான வரவேற்பு.

"நமஸ்காரம்"

"நமஸ்காரம்... நமஸ்காரம்... நீங்க வரப்போறதா சக்ரவர்த்தி ராஜ சாஸ்திரிகள் போன் பண்ணியிருந்தார். எனக்கு ஒரே ஆச்சரியம்."

"இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு?"

"அது எப்படின்னா... அமெரிக்கா போய் அங்கேயே கிட்டத்தட்ட செட்டில் ஆயிட்டேள். இனி எங்க இந்தியா பக்கம் வரப்போறேள்னு நினைச்சிண்டிருந்தேன். கோயிலையும் மண் மூடிடுத்து! எங்களுக்கெல்லாமும் இவ்வளவு தூரம் வந்து பூஜை செய்ய நேரமோ வருமானமோ இல்லை..."

"பேசினது போதும், கதவைத் திறங்க."

"திறக்கறேன். கர்ப கிரகத்தை மட்டும்தான் திறந்து காட்டுவேன். அந்த துர்தேவதை சன்னதியை திறக்க மாட்டேன். யாரும் திறக்கவும் கூடாது."

"நீங்க முதல்ல சன்னதியை திறங்கோ..."

தனஞ்ஜெயன் அவரை நிமிண்ட அவர் ஒரு சாவிக் கொத்தோடு பூட்டைச் சென்று தொட அது மளுக்கென்று ஒட்ட வைத்திருந்த இரும்புத்துண்டு விலக்கிக் கொண்டது போல திறந்து கொள்கிறது.

"பார்த்தேளா... பூட்டே இத்துப் போச்சு. உள்ளெள்ளாம் துரு. உருக்குலைஞ்சிருக்கு... தாத்தா இருந்தவரை இப்படி எல்லாம் இல்லை. நிதம் பூஜை தான். அமர்க்களம்தான்."



"இப்பவும் பண்ணலாமே — யார் தடுத்தா?"

கதவை திறந்தபடி சொல்கிறார் குருக்கள்.

"யாருக்கும் அதுக்கு விருப்பமில்லை. ஒருநாள் ராத்திரி இங்க தங்கிப் பாருங்கோ அப்ப தெரியும்..."

"என்ன தெரியும்?"

"அது வந்து... காட்டுக்குள்ள கோயில் இருக்கிறதால மிருகபயம். அதோட இது இப்ப கோயில் கிடையாது. உங்க தாத்தா சமாதியும் இங்க இருக்கறதால இது இப்ப கோயில் கிடையாது. சாஸ்திரப்படி இது யோக நந்தவனம்..." குருக்கள் எதையோ சொல்ல வந்து மாறுவது புரிகிறது.

அவர் பேசப் பேச உள் நுழைகிறான் தனஞ்ஜெயன்— விண்டா வெளியே அனிருத்தை அழைக்க போயிருக்கிறாள். அவள் அனிருத்தை நெருங்கும் போது பார்த்த காட்சி அவளை புல்லரிக்கச் செய்து விட்டது.

அனிருத் காலடியில் ஒரு நல்ல பாம்பு. அதை அந்த கழுகு வந்து கடித்துக் குதறிக் கொண்டிருக்கிறது.

"அனிருத்த்..." என்று அலறுபவளின் சப்தம் கேட்டு உள்ளிருந்து தனஞ்ஜெயனும் ஓடி வருகிறான். தொடர்ந்து குருக்கள், சங்கரநாராயணன். அனைவர் பார்வையிலும் இப்பொழுது அனல் பறக்கிறது. குருக்கள் மட்டும் சாதாரணமாக சொல்கிறார்.

"இது இங்க சாதாரண காட்சி அது என்னவோ தெரியல கோயிலுக்குள்ற ஒரு நல்ல பாம்பைக்கூட இந்த கழுகு நுழைய விடறதில்ல... இது எப்பப்பார் அதோ கலச பாகம் அதுலதான் உட்கார்ந்திருக்கும்..." —குருக்கள் கைகாட்ட அனிருத்தை ஓடிப்போய்

பற்றித் தூக்கி வருகிறான் தனஞ்ஜெயன். அப்படியே அண்ணாந்து கலச பாகத்தையும் பார்க்கிறான். மொட்டை தட்டிப்போய் அரசஞ்செடி முளை விட்டிருக்க, கண்ணை நெருடுகிறது அது.

"மொதல்ல கலசத்தை பிரதிஷ்டை பண்ணச் சொல்லணும். கலசம் எங்க கிடந்தது தெரியுமா?"

"எங்க?"

"கோவிலைச் சுற்றி வர்ற பாதையில்..."

குருக்கள் அதைக் கேட்டு கண்களில் சற்று பயத்தை காட்டுகிறார்.

"வாங்க உள்ற போகலாம்..." என்கிறார். உள்ளே திரும்ப கால் வைத்த நொடி இடுப்பில் இருந்து டார்ச் லைட்டை அடிக்கிறார்.

"பூஜை சாமானோட பதினோரு அகல் விளக்கும் எடுத்துண்டு வரணும் இங்க. வந்துருக்கேளா?" டார்ச் லைட்டை சுழற்றியபடியே கேட்கிறார்.

"வந்துருக்கேன். வந்துருக்கேன்..." என்று சங்கர நாராயணன் காரின் டிககி பாகத்தில் வயர் கூடையில் கிடக்கும் அவைகளை எடுத்து வர ஓடுகிறார்.

# 14

உள்ளே வெளிச்ச வட்டம் தனஞ்ஜெயன், லிண்டா அனிருத் மூவரையும் பிடித்து வைத்துக் கொண்டு கண்ணை கரிக்க விட்டுக் கொண்டிருக்கிறது.

"நீங்க இப்ப வந்துருக்கறதுல ரொம்ப சந்தோஷம். உங்க பிள்ளைக்கு உடம்பை ரொம்ப படுத்தறதா



சக்ரவர்த்தி சாஸ்திரிகள் சொன்னார். இனி எல்லாம் சரியாயிடும்.

ஒரு முக்கியமான விஷயம்..." இருட்டுக்குள்ளேயே பேச்சு வளர்கிறது.

"என்ன குருக்களே?..."

"முடி இறக்கி பூஜை செய்யற இன்னிக்கு ராப்பொழுது நீங்க உங்க குடும்பத்தோட இங்க தங்கணும். அதான் ஐதீகம்."

"இங்கேயா?"

"ஆமாம்... இல்லேன்னா தெய்வக் குத்தமாகி விடும்."

தனஞ்ஜெயன் யோசிக்கத் தொடங்குகிறான்.

"யோசிக்காதேள்... மலைக்காத்து நன்னா ஜில்லுன்னு இருக்கும். சமயங்கள்ல நல்ல சொப்பனம் வரும். அதுல உங்க தாத்தாவேகூட வந்து பேசலாம்... அவர் எப்படியிருப்பார் தெரியுமா?" கேட்டபடி குருக்கள் இருட்டுச் சுவர் பக்கமாக டார்ச்சை அடிக்க சுவற்றில் ஒரு ஓவிய உருவம். சற்றுமுன் பார்த்த வைத்தியர் போலவே இருக்கிறது.

"இவரா என் தாத்தா?"

"பின்னே... இவரே தான்..."

தனஞ்ஜெயன் ஆச்சரியத்தில் புரள்கிறான். எப்படி இது சாத்யம்?

சங்கரநாராயணன் கத்தரிக்கிறார். "முதல்ல பூஜையை முடியுங்கோ. பிறகு இதப்பத்தியெல்லாம் பேசலாம்."

''அப்படி இல்லேண்ணா... ஐதீகத்தை மீறப் படாது.''

''சரி தங்கறேன்...'' தனஞ்ஜெயனிடம் இருந்து அரைமனதாக பதில் வந்தது. சங்கரநாராயணனும் பூஜைப் பொருட்களுடன் வருகிறார். மளமளவென்று பதினோரு விளக்குகளிலும் எண்ணெய் கவிழ்ந்து திரி விழுந்து சுடர் பற்றுகிறது. இருண்ட அறை முழுக்க வெளிச்சம் பாய்கிறது. அதில் ராட்சஸ சிலந்திகளின் தூளியும், காட்டு வண்டுகளின் சுவர் வாசமும் நன்றாகவே தெரிகிறது. தாத்தாவின் படமும் பளிச்சென்று.

விண்டா எதார்த்தமாக வாசற்பக்கம் தலையை திருப்பும்போது நடுப்படியில் அந்த கழுகு அமர்ந்து உள்ளே நடப்பதை பார்த்தபடி இருக்கிறது. விண்டா உடனடியாக தனஞ்ஜெயன் தோளைத் தொட்டு அவனுக்கும் அந்தக் காட்சியைக் காட்டுகிறாள். தன் மகனை பாம்பிடம் இருந்து காப்பாற்றியதால் அதன் மேல் அவள் சிநேக வயப்பட்டிருப்பதை உணர முடிகிறது.

அனிருத் அதை பார்த்துவிட்டு வாசற்புறம் தைரியமாக செல்கிறான். ஏதோ கிளியைப் பிடித்து விளையாடும் ஆசை உள்ளவனாட்டம்.

''அனிருத் டோண்ட் கோ... தட் ஈகிள் இஸ் டேஞ்ஜர் டெவில்!'' தனஞ்ஜெயன் உள்ளிருந்தபடியே கத்துகிறான். ஆனால், அதை எல்லாம் அனிருத் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. அதை நெருங்கிவிட்டான்.

''ஹாய்...'' அதன் எதிரே கோயில் நிலைவாசலில் இருந்தபடி கை நீட்ட அதுவும் குஷியாய் அலகு பிளந்து சிறகைப் படபடத்து கூவுகிறது.

அனிருத்தை பிடித்து இழுக்கலாம் என்று புறப்பட்ட தனஞ்ஜெயனை குருக்கள் தடுக்கிறார்.



''நீங்க போக வேண்டாம். அது ஒன்னும் பண்ணாது. உங்க தாத்தா காலத்துல இருந்து இருக்கு...'' என்கிறார். அடேயப்பா அத்தனை முதுமையானதா...?

தனஞ்ஜெயன் வாசல் பக்கம் ஒரு பார்வையும், கருவறை பக்கம் மறு பார்வையுமாக இருக்கிறான். விண்டாவும்.

உள்ளே அம்பாள் சன்னதியில் அபிஷேக முஸ்தீபு...

சற்று புழுக்கமாக இருக்கிறது. தனஞ்ஜெயன் அப்படியே சுற்றிப் பார்க்கிறான். எதிரில் சக்ரவர்த்தி ராஜ சாஸ்திரிகள் சொன்ன தேவதா பிரதிஷ்ட அறை பூட்டு மாட்டிய நிலையில்... நான்கு படிகளோடு நிலையில்— ஒரு பலகை மரக் கதவு என்கிற அம்சங்களோடு... நான்கு படி மேலும் நான்கும் நான்குமாய் எட்டு துவார பாலக விக்ரகங்கள். சுடு மண்ணால் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டு அதுவும் உதிர்ந்து சரிந்த நிலையில் கிடக்கின்றன அவைகள்.

தனஞ்ஜெயன் பார்வை அவைகளை பார்க்கும் போது, குருக்களும் மறவாமல் அதை பார்க்கிறார்.

''இந்த அறையோட சாவி யார்கிட்ட இருக்கு?'' சாரதாம்பாளை குருக்கள் தொட்டு தைலம் பூசும்போது தனா கேட்கிறான்.

''அதோட சாவி யார்கிட்ட இருக்குன்னு தெரியாது. உங்க தாத்தா சமாதியில இருக்கறதா ஒரு நம்பிக்கை. அது எதுக்கு நமக்கு... ஒரு காலத்துல இதுக்குள்ள தான் யந்திரங்களும் அதற்கான தேவதைகளையும் உங்க தாத்தா உருவாக்கி வெச்சிருந்தார். இப்ப அவைகளுக்கு சக்தி போயாச்சு, இப்ப அதெல்லாம் வெறும் உலோகம்.''

சொல்லிக் கொண்டே சாரதாம்பாள் மேனி முழுக்க தைலம் பூசி முடிக்கிறார்.

தனஞ்ஜெயன் மனதுக்குள் சொல்லிக் கொள்கிறான். 'எப்பவும் அது உலோகம் மட்டும்தான்யா. யந்திரம் பூஜை எல்லாம் ஹம்பக்!'

குருக்கள் பார்க்கிறார்.

''என்னண்ணா பதிலைக் காணோம்.''

''என்ன பதில்...''

''என்ன பதிலா...? உங்க தாத்தா எத்தனாம் பெரிய சக்தி உபாசகர். காசியில இருந்தெல்லாம் பண்டிதர்கள் வந்து அவரைப் பார்த்து வித்யா யந்திரம் செய்து தரச் சொல்லி வாங்கிண்டு போவாளாம். அவரும் அத்தனை நேர்த்தியா அவைகளைச் செய்வாராம். நீங்ககூட இங்க இருந்து ஸ்ரீ வித்யா யந்திரத்தை எடுத்துண்டு போய் அமெரிக்கால வெச்சுக்கோங்கோ. படிப்பு பிரமாதமா வரும்...''

''படிச்சாதான் படிப்பு பிரமாதமா வரும்... யந்திரத்தால வராது...அடுத்து ஒரு செப்புத்தகட்டை யந்திரம்னு சொல்லாதீங்க. யந்திரம்னா அது ஏதாவது வேலை செய்யணும். உற்பத்தி செய்து தரணும்.''

''வாஸ்தவம்தாண்ணா... இந்த யந்திரங்களும் அந்த மாதிரிதான். இதுவும் வேலை செய்யும். நம்ம மனசுல சக்தியை உற்பத்தி செய்யும்.''

''நான் நம்பமாட்டேன். சாதாரண செப்புத் தகடு அதுல சில கோலங்கள்லாம் கலாபூர்வ விஷயம். அவ்ளோதான். அதுக்குமேல அதைப்பத்தி பேசி நேரத்தை வீணாக்க விரும்பலை...''

''அப்படின்னா இந்த சாரதாம்பிகைகூட வெறும் செப்பு விக்கரம்தானா உங்க மட்டுல...''

''ஆமாம்... நான் அப்படிதான் நினைக்கறேன்.''



''அப்ப இந்த நேர்த்திக் கடன்? குலதெய்வ வழிபாடு, முடி எடுக்கறதெல்லாம்...''

''பெரியவா ஆசைப்படறா, அவ்வளவுதான். அதுக்கு குறுக்க நிக்க எனக்கு விருப்பமில்லை.''

குருக்கள் வாயை மூடிக் கொள்கிறார். அதன்பின் நாவிதன் வந்து அனிருத்துக்கு முடி எடுத்து, பக்கமாய் ஓடும் கருப்பா நதியில் குளித்து வந்து, பூஜைகளை முடித்துவிட்டு குருக்கள் கிளம்ப ஆயத்தமாகிறார்.

பொழுதும் சாயத் தொடங்கிவிட்டது. ''அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன். நீங்க இங்கேயே தங்கி இருக்கலாம். காலைல வந்து பாக்கறேன்...''

கும்பிட்டபடி கிளம்பி மறைகிறார்.

சூரியன் சரிந்துவிட்டான். வானம் பொன் காற்றைக் குடித்ததுபோல மினுமினுப்பு காட்டுகிறது. பட்சிகளின் கூக்குரலில் பலப்பல ராகங்கள்.

ஆலமரம் விழுதுடன் ஆடிக் கொண்டிருக்கிறது.

சூழ்நிலை மிக ரம்யம். லிண்டாவுக்கு ரொம்ப பிடித்திருக்கிறது. அனிருத்தும் துளியும் நிரடல் இன்றி விழுதுடன் ஆட அந்த சுழுகு அவன் தோளிலும் கைகளிலும் அமர்ந்து அவன் விளையாட்டுப் பொருள் ஆகிவிட்டிருக்கிறது.

சங்கரநாராயணன் இரவு சாப்பிட டிபன் எடுத்து வருவதாக சொல்லிச் சென்றிருக்கிறார்.

தனஞ்ஜெயன் இப்பொழுது லிண்டா முன், ''லிண்டா வாட் யு திங்க் எபவுட் தி பூஜாஸ்...?'' அவன் கேள்வி முன் அவள் தோளை சிலிர்ப்பி,

''ஐடோன்ட் நோ... ஹவ் டு டெல்...'' என்கிறாள்.

"எல்லாம் கேலிக்கூத்து. குலதெய்வம்— அதுக்கு பூஜை— அப்பத்தான் அது சந்தோஷப்படும்கறதெல் லாம் சிரிப்பா வரலை..."

'எப்படி?''

"தெய்வம்கறது நம்ம பூஜைக்காக ஏங்கிக்கிடக்கற ஒண்ணா என்ன?... அது படைச்ச பூமி இது. அது படைச்ச மனுஷங்க நாமன்னா, நாமெல்லாம் அது முன்னால சுண்டக்காய்..."

"வாட் சுண்டக்காய்?"

"ஐ ஆம் சாரி... சின்ன துரும்புன்னேன். அந்த துரும்புகூட இல்லை. அதைவிட சின்னவங்க. நாம பூஜை பண்ணலைன்னு அது ஏங்குமா? பூஜைங்கறதே ஸ்தோத்ரம். புகழற விஷயம். புகழ்ச்சியை சராசரி மனுஷன்தான் விரும்புவான். சர்வ சக்தி படைச்ச கடவுளுமா விரும்பும்..."

"இதெல்லாம் லாஜிக்தானா..."

"யெஸ் லாஜிக்தான்... எனக்கு பயங்கரமா இடிக்குது... பூ. சீ... நம்ம அனிருத் ரத்தவாந்தி எடுக்க சண்டிமுண்டி காரணம்னார் நம்ம தாத்தா. பட் அந்த சித்த வைத்யர் ஜஸ்ட் ரண ஜன்னின்னு சொல்லி, ரீசனும் சொல்லி மருந்தும் தந்துட்டார். இதான் சரி. சண்டி முண்டியாம், துர்தேவதைகளாம். அதை பூட்டி வெச்சுருக்க ஒரு அறையாம். வாட் எ கிரேட் ஹிலேரியஸ்..."

அவன் பேசப் பேச கோயில் நிலைப்படி மேல் அமர்ந்திருக்கும் விண்டா கன்னத்தில் இரு கைகளையும் அண்டக்கொடுத்து அவனை ஒரு தினுசாக பார்த்து சிரித்தபடி சொல்கிறாள்.



"நோ தன்... இதுலெல்லாம் மீனிங் இருக்கு. கடவுள் பூஜையை எதிர்பார்க்காதுங்கறது வாஸ்தவம்தான். ஆனா நாம பூஜிக்கறது அதை குஷிப்படுத்த இல்லை. நம்ம நன்றியை காட்ட... ஆக்சுவலா பூஜை விரதம்லாம் கடவுளுக்கு இல்லை. நமக்குதான். அதனால் பலன் நமக்குத்தான்!"

"ஏய்...நீயா பேசறே. உனக்கு இதெல்லாம் சிரிப்பா வரலை...?"

"நோ... இங்க கிளம்பி வந்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷம். அற்புதமான லொகேஷன். வித்தியாசமான அட்மாஸ்பியர். சிம்பிளான மனுஷங்க. அனிருத்துக்கும் குணமாயிடும்கற நம்பிக்கை. கழுகு கூட நட்பு பாராட்டுற நிலைமை. ஓ! ஒண்டர்ஃபுல்."

அற்புதமாக சிலாகிக்கிறாள். தனா சிரிக்கிறான்.

"எது எப்படியோ நீ சொன்னபடி இந்த ட்ரிப்புல அனிருத் வியாதி என்னன்னு தெரிஞ்சது. சண்டி முண்டி அது இதுங்கற கற்பனை மிரட்டல் இல்லை." சொல்லிக் கொண்டே பார்ப்பவனின் பார்வை ஓரமாக வைக்கப் பட்டிருந்த கலசம் மேல் செல்கிறது.

"இதை இங்க எதுக்கு வைக்கணும். அதோட ப்ளேஸ்ல வெச்சுட்டா...?" சிந்திக்கிறான்.

"அதுதான் சரி என்று பட, உடனடியாக பேண்ட் சட்டையை மடித்துவிட்டுக் கொண்டு அந்த கலச முடன், அந்த மொட்டை கோபுரம் மேல் ஏற ஆரம்பிக் கிறான்.

"தன்... என்ன பண்ணப் போறீங்க?..."

"இந்த கலசத்த மேல வைக்கப் போறேன்."

"ஐய்யோ...இறங்குங்க— வேண்டாத வேலை."

"இல்ல விண்டா. என்னமோ மனசுல தோணுது."

"கடவுள் பத்தி நெகடிவா அவ்வளவு பேசிட்டு, கலசம் மட்டும் இருக்கணும்னா எப்படி?"

"ஏய் இது அழகுக்காக செய்யற விஷயம். நீ போட்டுக் குழப்பிக்காதே... மொட்டையா கலசம் இல்லாத கோபுரத்த பார்க்க என்னவோ பண்ணுது."

சொல்லிக் கொண்டே விறுவிறுவென்று ஏறி கலசத்தை அங்கு நிலை நிறுத்தியும் விட்டான்.

அப்படியே அந்த உச்சியில் இருந்து ஒரு பார்வை. சுற்றுச் சூழல் பிரமாதமாக தெரிகிறது. அந்த பக்கமாய் பச்சை மலை. இந்த பக்கமாய் தேக்கடியை நோக்கிய காடுகள். முதுகுப் பக்கமாய் முரண்டு பிடித்தபடி ஓடும் கருப்பா நதி. ஓ எத்தனை அழகு!

ரசித்துக் கொண்டிருக்கும்போதே "தனா..." என்று ஒரு குரல் காதில் வந்து விழுகிறது.

"யார் அழைப்பது?" — பார்வை சுற்றிச் சுற்றி பார்க்க காட்டுக்குள் இருந்துதான் வருகிறது, சப்தம். "யாரது?" தனஞ்ஜெயனை பதட்டம் தொற்றுகிறது. மளமளவென்று கீழ் இறங்குகிறான்.

"ஹாஸ் கால்டு?" — விண்டா கேட்கிறாள்.

"ஐ டோண்ட் நோ... சம்திங் ராங். நீ இங்கேயே இரு. எங்கையும் போயிடாதே, நான் வந்துடறேன்."

தனஞ்ஜெயன் பாய்ந்து வெளிச் செல்கிறான்.

"தன்... பீ கேர்ஃபுல்" விண்டாவிடமும் பதட்டமான கரிசனம்!

# 15

தலைச்சேரி...

சாஸ்தா கோயில் பிரசாத இலைமேல் உள்ள மகாருத்ர யந்திரத்தை பார்த்தபடி தாடையை வருடிக் கொண்டிருக்கிறார் மாதவன் நம்பூதிரி. அருகில் சாஸ்தா கோயில் குருக்களான கோபாலன் நம்பூதிரி.

"இது எங்கன உனக்கு கிட்டி?" — என்ற கேள்விக்கு மாதவன் நம்பூதிரி வழி மூலங்களைச் சொல்லி முடித்திருக்கிறார்.

"இது ஒரு குற்ற யந்திரம். அதே இங்கனமாகி, இதை குருவாயூர் குளத்துநாயர் ஜனிச்செடுத்து... ஞான் இதை கடலில் வீசி எறிஞ்சது... கடலின் மீன் விழுங்கிப் பின் அது மறிச்சுப் போய், அதன்பின்னே மீன்காரியும், அவள் மகனும் மறிச்சுப் போய்...

ஆ குளத்து நாயருக்கு நூறு வயசுக்கு மேலாகிப் போய்... பட்சே யந்திர ஞானம் துள்ளியுமில்லா! துஷ்டன் அவன்!"

சபிக்கிறது! மாதவன் நம்பூதிரியின் உதடுகள்...

"ஙுங்கள் எந்தா ஆயாளிடம் போய்...?"

"நான் வீரபத்ர ஸ்வாமி விரதம் தரிச்சு பூஜிக்க பிரேமம் கொண்டு, ஆயாளிடம் மகாருத்ர யந்திரம் வேண்டிக் கேட்டதானு. பட்டே ஞானமில்லா ஆமனுஷன் குற்ற யந்திரம் தந்து என்னை கொல்லப் பாத்து... துஷ்டன், பரமதுஷ்டன் அவன்.

அவனிண்ட குற்றமே அவனைக் கொல்லும்...'' கருவுகிறார் மாதவன் நம்பூதிரி, அது நிஜமாகப் போவது தெரியாமல்.

வரிசையாக விக்ரகங்கள் மரப்பெட்டியில் இருந்து வெளியே எடுத்து படுக்கைவாட்டில் அடுக்குகிறார் ராகவன் குட்டி நாயர். எதிரில் குளத்து நாயர். அவர் பார்வையில் பரவசம் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது.

''பலே ராகவா... நீ வல்லிய சிஷ்யனானு...'' என்கிறார் உற்சாகமாக.

''ஆஹா... என்ன ஒரு தேஜஸ்... என்ன ஒரு சிருஷ்டி.'' சிலாகிப்பு தொடர்கிறது அவரிடம்.

''குருவே இதை கொண்டுவரப் பட்டபாடு எனக்குதான் தெரியும். வழியில இரண்டு தடவை கார் பஞ்சரானது. ஒரு தடவை போலீஸ் வழிமறிச்சு, ஏதாவது கடத்தலான்னு கேட்டு சோதனை செஞ்சுது. தப்பிக்கப் பட்ட பாடு பெரும்பாடு.''

''அதான் வந்துட்டேல்ல... இனி என்ன, இவைகளை இனி ஞான் வெச்சு பூஜை செய்யும். சகல அற்புத யந்திரம் இது. பாரதத்து சகதேவனுக்கு பிறகு இதன் சூட்சமம் பற்றி அறிஞ்ச ஒரே ஆள் சந்திர மௌலீஸ்வரய்யர்தான். கோலத்தில் ஒரு கோடு தப்பானாலும் பலன் மோசமாகும். நான் கூட ஒரு மகாருத்ர யந்திரம் செய்ய படாதபாடு பட்டு... செய்தும் பலனில்லா... அது தப்பிப்போய் — அதை வேறு ஒரு ஆளுக்கு கொடுத்துட்டேன்.

ஆனா இது அப்படி இல்லை. சந்திரமௌலீஸ்வரய்யர் போலவே இவைகளை நான் ஆராதிப்பேன்'' சொல்லியபடி நொண்டிக் கால்களுடன் நெருங்கி வரும் குளத்து நாயர் சண்டிமுண்டி விக்ரகத்தை எடுத்து



நிமிர்த்திப் பிடிக்கிறார். கண்ணுக்கு நேராக தூக்கிப் பிடித்தும் பார்க்கிறார்.

திடீரென்று அதன் கண்கள் திறந்து கொண்டு குளத்து நாயரைப் பார்ப்பது போல ஒரு பிரமை அவரிடம். சட்டென்று விக்ரகத்தை கீழே படுக்க வைக்கிறார்.

''ஏன் குருவே ஏன் உடனே கீழே வெச்சுட்டீங்க?''

''அந்த விக்ரகம் என்னை பாக்குது... உயிர் விழிகளோட...!''

''நிஜமாவா...?''

''ஆமாம்... அதோ சக்தி போகலை...''

''வாஸ்தவம்தான் குருவே... தமிழ்நாட்டு எல்லை வரை கழுகு ஒண்ணு எங்க காரை துரத்திக்கிட்டே வந்துச்சு, நான்கூட ரொம்ப பயந்துட்டேன்.''

''என்னது, கழுகு துரத்தி வந்துச்சா?''

''ஆமாம்?''

''அது சந்திரமௌலி பிண்டம் போட்டு பூஜிச்ச பட்சி தேவதையல்லவா?''

''எனக்கு என்ன தெரியும்?''

குளத்துநாயர் யோசனையோடு நொண்டிக்கால்களால் விந்தி நடந்து ஸ்விட்ச் போர்டு அருகில் போய் நிற்கிறார். அதை கவனிக்காமல் ராகவன் குட்டி வீரபத்திரர் விக்ரகத்தை நிமிர்த்தி தரையில் வைத்து, அதன் மகாருத்ர யந்திரத் தகட்டை எடுத்து அதன் அடியில் காலடியில் பரத்துகிறார்.

குளத்துநாயர் இதை கவனிக்காமல் சுவிட்சைப் போட கையை உயர்த்தி போர்டைத் தொடவும், தீப்பொறி பறக்க அவர் கையை பற்றுகிறது மின்சாரம்... எப்படி எதனால் என்றெல்லாம் யூகிக்கவே இடமில்

லாதபடி உறுதியாக பற்றி அவரை உலுக்க ஆரம்பிக்கிறது.

''ஏய்ய்...'' அதற்குமேல் சப்தம் வராதபடி குளத்து நாயர் வாய் கிட்டிக் கொள்ள சப்தம் கேட்டு நிமிரும் ராகவன் குட்டிநாயர் பார்க்கும் அந்த க்ஷணத்தில் குளத்துநாயர் உடம்பு ரத்தம் உறிஞ்சப்பட்டு கருமை பூக்கத் தொடங்குகிறது.

''குருவே...'' பதட்டத்தில் அவரை பற்றி இழுக்கப் போய் கைவைத்த ராகவன் நாயரையும் பற்றிக் கொள்கிறது மின்சாரம்...

படபடவென வயர்ப்பாதையில் சப்தமும், புகையும் பெருக பொத்தென்று சரிந்து விழும் இரு தேகங்களையும் மீறி மின்பாதை முழுக்க தீப்பிடிக்க, அதிக மரச் சட்டங்களால், நிலைக்கட்டைகளால் ஆன கேரளத்து பாணி ஓட்டுவீடு பக்கென்று தீப்பிடிக்குள்ளாக ஓங்கி எரிகிறது. நிமிர்ந்து நிற்கும் வீரபத்ர சுவாமி விக்ரகம் அந்த காட்சியை ரசிக்கிற மாதிரி தோன்றுகிறது.

தீப்பிழம்புகள் வேகமாக வீட்டின் உட்பரப்பு, துணிமணிகள் என்று தாவிப் பற்றுகிறது.

தற்செயலான நிகழ்வா... இல்லை உள் நுழைந்த விக்ரகங்கள் காரணமா என கண்டறிய முடியாதபடி திகுதிகுக்கும் தீ நாக்குகள் அந்த மலைநாட்டில் தனித்து நிற்கும் வீட்டை எரிப்பதை தொலைதூர வீடுகளில் வசிக்கும் சிலர் பார்க்கிறார்கள்.

ஓடி வருவதற்குள் உள்ளே குளத்துநாயர் மட்டுமின்றி ராகவன்குட்டி நாயரும் பற்றி எரிய வீரபத்ர சுவாமியும் சேர்ந்து எரிய...

# 16

தொலைபேசி சப்தம் கேட்டு காதைக் கொடுக்கிறார் தாத்தா தணிகாசலமூர்த்தி.

''யாரு தாத்தாவா?... நான் தேனூத்து குருக்கள் பேசறேன்.''

''என்னடா விஷயம்?''

''திட்டப்படி பூஜை செய்து முடிச்சு, விண்டாவையும் உங்க பேரனையும் கோயில்ல தங்க வைச்சுட்டேன். தனஞ்ஜெயனையும் சாமர்த்தியமா பிரிச்சு கோயில் பக்கம் போகவிடமா செய்துட்டேன். உங்க பிள்ளை சங்கரநாராயணன்கூட இப்ப எங்க வீட்லதான் இருக்கார். இன்னிக்கு ஒரு ராத்திரி போதும்... அவங்க இரண்டு பேரும் பயத்தாலேயே செத்துப் போயிடுவாங்க...''

''நல்லது. அப்படியே நடக்கட்டும். அறைக் கதவை திறந்து விட்டியா...''

''இல்ல... அவசியமில்ல. உள்ள இருந்தாலே போதும். எனக்கு அதை திறக்க தைரியமில்லை. மன்னிக்கணும் நீங்க...''

''போடா முட்டாப் பயலே... அதை திறந்து விட்டிருந்தா அவா சாவு உறுதியாயிருக்குமேடா. நாளைக்கு மட்டும் அவா சாகாம இருக்கட்டும் உன்னை என்ன பண்றேன் பாரு''

தாத்தா கோபமாக தொலைபேசியை முடக்கிவிட்டு திரும்புகிறார். காத்திருக்கிறார் போல ராஜாமணி.

''என்ன எதாவது நல்ல செய்தியா?''

''அது இனிதான் வரணும். இரண்டு பேரையும் உள்ற வெச்சு அடைச்சாச்சு. முட்டாப்பய விக்ரக அறை கதவைத் திறக்காம விட்டுட்டான். ஏண்டான்னா பயமா இருக்காம். அங்கதான் நெருடறது.''

''என்ன நெருடல். உள்ள தங்கினாலே போதும். பாணாமுனி போடற சப்தம் ஒண்ணு போதுமே அவா நடுங்க...''

''எப்படியோ போய்ச் சேர்ந்தா சரி. காதல் கந்திரிக்கான்னு தனாவை மயக்கி கலயாணம் பண்ணிண்ட. அமெரிக்க பேய் அந்த விண்டா, அதுக்கு பிறந்த குரங்கு அந்த அனிருத்.

சூரிய மாதுளைப் பொடியை அமெரிக்காவரை விபூதிப் பிரசாதம்னு அனுப்பி அந்த பையனுக்கு கொடுக்க வெச்சு ரத்தம் கக்கச் செய்து படாதபாடு பட்டதுக்கு பலன் மட்டும் கிடைக்காம போகட்டும்—பிறகு பாத்துக்கறேன்.''

''இதெல்லாம் பிரகதாவுக்கு தெரியுமா?''

''மூச்ச்... தெரியாது. என் பிள்ளை சங்கரநாராயணனுக்கும் தெரியாது. தெரியவும் கூடாது. உன்னோட என்னோட போகட்டும். சக்ரவர்த்தி சித்தப்பாவுக்கு மட்டும் தெரியும்.

கொலைய நாம செஞ்சாதான் பாவம். யந்திரங்களும் துர்தேவதைகளும் செய்யப் போறதுன்னு சொல்லி சரின்னுட்டார்...''

''அப்ப மூணு மாசத்துல நர்மதா கழுத்துல தனஞ்ஜெயன் தாலி கட்டிடுவான்?''

''கட்டணும்... கட்ட வைக்கணும்.''



தணிகாசல மூர்த்தி தாத்தா மிக அழுத்தமாக சொல்லி முடிக்கிறார்.

அதே சமயம் தேனூத்து மலைக்காட்டில் குருக்களோடு தனஞ்ஜெயன். காலில் பெரிய மாவுக்கட்டு...

''குருக்களே நாம இப்ப எங்க இருக்கோம்?''

''இது ஒரு மலைப்பளிங்கன் குடிசை. நல்லவேளை நான் போட்ட சப்தம் கேட்டு என்னை காப்பாத்த வந்தீங்க. இல்லன்னா அந்த ஒத்தை யானை கிட்ட மாட்டி செத்துப் போயிருப்பேன் நான்.''

''அங்க கோயில்ல விண்டாவும், அனிருத்தும் தனியா இருக்காங்க நாம இப்ப அங்க போகணும்.''

''இந்த காலோடையா... வேண்டாம் காத்தால போய் பர்த்துக்கலாம். அம்பாள் அங்க அவாளுக்கு காவல் இருக்கா...''

''என்கிட்ட இந்த பெனாத்தலெல்லாம் வேண்டாம். அவா ஊருக்குப் புதுசு. அதுலையும் அனிருத்துக்கு என்னை பார்க்கலேன்னா தூக்கமே வராது...''

''வேண்டாண்ணா. சொன்னா கேளுங்கோ. நான் இப்பதான் போய் பாத்துட்டு வந்தேன். படுக்க துணிமணி, துப்பட்டிகூட கொடுத்துட்டு வந்தேன். பயமில்லாம க்ஷேமமா இருக்கா...''

''சரியான அராத்துய்யா நீர். இப்படியா கத்தி ஓடி வரச் செஞ்சு பள்ளத்துல விழ வைச்சு காலையும் ஒடிச்சு...''

தனஞ்ஜெயனின் புலம்பலை குருக்கள் விடாது சமாளிக்கிறார். அவனே அலுத்துப் போகிறான். காலையும் தூக்கி வைக்க முடியவில்லை. அத்தனை பெரிய மாவுக்கட்டு...

''எதுக்கு இத்தனை பெரிய கட்டு... எனக்கு கால் ஒடியும்னு முன்னமே தெரிஞ்சு எல்லாம் வெச்சிருந்த

மாதிரி இருக்கு...'' கிட்டத்தட்ட உண்மையை நெருங்குகிறான். குருக்கள் சிரித்து மழுப்புகிறார்.

தனது உத்யோகமே மாறிப் போன சஞ்சலம் வேறு... ''பார்த்து காரியத்தை முடியும்காணும். உம்ம இரண்டு தங்கையும் கடைத்தேற நான் வழி செய்றேன்'' என்று தணிகாசல மூர்த்தி தாத்தா ஆசை காட்டியதன் விளைவு.

அவிந்து போய்விட்ட ஆலயத்தின் அசுர சக்திகள் சமாதியாகாமல், இப்படிகூட ஒரு வாழ்க்கையை தர வழி செய்யும் என்று கனவில்கூட நினைத்திராத போது இப்படியும் வழிகள்...

எல்லாம் சரி... திட்டமிட்டபடி எல்லாம் நடக்குமா?— நடுநடுவே குருக்களை கேள்வி கொத்தி எடுக்கிறது. மனசில் உறுத்தல் வேறு.

நேராக கொலை செய்வதைவிடவும் இப்படிச் செய்வது மகாபாவம் என்று புத்திவேறு தான் படித்த தர்ம சாஸ்திரத்தை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கின்றது.

'பேசாமல் போய் அவர்களை அங்கு படுக்க வேண்டாம் என்று சொல்லி விடுவோமா?' ஒரு வினாடி இப்படித் தோன்றுகிறது. மறுவினாடி வேறு மாதிரி புத்தி திரும்புகிறது.

'காதல், கீதல் என்று தான்தோன்றித்தனமாக போனதற்கு இது ஒரு தண்டனை...' என்று கொள்ளலாமா?

தண்டனை தர நாம் யார்...?

குழம்பித் தவித்து அந்த குடிசையின் மெல்லிருட்டுக்குள் நொதித்துப் போனவர் இறுதியாக இது தவறு, இது பாவம் என்ற முடிவுக்கு வந்து, ''தனஞ்ஜெயன் வாங்க போகலாம்...'' என்று அழைக்கிறார் அவனை.



''எங்க?...''

''கோவிலுக்குத்தான். நாம இனி இங்க இருக்க வேண்டாம். கோவில்ல அவாளை விடறதும் பாவம்...''

''என்னய்யா இது பாவம் அது இதுன்னுண்டு...''

''மன்னிச்சுடுங்கோண்ணா... அங்க அசுர சக்திகள் அறைக்குள்ள இருக்கு. அவை உங்க மனைவி குழந்தையைக் கொல்லணும்கறது தான் எங்க திட்டம். உங்களை இங்க வரவழைச்ச நோக்கமே அது தான். எனக்கு மனசு கேக்கல. அதான் உண்மையை சொல்லிட்டேன்.''

தனஞ்ஜெயன் ஒரு வினாடி நெஞ்சை கையில் பிடித்துக் கொள்கிறான்.

''அடப்பாவிகளா... எதுலதான், ஏமாத்தறதுன்னு இல்லியா?''

''என்ன பண்றது... என்னையே உங்க தாத்தா கண்ணை கட்டிட்டார்... அவரோட சாதிவெறி இப்படி செய்ய வெச்சுடுத்து...''

''மண்ணாங்கட்டி... சரிசரி கிளம்புங்க...''

இருவரும் கிளம்புகின்றனர்!

''சீக்கிரமா நடங்கோ...அந்த சக்திகளை நினைச்சா எனக்கு பயமா இருக்கு... ராத்திரில அதுக போடற சப்தத்தை கேட்டவன் நான். அதனாலேயே கோயில் பக்கம் ராப்பொழுதுல போகறத நிறுத்தினவன்.''

''அசுர சக்தியாவது ஆட்டுகுட்டியாவது... நான் அதை நினைச்சு கவலையே படலை குருக்களே. உங்க நரித்தனமான திட்டத்தை நினைச்சுதான் வருத்தப் படறேன். தாத்தா இவ்வளவு மோசமா இருப்பார்னு நான் நினைக்கவேயில்லை.''

"ஏண்ணா... நான் போட்டு விட்டுட்டதா அவா நினைச்சுக்க போறா. என்னைக் காப்பாத்திடுங்கோ..."

"தவறு செய்ய முயற்சி செஞ்சாலும் உம்மால முடியல பார்த்தீரா. இந்த மனசு உம்மை காப்பாத்தும். ஆனா இனி வாழ்க்கைல தவறு பண்ண முயற்சி கூட செய்யக்கூடாது. ஞாபகம் வெச்சுக்கும்..."

"நிச்சயமாண்ணா... நிச்சயமா. என்னை மன்னிச்சுடும்..." நடக்கும்போதே அப்படியே கால்பக்கம் சரிகிறார் குருக்கள்.

# 17

கோயில்!

பதினோரு தீபங்களும் அணையும் நிலையில்...

அனிருத், விண்டா மடியில் தூங்கி விட்டிருக்கிறான்.

அந்த அமெரிக்கப் பெண் எந்த சதி பற்றியும் அறியாமல், மகனை வருடியபடி சன்னதி முன் அமர்ந்து கொண்டிருக்கிறாள்.

திறந்திருக்கும் நிலைகால் மேல் அந்தக் கழுகு நானிருக்கிறேன் என்கிற மாதிரி அமர்ந்து கொண்டு காவலிருக்கிறது.

சில வண்டுச் சப்தமும்...சில பூச்சிகளின் குறுக்கீடும் அவ்வப்போது தொந்தரவு செய்து கொண்டிருக்க, அந்த மெல்லிருட்டும் சூழலும் விண்டா மனதில் இனம் புரியாத பயத்தை விதைத்திருக்கின்றன.



'எப்பொழுது வருவான் தனஞ்ஜெயன்... என்ன ஆனது அவனுக்கு...?' வழிமேல் விழிவைத்து கேள்வியும் பயமுமாய் காத்திருக்க, வாசற்புறம் அரவமும் கேட்கிறது.

தனஞ்ஜெயனும் வருவது தெரிகிறது.

"தன்..." உடைந்த குரலோடு மகனைச் சுமந்தபடி எழுந்திருக்கிறாள், அந்த வெள்ளைத் தேவதை. "லிண்டா... டோண்ட் கெட் ஃபியர்— நான் வந்துட்டேன்." நொண்டியபடி உள்ளே நுழைகிறான்.

"என்ன ஆச்சு டியர்...?" துடிக்கத் தொடங்குகிறாள்.

"நத்திங் நத்திங்... ஜஸ்ட் ஃப்ராக்சர். அனிருத் தூங்கிட்டானா?"

"அப்பவே...? உங்களுக்கு எப்படி இப்படி...?"

"உக்காரு சொல்றேன்" — அப்படியே ஓரமாக உட்கார ஆரம்பிக்கிறான்.

"அண்ணா கிளம்பிடுங்கோ பயமா இருக்கு..." விக்கிரக அறையை பார்த்தபடி குருக்கள் பதறுகிறார்.

"உக்காருங்கய்யா... பயமாம்! துஷ்ட சக்தி, அசுர சக்தின்னு... எல்லாம் மனப்பிரமை சுவாமி. இது இண்டர்நெட் யுகம் சுவாமி. உட்காரும்."

"ஐயோ... புரியாம பேசறேளே... இவ்வளவு நாழி இவா உயிரோடு இருக்கறதே எனக்கு ஆச்சரியம்."

"அட சொன்னா கேளுமய்யா... உம்ம பயத்தை போக்கவாவது இன்னிக்கு முழு ராத்திரி இங்க இருந்தே தீரணும்."

தனஞ்ஜெயனின் விடாப்பிடியும் குருக்களின் பயமும் விண்டாவை சற்றுக் குழப்புகிறது.

"தன்... வாட்ஸ் கோய்ங் ஆன் ஹியர்... ஒய் ஹி ஸ்கேர்ட்?"

"நத்திங்... இன்னும் இரண்டு நாள்ல நாம யு. எஸ். கிளம்பிடுவோம். அப்ப நான் சொல்றேன் எல்லாத்தையும் விலாவரியா... சாரி டியர்— நாம இந்தியா வந்திருக்கக் கூடாது." — அவன் பேசுவதை, குருக்களின் பயத்தை, கழுகும் வேடிக்கை பார்த்தபடி இருக்கிறது.

தனஞ்ஜெயன் பார்வை இப்பொழுது விக்கிரக அறை பக்கம் திரும்புகிறது.

"இதுலதான் அந்த அசுர சக்தி படைச்ச விக்ரகங்கள் இருக்கா?" கேட்கிறான்.

"ஆ... ஆமாம்..."

"திறந்து பார்த்துடுவோம்..."

"வேண்டாம்... சொன்னா கேளுங்கோ..."

"சும்மா இருமய்யா..." எழுந்து கட்டுக்காலுடன் கெந்தி நடந்து பூட்டைத் தொட அது பொசுக்கென்று கையில் விழுகிறது.

"என்னய்யா பூட்டு இது... தொடக்கூட இல்லை திறந்திடுச்சே..." பூட்டை கீழே எறிந்துவிட்டு கதவைத் திறக்கிறான்.

"ஐய்யோ..." — அலறுகிறார் குருக்கள்.

"சும்மா இருங்கய்யா..." — பதில் அலறலோடு நுழைபவனை இருட்டு பிசைகிறது. வெளியே திரும்பி வருபவன் ஒரு விளக்கை எடுத்துப் பிடித்தபடி உள் நுழைய குருக்களும் நடுங்கும் விழிகளுடன் எட்டிப் பார்க்க உள்ளே காலியறை வரவேற்கிறது.

"என்னய்யா ஒண்ணையும் காணோம். என்னவோ விக்ரகம், சக்ரம், எந்திரம்னு என்னென்னவோ அளந்தீங்க..."



தனஞ்ஜெயன் கேட்பதில் கிண்டலின் கொப்பளிப்பு. 40 பக்க நோட்டு மட்டும் கண்களில் படுகிறது. "என்ன இது?" என்று எடுத்து பக்கங்களை சீட்டுக் கட்டை சிடுக்கெடுக்கிறாற்போல கட்டைவிரலால் நீவிப் பார்க்கிறான்.

அந்த நாளைய காகிதம் பொடிகிறது.

விளக்கொளியில் அதை பிரித்தால் உள்ளே சந்திர மௌளீஸ்வரய்யரின் கையெழுத்தில் குறிப்புகள். பல பக்கங்கள் கிழிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக யந்திர விக்ரகங்கள் பற்றிய குறிப்புகளையும், அவைகளுக்கு நைவேத்தியம் செய்ய மௌளீஸ்வரய்யர் பட்ட பாட்டையும் விவரித்திருந்த பக்கங்களை ராகவன் குட்டி நாயர் கிழித்து எடுத்துக் கொண்டு விட்டிருக்கிறார். மிச்சமிருக்கும் பக்கத்தில் தனஞ்ஜெயன் எதிர்பார்ப்பது போலவே விஷயங்கள்.

'இந்த யந்திரம் தயாரிப்பது, விக்ரக பரிவர்த்தனை என்னுடன் போகட்டும். எல்லாம் கனவென்றாகட்டும். அவ்வளவும் பொய் என்று சந்ததியினர் நினைத்தாலே எனக்கு மகிழ்ச்சி... அவர்களும் அவ்வாறே நினைப்பார்கள்.

பல நேரங்களில் ஆத்திகனை விட நாத்திகன் நிம்மதியோடு இருக்கிறான். எனது அனுபவங்கள் மிக வித்தியாசமானவை. என்னை யாரும் கேட்டாலும் நான் அனைத்தும் பரிட்சார்த்த முயற்சி அவ்வளவும் தோல்வி என்பேன். ஏனென்றால் இதன் வெற்றி மிக ஆபத்தானது. அதனால்தான் சில சக்தி ரகசியங்கள் உலகம் அறியப்படாது பாதுகாப்பில் இருக்கிறது. அது அப்படியே இருக்கட்டும். மனிதன் தன் மூன்றாம் கண்களைத் திறந்து எந்த ஒரு விஷயத்தையும் பார்க்க வேண்டாம். அது அந்த குலத்துக்கே அழிவை உண்டாக்கும்.

பேசாமல் காக்கை கழுகாக பிறந்திருக்கலாம். கழுகு என்றவுடன் இந்த கோயில் ராஜாளிபற்றி என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

நான் இந்த கோயிலில் நுழைந்த நாளில் இருந்து அது என் நண்பன். ஹோமப் பிரசாதங்களை சாப்பிட்ட அதற்கு ஆயுள் விருத்தியாகும் என்று நம்புகிறேன்.

என் சந்ததியினர், அல்லது இதை வாசிப்பவர்கள் யாரும் அதைக் கண்டால் அதற்கு உணவிட்டு நட்பு பாராட்ட வேண்டுகிறேன். நான் இறந்தும், அதன் மூலம் ஐக்கியப்பட்டு என் சந்ததியினரை இந்த பாதைக்கு வராமல் பார்த்துக் கொள்வேன்.

பொதுவில் தாந்திரீக வாழ்க்கைக்கு போனவர்களுக்கு விஷத்தால் முடிவு என்கிறது மந்திரசாஸ்திரம். நான் அதை மீறிய உபாசகன். என் சந்ததியினரும் மீறட்டும். என் சந்ததியினர் பாம்புகளிடம் இருந்து தங்களை காத்துக் கொள்ளவும். என்னிலிருந்து ஏழு தலைமுறைக்கு நாகதோஷம் தொடரும் என ஜாதக ரத்னம் மூலம் அறிகிறேன்.

இந்த மண்ணில் இருந்தால்தான் அதுவும். அந்நிய மண்ணாயின் அதுவுமில்லை.

எண்ணத்தில தூய்மை, வாழ்க்கையில் நேர்மை. இதுபோதும் ஒரு மனிதனுக்கு... என் சந்ததியினர் இதைமட்டும் கொண்டு வாழ்வார்களாக...

என்னை ஆட்டி வைக்க நினைத்த சக்திகளை உரிய நேரத்தில் நெருப்பு விழுங்கும். அந்த நெருப்பு பொய்களையும் எரிக்கட்டும். ஆசையை எரிக்கட்டும். துரோகங்களையும் எரிக்கட்டும்.'

தாசானுதாசன்
சந்திரமௌளீஸ்வரன்.
9-9-1951.



படித்து நிமிருபவனை குருக்கள் பார்த்து கேட்கிறார்.

"என்ன எழுதியிருக்கு?"

"எல்லாம் பொய்யாம். பொய்யாதான் நாங்க நினைக்கணுமாம். ஆனா பின் பாதி விஷயங்கள்ல அவர் சில விஷயங்களை மூடி மறைச்சு எல்லாம் தன்னோட போகட்டும்னு சொல்லியிருக்கார். எனக்கே குழப்பமாயிருக்கு.

இந்த ராஜாளி பத்தியும் எழுதியிருக்கார்... என் தாத்தாவோட ஸ்னேகிதன் இது. இன்னிக்கு என் பிள்ளைக்கும் ஸ்நேகிதனாயிடுத்து...!"

"என்னன்னமோ சொல்றேளே... விக்ரகம் பொய் அது இதுன்னு... இங்க வந்து கொடூர சப்தங்களைக் கேட்டவன் நான்... எல்லாம் எப்படி பொய்யாகும்?"

"பொய்தான்... என் வரையில நான் எதையும் கண்ணால பாத்தாதான் நம்புவேன். உணர்ந்தாதான் ஒத்துக் கொள்வேன். இந்த நோட்டே கூட என் தாத்தா எழுதினதுதானான்னு சந்தேகப்பட தயங்கமாட்டேன்.

என்னா நான் மனுஷன். இண்டர்நெட் உலகத்து மனுஷன். தெரிஞ்சுதா..."

"அப்போ."

"வாய மூடுங்கோ... விடியட்டும். ஊருக்கு கிளம்பறோம்."— தனஞ்ஜெயனின் விளக்கம்— குருக்களின் குழப்பம்—எல்லாமே விண்டாவுக்கு புதிராக, புதிதாக இருக்கிறது.

எந்த கவலையுமின்றி ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறான் அனிருத்!

விடிகிறது!
காலைப் பொழுது அற்புதமாக இருக்கிறது.

பறவைகளின் கூக்குரல்— பனியின் உதிர்வு— இதமான வெளிச்சம் எல்லாமே ரசிக்கும்படி இருக்கிறது.

சோம்பல் முறித்தபடி அறைக்குள் இருந்து வெளியே வருகின்றனர் நால்வரும்...

ஆலமரத்தடி ஓரத்தில் நிற்கும் காரைக் கிளப்புகிறான். கலசபாகம் அருகில் முடங்கிக் கிடக்கும் கழுகு கார் கிளம்பும் சப்தத்தை கேட்டு நிமிர்ந்து பார்க்கிறது.

"அப்பா இப்ப உங்க வீட்லதான் இருக்காரா?"

"ஆமாம்... உங்களுக்காக டிபன் வாங்க வந்தவரை நீங்க இங்க தங்கிடுங்கோ. நான் கொண்டு போய் கொடுத்துக்கறேன்னு சொல்லிட்டு வந்தேன்."— காரை பின்னால் எடுத்து வளைத்தபடி தனஞ்ஜெயன் சொல்கிறான்.

"நல்லது... அவருக்கு உங்க திட்டம் எதுவும் தெரிய வேண்டாம். பூஜைக்கு வந்தோம் நல்லபடி முடிஞ்சது கிளம்பறோம்னு மட்டும் நினைச்சுக்கட்டும். என் தாத்தாவோட பேராசை, பொறாமை எதுவும் அவருக்கு தெரிய வேண்டாம். இங்க நடந்ததை நீங்க சொன்னதை நான் ஒரு கற்பனையாதான் நினைக்கறேன். தாத்தா கிட்டகூட, ஏன் தாத்தா உங்க புத்தி இப்படி போறதுன்னு கேட்கப் போறதில்லை. எதுவுமே பேசப்போறதில்லை. அவர் மனசே அவரை அரிக்கட்டும். அதான் நல்ல பலன் தரும்."

குருக்கள் அவன் சொல்வதைக் கேட்டு சிலிர்ப்புடன் கை கூப்புகிறார்.

"அண்ணா உங்களுக்கு நிஜமா ரொம்ப பெரிய மனசு." கியர் மாற்றியபடி அதைக் கேட்டு சிரிப்பவன் ஒரு மேட்டில் காரை நிறுத்திவிட்டு எட்டி கோபுரத்தை பார்க்கிறான்.



ராஜாளிக் கழுகு அங்கேயே அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறது.

"போய்ட்டு வரேன். தேங்க்ஸ் ஃபார் யுவர் ஹெல்ப்!" என்று உரக்க கத்துகிறான்.

காரும் சீற ஆரம்பிக்கிறது!

## 18

30164
4655921

குட்டி போட்ட பூனைபோல தொலைபேசி அருகில் நடந்து கொண்டிருக்கிறார் தணிகாசலமூர்த்தி.

விடிந்துவிட்டதே...

அவர் எதிர்பார்க்கும் சேதி வரவேண்டுமே...?

அவருக்கு மேல் அதில் ஆர்வமாக இருக்கிறான் ராஜாமணி.

அவர்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப தொலைபேசி அலறுகிறது.

புலிப்பாய்ச்சலில் தாவி எடுத்து காதைக் கொடுக்கிறார் தாத்தா. இந்த வயசுக்கு இந்த வேகம் மிக அதிகம் தான்... ராஜாமணியும் அவர் முகத்தையே உற்று பார்க்கிறான். அவர் முகம் அவன் எதிர்பார்த்தது போல மாறாமல் பேயறைந்தது போல் ஆகிறது.

"என்ன ஆச்சு... ஏன் உங்க மூஞ்சி இப்படி போறது?"— அவர் முன் கேள்வியோடு நிமிருகிறான். அவர் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். இரண்டே இரண்டு வார்த்தை மட்டும் பதிலாக சொல்கிறார்.

"எல்லாம் பொய்யா?"— தொலைபேசி முடங்குகிறது. அவருக்கும் வியர்க்கிறது. அனேகமாக அவன் வாழ்நாளில் மிக அதிக பட்சம் வியர்த்தது இப்பொழுதாகத் தானிருக்கும்...

"என்ன நடந்தது... பிளான்படி எல்லாம்..."

"மண்ணாங்கட்டி... எல்லாமே கெட்டு குட்டிச் சுவராப் போச்சு. அந்த கோயில்ல ராத்திரி தங்கற யாரும் உயிரோட திரும்பினதில்லங்கறது பொய்யாப் போச்சு..."

"எப்படி... எப்படி பொய்யாச்சி?"

"என்னத்த சொல்வேன். குருக்கள் சொதப்பிட்டான்! தனஞ்ஜெயனுக்கும் நம்ம எண்ணம் தெரிஞ்சு போச்சு. அந்த பொடிப்பய வியாதிகூட மாயமா மறைஞ்சிடுத்தாம். எப்படி அது மறையும்? மறைய முடியும்...?"

பால்ல, சாப்பாட்ல கலந்து கொடுத்த சூர்யமாதுளப் பொடி வெறி பிடிக்கவே வைக்குமே... அவனால கடிச்சுக் குதறப்பட்ட பிரகதாம்பாள் இன்னும் சரியா எழுந்து நடமாடலை. ஆனா அவனுக்கு சரியாயிடுத்துன்னா என்னத்த சொல்றது... எனக்கு ஒரு எழவும் புரியலை."

"அப்ப அந்த விக்ரகங்களுக்கெல்லாம் சக்தி போயிடுத்தா..."

"விக்ரகமே இல்லைங்கறான் குருக்கள். அறை காலியா இருக்காம்! பூட்டெல்லாம் தொட்டமாத்திரத்துல கழண்டு வந்ததாம். அங்க இருக்கே ஒரு கிழட்டுக் கழுகு அது கோழிக்குஞ்சாட்டம் அந்த அனிருத்தோட விளையாடியதாம். என் தாத்தா சொன்னது மாதிரி.

இன்னும் 48 வருஷம் முடியல. யந்திர விக்ரகங்களுக்கு சக்தி போயிருக்க வாய்ப்பே இல்லை. அந்த நம்பிக்கைலதான் இந்த திட்டத்தை போட்டேன்.



கேரளாவுல குருவாயூர்ல குலத்துநாயர்னு ஒருத்தன். எத்தனை லட்சம்னாலும் தரேன் எடுத்துத் தாங்கோ அதைன்னு அனத்திட்டே இருந்தான். ஒரு கல்லுல இரண்டு மாங்கா அடிச்சு விக்ரகங்களை யந்திரங்களை அவனுக்கும், இந்த வெள்ளைக்காரியை பரலோகத்துக்கும் அனுப்ப நினைச்சா எல்லாம் மாறிப் போச்சே..."

"ஒருவேளை யந்திரம், விக்ரகம், அதோட மிரட்டல், உயிர்பலி எல்லாமே நிஜமாலுமே பொய்யோ...?"

"அப்படித்தான் இருக்கணும். எதுக்கும் நான் போய் பார்த்துட்டு வந்துடறேன்."

"எங்க?"

"தோனூத்து மலைக்குத்தான். கோயிலுக்கு போனாத்தான் எனக்கு சில விஷயங்கள் புலப்படும்."

"நானும் வரேன்."

"வந்து தொலை!"

இருவரும் உடனடியாக கிளம்புகின்றனர்.

மொட்டைத் தலையோடு துள்ளி வரும் அனிருத்தை பார்த்து கழுத்தில் கட்டோடு அள்ளி அணைத்துக் கொள்கிறாள் பிரகதாம்பாள். உள்ளே நுழைய ஆரம்பித்தவர்களுக்கு ஆரத்தி சுத்தி போடுகிறாள் நர்மதா!

அப்படியே ஏக்கமாய் ஒரு பார்வையும் பார்க்கிறாள்.

தனஞ்ஜெயனும் கவனித்தபடி கேட்கிறான்.

"நீ எங்க இங்கே?"

"சும்மாதான்..."

"சும்மால்லாம் எதுக்கு வரே...?" கடும்கோபம் அந்த மூன்று சொற்களில் பிரகாசிக்கிறது.

"அவளை ஏன்டா கோவிச்சுக்கறே... மாமாவையும் மாமா பிள்ளையையும் பாக்க வந்திருக்கா. ஆசையா எப்படி இருக்கேன்னு கேக்காம..."

பிரகதாம்பாள் வக்காலத்து வாங்குகிறாள். நர்மதா கண்கள் கலங்கிவிட்டிருக்கிறது. அதை பார்த்தபடியே மாடி ஏறுகிறான் தனஞ்ஜெயன்.

"லிண்டா உனக்கு அந்த ஊரும் கோயிலும் பிடிச்சிருக்கா?"— பிரகதாம்பாள் மருமகள் பக்கம் திரும்புகிறாள்.

"லோ நைஸ் அத்தை!"

"எனக்கு கொஞ்சம் பயமாவே இருந்தது. ஏன்னா அந்த கோயில்ல உங்க கொள்ளுத்தாத்தா சில யந்திரங்களை வெச்சுருக்கறதால எதாவது ஆயிடுமோன்னு... நல்ல வேளை சாரதாம்பிகை காப்பாத்தி கொண்டு வந்து விட்டுட்டா. அனிருத்துக்கு இருமல் வரலையே..."

"இல்ல அத்தை... நௌ ஹி ஈஸ் ஆல்ரைட்!"— லிண்டாவின் பதிலைத் தொடர்ந்து மேலிருந்து தனஞ்ஜெயன் கத்துகிறான்.

"அம்மா, இனிமே இந்த வீட்ல எனக்கு தெரியாம எதையும் சாப்பிடக் கொடுக்காதே... அமெரிக்கா வரை நீ அனுப்பின பிரசாதங்களை எல்லாமே இனிமே சோதிச்சுதான் கொடுக்கணும்..."

"ஏன்டா அப்படி சொல்றே?"

"நான் சொல்லலை... டாக்டர் சொன்னதை சொன்னேன்." என்று சமாளிக்கிறான்.

"ஆமா, தாத்தா எங்கே?" அந்த கேள்வி பிரகதாம்பாளை விடவும் நர்மதாவைதான் அதிகம் தாக்குகிறது.



"தெரியல... எங்கையோ கார்ல கிளம்பிப் போனார்..."

"அப்படியா...சரி அவர் எங்க வேணா போகட்டும். நான் நாளைக்கே யு. எஸ். கிளம்புறேம்மா..."

"என்னடா இது திடீர்னு... ஒரு மாச லீவு போட்டிருக்கேன்னியே..."

"ஆமாம்மா... அந்த லீவுல இந்தியால ஒரு வாரம், லிண்டாவோட ஊரான ஜெர்மன்ல ஒரு வாரம்னு நிறைய புரொக்ராம் இருக்கு. இங்க க்ளைமேட்டும் இவங்களுக்கு பிடிக்கலே, கிளம்பறேன்."

பிரகதா கலங்கிப் போகிறாள். மேலும் அவளிடம் உண்மைகளை சொல்லி கலங்கடிக்கப் பிரியமின்றி அப்பாவை பார்க்கிறான்.

அவர் ஹாலில் அமர்ந்து கொண்டு பேப்பரில் மூழ்கியிருக்கிறார். காரிலேயே அவரை சமாதானப்படுத்திவிட்டிருக்கிறான்!

தேனூத்து மலைக்கோயில்!

காரில் இருந்து இறங்குகிறார் தணிகாசலமூர்த்தி. கையில் செம்புப் பூண் போட்ட கைத்தடியுடன்...

மழை மேகங்கள் மலையை வளைத்துக் கட்டி சூழ்ந்திருக்கின்றன. அங்கும் இங்குமாக மின்னல் விளையாட்டு இடி சப்தம்.

ராஜாமணி அவர் கையைப் பிடித்து அழைத்துச் செல்லத் தொடங்குகிறான்'

"நல்லவேளை மழைக்கு முந்தி வந்துட்டோம்..." என்ற சிலாகிப்புடன் கோயிலை நோக்கி காலெடுக்கிறான்.

மழையும் சீறிப் பெருகி வர ஆரம்பிக்கிறது.

மதில் சுவர் இடிபாடுகளை கரைக்கத் தொடங்கு கிறது.

''வேகமா வாங்கோ...'' நடையை எட்டிப் போடு கிறான். கலசத்தை ஒட்டி அமர்ந்திருக்கும் கழுகு கழுத்தைச் சிலிர்ப்பியபடி நிமிர்ந்து பார்க்கிறது.

தள்ளாடியபடி தாத்தா நடக்கிறார்.

திறந்து கிடக்கும் முதல் கதவருகே வந்து நின்று முகத்தில் வழியும் நீரை வழித்துப் போடுகிறார்.

''உள்ள ஒரே இருட்டா இருக்கு...இருங்கோ போய் டார்ச்சை கார்ல இருந்து எடுத்துண்டு வந்துடறேன்...''

ராஜாமணி அவரை விட்டுவிட்டு ஓடுகிறான். போன வேகத்தில் டார்ச்சுடன் திரும்புகிறான்.

உள்ளே வெளிச்சம் பாய்ச்சியபடி நுழைகின்றனர்.

வெளியே மழை வலுக்கும் சப்தமும் இடி ஓசையும் நடுங்குகிறது.

''முதல்ல விக்கிரக அறை கதவைத் திற...'' தாத்தா சொல்கிறார்.

''திறந்துதான் இருக்கு.''—என்று டார்ச் ஒளியை உள்ளே பாய்ச்சுகிறான். எட்டுப் பொம்மை காவல் இருக்கும் படிமேல் ஏறி உள்ளே பார்க்கிறார், தாத்தா. ''ஆமாம் காலியா இருக்கு... எங்க போச்சு அந்த யந்திர விக்கிரகங்கள்?'' — முணுமுணுப்போடு திரும்புகிறார்.

டார்ச் ஒளியும் திரும்புகிறது! கருவறை சாரதாம் பாள் மேல் படுகிறது. பூஜை முடிந்து மாலையணிந்த கோலத்தில் அன்னை.

''அம்பாள் விக்ரகம் ஐம்பொன்னா?''



''ஆமாம்... இந்த இடிஞ்ச கோவில்ல இதைமட்டும் எதுக்கு வைக்கணும். எடுத்துண்டு போயிடுவோமே...'' தாத்தாவின் சொற்கள் ராஜாமணியை குஷிப்படுத்து கிறது.

''நானும் சொல்ல நினைச்சேன். நீங்க சொல்லிட் டீங்க. நல்ல விலை கிடைக்கும் தாத்தா.''

''அப்படித்தான் இந்த அறை விக்ரகங்களையும் நினைச்சேன். யாரோ வந்து கொண்டு போயிடலையா? இதையும் எவனாவது கொண்டு போறதுக்கு முந்தி நாம எடுத்துண்டு போயிடலாம்...''

''போயி...?''

''நல்ல விலைக்கும் விக்கலாம். இல்ல நாமளேயும் வெச்சுக்கலாம்... அதை பிறகு பாத்துப்போம். முதல்ல எடு. அப்புறமா அந்த குருக்களைப் போய் பார்த்து ஒரு பிடி பிடிக்கணும். துரோகிப்பய.''— தாத்தா பேசு கிறாரா இல்லை விதி பேசுகிறதா தெரியவில்லை.

''போ ராஜாமணி போய் சிலையைத் தூக்கு.''— கட்டளையில் அனல் பறக்கிறது. தாத்தா கையில் டார்ச்சை கொடுத்துவிட்டு கருவறைக்குள் கால் வைக்கும் ராஜாமணி உற்சாகமாக அம்பாள் சிலை மேல் கை வைக்கிறான். அசைக்கப் பார்க்கிறான். நன்றாகவே அசைந்து கொடுக்கிறது. இருந்தாலும் அதிக பாரம் மூச்சுத் திணற விடுகிறது.

''நீங்க வந்து கை கொடுத்தாதான் தூக்க முடியும்...''

''அதுக்கென்ன வரேன் இரு...'' டார்ச்சை சன்னதி நோக்கி ஒளிபடும்படி வைத்து விட்டு கருவறைக்குள் நுழைகிறார். விக்கிரகம் மேல் கைகளை பதிக்கிறார்.

"உம் அசை... நல்லா அசை... அப்படித்தான்... அப்படித்தான்" — கிழமானாலும் குரலில் அசுர ரௌத்ரம்.

விக்ரகமும் அசைகிறது. நன்றாகவே...

"இவ்வளவு நாள் இதை எவனும் கொண்டு போகாம இருந்ததே ஆச்சரியம்." — என்று முணு முணுத்தபடி அசைக்கும்போது கோயிலுக்கு தென் கிழக்கில் வஜ்ராயுதம் போல் ஒரு மின்னல்.

முன்பு மொட்டை கோபுரமாய் இருந்த வரை கோவிலைத் தாக்கியிராத அந்த மின்சக்தி இப்பொழுது தனஞ்ஜெயனால் அமர்த்தப்பட்ட கலசத்தைப் பார்த்து விஞ்ஞானநெறி பிசகாதபடி தன் கரங்களால் கலசத்தை தீண்டிப் பிடிக்க வர, எகிறிப் பறக்கிறது கழுகு!

உள்ளிருந்து 'ஐய்யோாாா...' என்கிற ஒரு அலறல் சப்தம் அதன் காதுகளில் விழ, அந்த கிழட்டுப் பறவை படபடத்து வாசலுக்கு சென்று அமர்கிறது. பின் சொட்டும் மழை நீரில் நனைந்து உள்ளே தாவிப் பறந்து சென்று பார்க்க டார்ச்சின் வட்ட ஒளிக்குள் சாரதாம்பிகையை இறுகப் பற்றிய நிலையில் தாத்தா தணிகாசல மூர்த்தியும், ராஜாமணியும் கரிக்கட்டை களாகத்தான் தெரிகின்றனர்.

"க்விக்... க்குவிக் ...க்குவிக் ..." — என்று கத்தியபடி திரும்பவரும் அது மழைவானம் என்றும் பாராமல் வானமேறத் தொடங்குகிறது!

மதுரை விமான நிலையம்! இங்கும் மழைமேக வானம்.

டாட்டா காட்டியபடி விமானம் ஏறும் ஆயத்தத்தில் தனஞ்ஜெயன், விண்டா, அனிருத்.



பிரகதாம்பாள் கண்ணீருடன் கையசைத்துக் கொண்டிருக்கிறாள். தனஞ்ஜெயனுக்கும், அம்மாவை, அப்பாவை பிரிய சங்கடமாகத்தான் இருக்கிறது. அப்பா கூட கலங்கிப் போகிறார். "இதுக்கு நீ வராமலேயே இருந்துருக்கலாம்டா தனா..."— என்று மூக்கைச் சிந்து கிறார்.

இருந்தாலும் நடந்து முடிந்தவைகளை நினைக்க கசப்பாக இருக்கிறது. அவைகளை மறக்கவாவது உடனடியாக கிளம்புவதுதான் அவன்வரையில் உத்தம மாக படுகிறது.

தாத்தா இறுதிவரையில் வரவேயில்லை. முகத்தில் முழிக்க அஞ்சுவதால் இருக்கும் என்று தனக்கு தானே சமாதானம் சொல்லிக் கொள்கிறான்.

ஆனால் அவர் இனி யார் முகத்திலும் முழிக்க வழி யின்றி போய்விட்டது பிறகுதான் தெரிய வரும்.

பிரகதாம்பாள் கை அசைத்து அசைத்து சோர்ந்து போகிறாள். படி ஏறி உள் நுழையும்வரை தொடர்கிறது அந்த பாசப்பகிர்வு.

விமானமும் உறுமிக்கொண்டு சற்றைக்கெல்லாம் வானைக்கிழித்து மேலே எகிற ஆரம்பிக்கிறது. வானில் நிறைய வல்லூறுகள். விமானத்தின் எகிறலை பார்த்து நாலா பக்கமும் சிதறிப் பறக்க ஒரு கழுகு மட்டும் விமானம் போன திசையில் போய்க் கொண்டேயிருக் கிறது!

உள்ளே விண்டா கேட்கிறாள்.

"என்ன நடந்தது தன்... இப்பவாவது சொல்லக் கூடாதா?"

"எல்லாமே பொய்... பொய்யை எதுக்கு திரும்ப சொல்லணும்"— அவன் அவளை சமாதானப் படுத்திய படி விண்டோ வழியாக வெளியே பார்க்கிறான். தூர மாய் ஒரு மின்னல் சவுக்கு!

அது 'நான் பொய்யில்லை' என்கிற மாதிரி சொடுக்கி மறைகிறது. தொடர்ந்து பறக்கிறது கழுகும்.

எது நிஜம்?

**முற்றும்**

# சர்ப்ப பலி

## 1

'சர்ப்பங்களில் 'கோடாரி நாகம்' என்பது ஒரு வகை. மரத்தை வெட்டும் கோடாரி போல அத்தனை வேகமாக மனிதர்களைக் கொத்தும் இது. பன்னிரண்டு அடிவரை நீளமுடையது. சராசரியாக நூறு வயதுவரை வாழக்கூடியது. இதன் பிற்பகுதிக் காலத்தில் இதன் நீளம் மிகச் சுருங்கி நான்கடியாகிவிடும். கண் பார்வையும் மிக மங்கிப் போய்விடும். இவ்வேளையில் இதை யாராவது தாக்கினாலோ மிதித்தாலோ அவர்களை வாசனையாலேயே கண்டறிந்து வந்து தாக்கும் வல்லமை உடையது இது.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

• • •

நாகர்கோவில் பஸ் ஸ்டாண்ட்!

தகரச் செவ்வகமான அழுக்கு பஸ்ஸில் இருந்து உதிர்கிறான் சேகர்.

'இதமான க்ளைமேட். கரி பூசிய வானம். பதுங்கி விட்ட சூரியன். பக்கத்து மலைநாடான கேரளத்தின்

ஈரக்காற்று வீசும் வித்தியாசமான சூழ்நிலை'— என்றாலும் எல்லா பஸ் ஸ்டாண்டையும் போலத்தான் இருக்கிறது நாகர்கோவிலும்.

பஸ்கள் நிற்க இடமில்லாத நெருக்கடி. அங்கங்கே குண்டு குழிகள்— ஊளை ஆரஞ்சுப்பழத்தை விற்க அலைமோதும் வியாபாரக் கூட்டம்— 'சாமீய்ய்' என்கிற பிச்சைக்காரக் குறுக்கீடுகள்...

தாண்டி நடக்கத் தொடங்குகிறான்.

ஆட்டோக்காரர்கள் அள்ளிக்கொள்ளப் பார்க்கிறார்கள்.

"சார் எங்க போகணும்? ஏறிக்குங்க..." என்று ஒட்டி ஒட்டித் துரத்துகிறார்கள்.

"முதல்ல நல்ல ஹோட்டலுக்குப் போகணும்."

"ஏறுங்க வசந்தபவன் போவோம். சூப்பர் ஹோட்டல்"— என்கிறான் ஒரு ஆட்டோக்காரன் கன்யாகுமரித் தமிழில்.

• • •

வசந்த பவன்

சுமாராக இருக்கிறது.

ரிசப்ஷனில் கேரள பெண்குட்டி. மாராப்பு முந்தி விலகுவது பற்றிக் கவலையே இன்றி ரிஜிஸ்டரில் சேகர் பற்றிய தகவல்களைச் சேகரிக்கத் தொடங்குகிறாள்.

"பேர்?"

"சேகர்."

"இன்ஷியல்?"

"KAV சேகர்."

"கமிங் ஃப்ரம்?"

"சென்னை."



"அட்ரஸ்?"

"மார்க்கெட் ஸ்ட்ரீட், மந்தவெளி, சென்னை—28."

"அட்வான்ஸ் ப்ளீஸ்...!"

அவன் உடனே ஒரு ஹோல்டான் பேக்கில் இருந்து ஒரு நூறு ரூபாய்க் கட்டை அநாயசமாக எடுத்து அதிலிருந்து ஒரு ஆயிரத்தைப் பிய்த்துத் தருகிறான்.

பித்தளைப்பட்டி மாட்டிய சாவிக்கொத்தை கைபடும்படி எடுத்துத் தருகிறாள் அவள். கூடவே கொஞ்சம் தொழில் சிரிப்பும் சிரிக்கிறாள் அந்தப் பெண்.

அறைக்குள் நுழைந்து முதல் காரியமாக படுக்கையில் விழுகிறான். பக்கமாக ஹோல்டான் பேக். சிறிது நேர ஆசுவாசிப்புக்குப் பிறகு பேக்கைத் திறக்கிறான். டயரி ஒன்று தட்டுப்படுகிறது. எடுத்து விரிக்கிறான். உள்ளே ஒரு பக்கத்தில் புகைப்படம் ஒன்றில் சந்தியா! அவன் கண்கள் கலங்க ஆரம்பிக்கின்றன.

• • •

அலங்காரப் பதுமையாட்டம் அமர்ந்திருந்தாள் சந்தியா. பட்டும் தங்கமும் மேனி முழுக்க வேயப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட நூறு பவுனாவது தேறும். ஒட்டியாணமெல்லாம் இப்பொழுது யாரும் போடுவதில்லை. இருந்தாலும் நாகர்கோவில் நல்லமணிப் பிள்ளை குடும்பம் பழம் பெருமைகளையும் மாறாத ஐதீகங்களையும் உடையது.

பிள்ளையின் தாத்தா, காந்தி, நேருவோடு பழகிய தேசீயவாதி— தாத்தாவின் தாத்தா திருவிதாங்கூர் சமஸ்தானத்துக் கணக்காயர். மன்னர் சுவாதித் திருநாளோடு இணங்கிப் பழகியவர்.

நாகர்கோவிலுக்கு எந்தப் பெரிய மனிதர் வந்தாலும் பிள்ளை வீட்டில்தான் விருந்து. விருந்தென்றால் வெறுமனே இலை போட்டுப் போடும் கூட்டு கறி சாதம் கிடையாது. காதுக்கு கண்ணுக்கு என்றெல்லாம் கூடவே விருந்தும் சேர்ந்தால்தான் அது விருந்து.

ஒரு மனிதருக்கு எங்காவது இரண்டு இலை போட்டு விருந்து படைத்திருக்கிறீர்களா?

நல்லமணிப்பிள்ளை வீட்டில் பார்க்கலாம். பிள்ளை சைவமாக இருந்தாலும் ஒரு இலை முழுக்க வஜ்ரம், கெண்டை, அயிரை, நண்டு, கோழி என்று நெய்யிற் பொறிக்கப்பட்ட கவுச்சிகள்.

மறு இலையில் 16 வகைக் காய்கறிகளோடு பாசுமதி அரிசிச் சாதமும் பருப்பும் நெய்யும், பாரபட்சமில்லாத விருந்தோம்பல். சாப்பிடுபவர் திணறித் தீரவேண்டும்.

நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரி போகும் பாதையில் பத்தாயிரம் தென்னை விளைந்த தோப்பிலிருந்து — குமரிக்கடலில் ஐம்பது மீன் பிடி ஸ்டீம்மர் வரை பிள்ளைக்குச் சொந்தம். போதாததற்கு திருவனந்தபுரம் காணிமடத்திற்கெல்லாம் பஸ்கள்— ஊருக்கு நடுவில் பெரிய த்ரீ ஸ்டார் ஹோட்டல் என்று அள்ள முடியாத செல்வம்.

அன்னாரின் மகளுக்கு இன்று நிச்சயதார்த்தம்.

அதற்குத்தான் அத்தனை அலங்காரம்.

எல்லாம் தடபுடலாக இருந்தாலும் — சந்தியா மட்டும் இறுக்கமாக உறைந்து போய்க் கிடக்கிறாள்.

கண் விழிகளில் துக்கம் புரண்டு புரண்டு படுப்பது நன்றாகத் தெரிகிறது.

"மாப்ள வீட்டாளுக வந்துட்டாக. கலகலப்பா மூஞ்சிய வெச்சுகிட்டிரு. இப்படி இருந்தா வித்தியாசமா



நினைப்பாக..." —அவளது அத்தை வந்து காதைக் கடிக்கிறாள்.

"முடியலத்த..."

"முடியும்... முடியணும்" — அத்தை அழுத்தம் கொடுத்துப் பேசிவிட்டுத் திரும்புகிறாள்.

வீடு கொள்ளாத உறவுக் கூட்டம். பனாரசும் பட்டும் உரசிச் சப்தமிட்டுக் கொண்டு நடக்க— குஞ்சு குளுவான்கள் ஓடி விளையாடியபடி திரிய — நடுவில் சந்தியா உள்ள அறையின் தொலைபேசி சிணுங்குகிறது.

நெடுநேரம் வெறித்துப் பார்த்துவிட்டு அரைமனதாகப் போய் எடுக்கிறாள்.

"ஹலோ சந்தியா...?"

"யெஸ்..."

"நான் சேகர் பேசறேன்."

"சேகர்ர்ர்ர்...!"— அவளிடம் மின்னலாய் மாற்றம். உற்சாகக் கொப்பளிப்பு.

"சேகர் வந்துட்டீங்களா? எங்க இருந்து பேசறீங்க? எப்ப வந்தீங்க? நல்லா இருக்கீங்களா?"

குரல் தந்தியடிக்கிறது — வெள்ளமாய்ப் பாயத் துடிக்கிறாள்.

"வராம இருப்பேனா... உனக்காக சந்திரனைப் பிடிச்சு உருட்டி விளையாடுவானே இந்த சேகர்?"

"ச்ச்ச்... ப்ச்ச்ச்... ரொம்ப சந்தோஷம் சேகர். சீக்கிரம் வாங்க. நிச்சயதார்த்த ஏற்பாடெல்லாம் தடபுடலா நடந்துகிட்டிருக்கு. இன்னும் அரை மணி நேரம் தான் இருக்கு. பையன் வீட்ல எல்லோரும் வந்துட்டாங்க..."

"யார் வந்தா என்ன சந்தியா? நீ எனக்குத்தான் நான் உனக்குத்தான்."

"டயலாக் அப்றம். சீக்கிரம் வாங்க."

"வரேன்... வரேன். வந்துகிட்டே இருக்கேன். நான் மட்டுமில்ல, கூட போலீசும் வரும்."

"ப்ச்ச்... ப்ச்ச்ச்..." — போனிலேயே முத்தம் பதிக்கிறாள். மிக நெகிழ்ந்து போய் ஒரு நிம்மதிப் பெருமூச்சும் விடுகிறாள்.

அப்பாடா...

அப்படியே கட்டில் மேல் மல்லாக்க விழுந்தவள் தலைக்கு நேர் மேலே தொங்கியபடி கிடக்கும் சீலிங் ஃபேனைப் பார்த்து அப்படியே கண்களை அகட்டி விரிக்கிறாள்.

அதன் பிளேடில் தன் நீண்ட உடலை வளைத்துக் கட்டிக் கொண்டு படம் விரித்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தது ஒரு கோடாரி நாகம்!

# 2

"நாகங்களில் 'வாசனாதி நாகம்' என்று ஒரு ஜாதி. இதன் வால் நுனி மட்டும் வெளுப்பாக இருக்கும். மிக ஒல்லியான உடல் வாகும் நடுத்தர வளர்ச்சியும் உடையது. தாழம் புதர்களில் வசிக்க இதற்கு மிகப் பிடிக்கும்.

இது தீண்டினால் மரணம் பத்தாவது நொடியே நிச்சயம். நாகதாளி வேருக்கு இது மிக கட்டுப்பட்டது. அந்த வேரை அரைத்து கைகளில் பூசிக்கொண்டு தாழம் புதர்களில் கைவிட்டு இதை பிடிப்பார்கள் காளர்கள். இதற்கு ஞாபக சக்தி மிக அதிகம்."

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

• • •



செருமியபடி நிற்கும் ஆட்டோவில் இருந்து இறங்குகிறான் சேகர். கூடவே விறைப்பாய் சஃபாரி சூட்டில் ஒருவர்.

"இதாங்க நல்லமணிய்யா மாளிகை..." என்று ஆட்டோ டிரைவர் கை காட்ட, மாளிகை என்று அவன் கைகாட்டிய திக்கில் ஏகத்துக்கும் கூட்டம். ஆம்புலன்ஸ்... பரபரப்பு.

"என்ன சேகர் நிச்சயதார்த்தம்னே... ஆம்புலன்ஸ்லாம் நிக்குது?"

"தெரியலியே... வாங்க போய் பார்ப்போம்"—முன் நடக்கும் போதே ஆம்புலன்ஸ் சீறிக் கிளம்பி அவர்களைக் கடக்கிறது. பின்னால் அணி வகுக்கின்றன கார்கள்.

"என்னங்க என்ன ஆச்சு?"

"முதலாளி மவளைப் பாம்பு கடிச்சிடிச்சு..."

"பாம்பா?"

"ஆமாங்க... ரொம்ப சீரியஸா இருக்கறதால ஆஸ்பத்திரிக்குத் தூக்கிகிட்டுப் போறாங்க..."

சேகர் அப்படியே தலைமேல் கை வைக்கிறான். சில வினாடிகள் தடுமாறி அலைக்கழிபட்டுவிட்டு "எந்த ஆஸ்பத்திரிக்கு?"— என்று கேட்கிறான்.

"இந்த மாதிரி கேஸெல்லாம் எங்க போகும்... முதல்ல ஜி. எச்.சுக்குத்தான்!"

"முதலாளிய அப்பவே சொன்னேன். அந்தப் பாம்ப அடிக்காதீங்கன்னு. கேக்கல. இப்ப என்னடான்னா வஞ்சம் வச்சுத் துரத்தி அடிக்குது."

சுற்றி நிற்பவர்களின் முணுமுணுப்பில் அப்படியும் இப்படியுமாகச் சில தகவல்கள்.

அதை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்க எங்கிருக்கிறது நேரம்!

'சந்தியா என் உயிரே, என்னை விட்டுவிட்டுப் போய்விடாதே. இதோ வந்துவிட்டேன்— ஆட்டோ...' சேகர் அந்த சஃபாரி சூட் மனிதருடன் தாவி ஏறிப் பின் தொடரத் தொடங்குகிறான்.

* * *

அந்த மாளிகை போன்ற வீட்டுக்குள் ஆளாளுக்கு தடியுடன் திரிந்து கொண்டிருந்தார்கள்.

கல்யாணக் கோலாகலம் தொலைந்துபோய் ஒரே கர்ண கடூரம்.

"அதோ அங்கதான்... அங்கதான் அந்த பக்கம் தான் போச்சு..."

"பத்தடி நீளம்... கோதுமை கோதுமையா உடம்புல காய்ப்பு, நான் பாத்தேன்..."

"விட்டா ஆபத்து... விடாதீங்க... விடாதீங்க..."

கார்வார் விநாயகம்பிள்ளை தலைமையில் முண்டாசு கட்டிய ஒரு கூட்டம், மாளிகையின் சந்து பொந்துகளைக்கூட விடாமல் தேடி அலைந்து கொண்டிருக்க, அனைத்தையும் பார்த்தபடி அமர்ந்திருக்கிறாள் வீல் சேரில் ஒரு பெண்மணி.

அவள் கண்ணில் டன் கணக்கில் கலக்கம்.

"பெரியம்மா நீங்க கொஞ்சம் காலைத் தூக்கி வெச்சுக்க முடியுமா?"

ஒருவன் அந்தப் பெண்மணியிடம் வந்து கேட்கிறான்.

"எதுக்குப்பா?"



"நாலாபுறமும் தேட ஆரம்பிச்சுட்டோம். ஒளிஞ்சிருக்கிற அது எப்படியும் பிரண்டு இந்தப் பக்கம்தான் வந்தாகணும். அப்படி வரும்போது கால்ல கீல்ல கொத்திட்டா...?"

"தலைல அப்படி எழுதியிருந்தா அப்படியே நடக்கட்டும். நீ கவலப்படாதப்பா..."— அந்தப் பெண்மணியின் பேச்சில் விரக்தி வழிகிறது.

அவனுக்கு 'ஏன் பேசினோம்' என்று இருக்கிறது.

இதற்குள் அந்தப் பாம்பைப் பார்த்து விடுகிறது ஒரு கூட்டம்.

"அதோ... அதோ... அரிசி மூட்டை பின்னால..."

"போ... போ... டேய் சுத்தி நில்லுங்கடா. சங்கரா! அந்த மூட்டையை அப்படியே இழு. உம் சீக்கிரம்...!"

அதன்படியே சங்கரன் என்பவன் ஸ்டோர் ரூமான அந்த அறையில் சுவரோரத்து மூட்டையைச் சரிய வைக்க, ஓரமாய் சுருட்டி வைத்த கயிறாட்டம் அந்தப் பாம்பு! சுருண்ட நிலையில் தலை பாகத்தை மட்டும் ஒரு சாண் உயரத்திற்கு மேல் தூக்கி வைத்துக்கொண்டு நாலாபுறமும் பார்க்கிறது.

சின்னக் கண்ணில் அசாத்ய மினுமினுப்பு.

இரட்டை நாக்கு சீற்றத்தில் வக்ரமான சப்தம்.

"புஸ்ஸ்... புஸ்ஸ்..."

சப்தம் கொடூரமாய்க் கேட்கிறது. சுற்றி நிற்பவர்கள் சற்று மிரண்டு போக ஒருவன் கழியை அதன் மேல் இஷ்டத்திற்குச் சுழற்றுகிறான்.

அவனைத் தொடர்ந்து மற்றவர்களும்...

சில நிமிடங்களுக்கு பின் உயிரை விட்டுவிட்ட அதன் நீண்ட தோல் சட்டையை ஒரு கழியில் ஏந்திப் பிடித்தபடி அவர்கள் கிளம்புகின்றனர்,

அந்தப் பெண்மணி பார்த்துக் கொண்டேயிருக்கிறாள்.

அவள் கண்களில் ஏகமாய்க் கலக்கம். கூடவே அந்த செத்த பாம்பைப் பார்க்கவும் மயக்கமும் கவ்வத் தொடங்கியது.

# 3

'ஐங்கோலக்கரு' என்று ஒன்று உண்டு. அதை தாமரை இலையில் வைத்து உடன் வெள்ளை எலியை ஆணியில் அறைந்து நாக போத மந்திரத்தை ஆயிரம் முறை சொல்ல அந்த எலியை விழுங்கவும், ஐங்கோலக் கருவை விழுங்கவும் நிச்சயம் 'கார்கோடன்' என்னும் வகையைச் சேர்ந்த நாகம் வரும்.

இதை காளர்கள் பிடித்து உசுப்பேற்றிக் காரியம் சாதிப்பார்கள். இதை விடியற்காலம் பார்க்க நேருபவர்கள் ஐஸ்வர்யமும், அஸ்த மனத்தில் பார்ப்பவர்கள் தரித்திரியமும் அடைவர்.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

• • •

நல்ல வேளை!

சந்தியா பிழைத்துவிட்டாள். நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார் நல்லமணிப்பிள்ளை. ஆஸ்பத்திரிக்கு வெளியே அவருக்கு தெம்பும் திடமும் தர கலெக்டர் முதல் தாசில்தார் வரை வந்திருக்கின்றனர்.



"அந்தப் பாம்பை அடிச்சிட்டாங்களா?"

"அடிச்சிட்டாங்க..."

"மாளிகையைச் சுத்தி செடி கொடின்னு அடர்வா தோட்டமிருக்கா என்ன?"

"இருக்கு... ஆனா அடர்வா இல்ல. சுத்தபத்தமா தான் வெச்சிருக்கோம். கழுத எப்படியோ உள்ளுக்குள்ள நுழைஞ்சிருக்கு..."

"போகட்டும். இனி எச்சரிக்கையா இரும் பிள்ளைவாள். நாங்க கிளம்பறோம்."

கல்யாணப் பையனின் அப்பா ரங்கநாதம்பிள்ளை நழுவப் பார்க்கிறார்.

"கிளம்பறீங்களா?"

"ஆமாம். ஊருக்குப் போய் நான் விபரமாக் கடிதம் போட்றேன்."

"ஐய்யோ எதுக்கு. சந்தியா நாளைக்கே வீட்டுக்குப் போலாம்னுட்டாங்க. நாளை விட்டு நாளை மறுநாள் கூட நல்ல நாள்தான். நிச்சயத்த அப்ப முடிச்சிக்கலாம்."

"பரவால்ல இருக்கட்டும்."

"என்ன சொல்றீங்க ரங்கநாதம்? நல்ல காரியத்த தள்ளிப் போட வேண்டாம்னு பாக்கறேன்."

"வாஸ்தவம்தான். ஆனாலும் சர்ப்பதோஷம் இருக்கற ஒரு பொண்ணுக்கு — விஷயம் தெரிஞ்சும் எப்படி மாப்ள தர்றதுன்னுதான்..."

"என்னது சர்ப்பதோஷமா... என் மகளுக்கா? யார் சொன்னது?"

"இப்படி ஆனாலே சர்ப்பதோஷம் இருக்கறதாதான் அர்த்தம் நல்லமணி. அதோட உங்க குடும்பத்துல

கூட இதுக்கு முந்தி மூணு பேர்வரை பாம்பு கடிச்சே செத்துருக்காங்களாமுல்ல?''

நல்லமணி அதைக் கேட்டுத் திடுக்கிட, அவர் நழுவ, தைரியமாக உள்ளே பிரவேசிக்கிறான் சேகர்.

நல்லமணியைத் தாண்டி நடந்து இன்டென்சிவ் கேரில் இருக்கும் சந்தியாவைப் பார்க்க முனைகிறான். கூடவே அந்த சஃபாரி சூட் மனிதர்.

''யார் நீங்க?''

''சந்தியாவைப் பார்க்கணும்.''

''கொஞ்சம் டயமாகும்.''

''இல்ல, நான் உடனே பாக்கணும். சேகர் வந்துருக்கேன்னு சொல்லுங்க. அவளே என்னை முதல்ல உள்ள வரச் சொல்லுவா.''

''யாரா இருந்தாலும் ஒன் அவர் ஆகும். அவங்களுக்கு இனிமா அண்ட் ஸ்டமக் வாஷ் பண்ணதுல மயக்கமா இருக்காங்க. ப்ளீஸ் வெயிட்...!''

நர்ஸின் பதில் சேகரைக் கவலைப்படுத்தும்போது நல்லமணிப்பிள்ளை அவனருகே வருகிறார்.

அவர் வரவும் அவனிடமும் சற்று விறைப்பு.

''நீதான் சேகரா?''

''ஆ...ஆமாம்.''

''சந்தியாவோட காலேஜ்ல...?''

''ஆமாம். ஒண்ணா படிச்சவன்.''

''சரி; அப்றமா என்னை வந்து பாரு!''

''அப்புறமான்னா?''

அவர் அவனை ஒரு தினுசாகப் பார்த்து விட்டு ''சாயந்தரமா'' என்கிறார்.

அவன் முகத்தில் சற்று மலர்ச்சி. அவர் பார்வை கூட நிற்கும் சஃபாரி மனிதர் பக்கமும் திரும்புகிறது.



''நீங்க க்ரைம் பிராஞ்ச் ராஜதுரை இல்ல...?''

''ஆமாம். உங்களுக்கெப்படி...?''

''உங்க டிபார்ட்மென்டே எனக்கு அத்துப்படி மிஸ்டர் ராஜதுரை! ஆமா, இதென்ன இவனோட வந்துருக்கீங்க? நிச்சயதார்த்தத்தை நிறுத்தவா?''

நல்லமணி மிகத் துல்லியமாக விஷயத்தைக் கூறி விட்டு நறுக்க, ராஜதுரை எனும் அந்த சஃபாரி மனிதரிடம் ஏராளமாய்த் தடுமாற்றம்.

''எனக்கு எல்லாம் தெரியும்யா! உங்களைப் பாக்கறதுக்கு முந்திவரை அந்தப் பாம்புமேல நான் பயங்கர கோபத்துல இருந்தேன். ஆனா இப்ப சந்தோஷப்படறேன்.

நல்ல வேளை! நிச்சயதார்த்தம் அதனால நின்னுது. உங்களாலன்னு ஆயிருந்தா என் மானம்ல போய் இருக்கும்?''

''இதோ பாருங்க பிள்ளை...இவர் ஒண்ணும் சாதாரணமானவர் இல்ல. இவங்கப்பா மிலிட்டரி பெரிய அதிகாரி. இவரும் எஞ்ஜினீயர். ஆஸ்தி பாஸ்தி உங்க அளவு இல்லேன்னாலும் ஓரளவு உள்ளவர்தான். உங்க பொண்ணை மனப்பூர்வமா விரும்பறாரு. உங்க பொண்ணும் விரும்புது. பேசாம கல்யாணம் பண்ணிக் கொடுத்துடுங்க. ஏன் சினிமா அப்பா மாதிரி வறட்டுக் கௌரவம் பாக்கறீங்க...?''

ராஜதுரையின் பேச்சு, நல்லமணியின் நரைத்த மீசை முடியில் துடிப்பைப் பரப்புகிறது.

இருந்தும் அடக்கிக் கொள்கிறார்.

''அதுக்குத்தான் சாயந்தரம் வரச் சொன்னேன்.'' என்றவராக அங்கிருந்து நகருகிறார்.

ராஜதுரை மகிழ்ச்சியோடு சேகரைப் பார்க்க, அவன் நிஜமாக அப்பொழுதுதான் சிரிக்க முயல்கிறான்.

# 4

'உயிரினங்களில் 'நாக சர்ப்பம்' வினோதமானது. காலின்றி நடக்கும் அதிசயப் பிராணியான இது வாயிலேயே விஷத்தை உடையது. மனித மனத்தின் பயத்திற்கு பிரம்மன் கொடுத்த வடிவம்தான் சர்ப்ப உடம்பு.

அதனாலும் இதன் விசேஷ குணப்பாடு கருதியுமே ஈசன் தன் கழுத்திலும், மாலன் தன் படுக்கையாகவும் ஆதிசக்தி இதை ஆபரணமாகவும் பூண்டனர்.

இது காலேறி இறங்கினால் கண்டம் விலகல், வயிறேறி அமர்ந்தால் அநுபூதி, சிரமேறி இறங்கினால் பீடை நாசம்.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

* * *

களையிழந்து விட்டது வீடு. கலகலப்பான வேலைக்காரர்கள் கூட துக்கம் அனுஷ்டிக்கிறாற் போல திரிகின்றனர்.

வீல் சேரில் அந்தப் பெண்மணி'. அழகம்மை நாச்சி என்கிற புண்யாவசனப் பெயரோடு...

உள்ளே நுழைகிறார் நல்லமணிப்பிள்ளை.

''நில்லுவே...'' நாச்சி நிறுத்துகிறாள்.

''என்ன?''

''பேத்தி...?''



''சொகமாய்ட்டா. இனி பேடி இல்லை. நல்லா விளங்கி நாளைக்கே நம்ம மனைக்கு வந்துடுவா...''

''நாகம்மா! எல்லாம் உன் கருணை...'' நாச்சியாரம்மாள் கண்களை மூடிப் பிரார்த்திக்க, அவர் முறைக்கிறார்.

''முறைக்காம இனியாச்சும் நான் சொல்லுறதக் கேளு...!''

''என்னத்த...? எழவெடுத்த பூசை எதாச்சும் செய்யணுமாக்கும்?''

''ஆமா. சர்ப்ப பலி பூசை.''

''எனக்கு நம்பிக்கை இல்லைன்னு தெரியும்ல?''

''ஒருத்தருக்கு மூணு பேர் செத்து வெச்சப்பதான் நம்பிக்கை வரலை. இப்ப வீடு பூந்து உன் மகளை ஒரு பாம்பு கடிக்கப் பார்த்துமா நம்பிக்கை வரலை?''

''வீட்டச் சுத்தித் தோட்டம் இருந்தா பாம்பு வரும். தேள் வரும். இதெல்லாம் சகஜம். அதுக்காக உடனே பயந்து பூசை பொங்கல்னு போய்ட்டா எல்லாம் சரியாயிடுமா? அப்பால பாம்பு தேளு வராதாக்கும்?''

''வாராது. நிச்சயம் வாராது. இந்தப் பக்கத்துல நம்ப மாளிகை மட்டும்தானா...? எத்தினியோ வீடுங்க. அதுல எத்தனை வீட்டுக்குள்ள பாம்பு வந்திருக்கு? கேட்டுப் பாத்தியா?''

''அதுக்கென்ன இப்போ?''

''தோஷமுள்ள வீடு இதான். தோஷத்த உருவாக்குனவனும் நீதான். அதனாலதான் இங்கேயே அது வருது. ஒழுங்கா, பலிபூசை போட்டு சாந்தி பரிகாரம் செய்துடு நல்லமணி!

சந்தியா உனக்கு ஒரே பொண்ணு. அவ சந்தோஷமா வாழணும். இல்லாட்டி ஒரு பய அவளைக் கட்டிக்க வரமாட்டான்.''

''யார் சொன்னது... ஒரு மாப்ளை ஓடிட்ட அதே நேரம் இன்னொரு மாப்ளை வந்துட்டான் தெரிஞ்சுக்க...!''

''யாரச் சொல்றே நீ?''

''சந்தியா சென்னப் பட்டணத்துல ஒரு பைய்யன விரும்புனதா சொன்னாளே...?''

''அவனைத்தான் நினைச்சே பாக்கக் கூடாதுன்னு சொல்லிட்டியே...''

''அது அப்போ... ஆனா இப்ப மனசை மாத்திக் கிட்டேன். பையனும் பாக்க நல்லா ராசா மாதிரி இருக்கான்.''

''அவனை எங்க பாத்தே?''

''அதுவா இப்ப கேள்வி? கொஞ்ச நேரத்துல நீயும் பாக்கப் போறே...''

நல்லமணிப்பிள்ளை சொல்லும்போதே வாசல் புறம் ஆட்டோ தேங்க, அதிலிருந்து இறங்கி உள் நுழைகிறான் சேகர்.

வேலைக்காரப் பட்டாளம் ஒரு தினுசாகப் பார்க்கிறது. விநாயகம்பிள்ளை கல்லா மேஜை பாகத்தில் இருந்து எழுந்து ''அப்பு யாரு...?'' என்கிறார் சற்றே ராகமாக.

''நான்... நான் சேகர். நல்லமணி சாரைப் பார்க்க வந்துருக்கேன்!''

''விநாயகம்! விடுவே...! நம்ம புள்ளதான்.''—தலையை நீவிக்கொண்டு பதிலோடு முன் வருகிறார் பிள்ளை.

''வணக்கம்.''

''உம்... உம்... உள்ற வாப்பு.''



ஒரு தினுசாகப் பார்த்துக் கொண்டு உள்பக்கம் திரும்பி மகா பெரிய தேக்கு நிலைவாசல் கொண்ட தெற்கு வராண்டாவெளி நோக்கி நடக்கிறார் பிள்ளை.

அவன் பின் தொடர்கிறான்.

வராண்டாவில் கேரள மலபார் தேக்கு நாற்காலிகள் வார்னீஷ் வாசம் கமகமக்கக் கிடக்கின்றன. ஒன்றில் பிள்ளை அமர, மற்றதில் சேகர் அமர்த்தப் படுகிறான்.

''இப்படி கூப்ட்டு உக்காத்தி வெச்சு முறையாப் பேசுவேன்னு எதிர்பார்த்திருக்க மாட்டீங்கதானே?''

அவனிடம் கமறல். அவரிடமும் புதிய மரியாதை. ''உங்களப்பத்தி நான் சரியா தெரிஞ்சுக்கல. என் மக யாரோ ஒரு அன்னக்காவடியக் காதலிக்கறதா நினைச்சு தான் மார்த்தாண்டம் ஜமீன்தார் ரங்கநாதம் குடும்பத்தோட பரிசம் போடப் போனேன். நல்லவேளை ஒரு நல்ல பாம்பு வந்து தடுத்திடுச்சு.

இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடலை. என் மகளை உங்களுக்கே தரேன். ஆனா ஒரு விண்ணப்பம்.''

அவன் நிமிர்ந்து அவரைப் பார்க்கிறான்.

''கல்யாணத்துக்குப் பொறவு ரெண்டு பேரும் இந்தியாவுலேயே இருக்கக்கூடாது. சம்மதமா?''

அதிர்ச்சி மூட்டுகிறார் பிள்ளை.

''புதுமையா இருக்கே உங்க வேண்டுகோள்?''

''எப்படி வேணா நினைச்சுக்குங்க. என் மாப்ள அமெரிக்கால பெரிய எஞ்ஜினீயர். மகளை கூட்டிகிட்டுப் போய்ட்டாருன்னு நான் சொல்லணும்.

ஏன்னா நல்லமணிப்பிள்ளை குடும்பத்து அந்தஸ்து அந்த ரகம்.''

"எனக்கு ஆட்சேபணையில்ல. ஆனா அமெரிக்காவுக்கோ, இல்ல லண்டனுக்கோ போய் லைஃப்பை அமைச்சுக்கறது சட்டுன்னு நடக்கிற காரியமா?"

"நான் நடத்திக் காட்றேன். என் பணம் நடத்திக் காட்டும். சரியா..."

பிள்ளை தீர்க்கமாகக் கேட்க, சேகரைச் சற்று தடுமாற்றம் தொற்றிக் கொண்டாலும் இறுதியில் தலையை ஆட்டிவைக்கிறான்.

அப்பொழுது பக்கத்து சாளரக் கதவருகே இருந்து 'புஸ்ஸ்' என்று ஒரு சப்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்த இருவரின் கண்களிலும் தீப் பிடித்த மாதிரி ஒரு பதைப்பு.

சாளரக் கதவுமேல் கம்பீரமாகப் படம் எடுத்த நிலையில் ஒரு கருநாகம்!

"மைகாட்..."— சேகர் பதற— நல்லமணிப்பிள்ளை அப்படியே பூனைபோல் பின்னே கால் வைத்து நடக்கத் தொடங்கி சேகரையும் பற்றி இழுக்கிறார்.

அவன் கண்கள் சுதாரிப்போடு பக்கத்தில் எடுத்து அடிக்க ஏதாவது கிடைக்காதா என்கிற துழாவலில்...

நாகம் சளைக்காதபடி விடைப்போடு பார்க்கிறது.

எப்படி வந்தது? எப்படி மேலேறியது?

பெரிய புதிராக இருக்க பிள்ளை ஏகதூரம் பின் சென்ற நிலையில் "விநாயகம் ஓடி வாய்யா... பாம்பு, பாம்பு..." என்று கத்தத் தொடங்குகிறார்.

ஒரு கூட்டமே பாய்ந்து வருகிறது.

"எங்க முதலாளி... எங்க முதலாளி...?" —நெருங்கி வந்து கேட்க — அவர் கை நீட்டிக் காட்ட; என்ன



ஆச்சரியம்! கம்பீரமாக வாலாட்டியபடி அமர்ந்திருந்த அந்தக் கருநாகத்தை இப்பொழுது அங்கே பார்க்க முடியவில்லை!

எங்கு போயிற்று?

# 5

'நாகத்தில் கருநாகம் சனீஸ்வர அம்சமுடையது. சனிதோஷ மிக்கவர்களுக்கு கருநாகம் அடிக்கடி கண்ணில் படும். பொதுவில் அரவங்களைக் காணாது இருப்பது நல்லது. மீறிப் பார்க்க நேரிட்டால் தலைக்குக் குளித்து நவக்கிரகங்களுக்கு எள் விளக்குப் போட்டு விட தோஷத் தாக்கம் குறையும்.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

* * *

ஈஸிசேரில் மல்லாந்திருக்கிறார் நல்லமணிப் பிள்ளை. "முதலாளி..." — குரலோடு நெருங்குபவர் கார்வார் விநாயகம்.

"என்னய்யா..."

"........"

"என்னய்யா வாயத் தொறந்து சொல்லேன்."

"எல்லாரும் ரொம்பப் பயப்படறாங்க."

"எதுக்கு?"

"இப்படிக் கேட்டா எப்படிங்க? எப்ப எந்த சர்ப்பம் எங்க வரும்னு தெரியலீங்களே?"

''ஓஹோ...''

''அதனால...''

''சொல்லு.''

''நம்ம நாச்சியாரம்மா சொன்ன அந்தப் பூசையை செய்துட்றது ரொம்ப நல்லதுங்க.''

பிள்ளை ருத்ர பார்வை பார்க்கிறார்.

''உங்களுக்காக வேண்டாம். எங்களுக்காக.''

விநாயகம் தன்மையாகப் பேசவும் மெல்ல இளகு கிறது மனசு.

''சரி; நீயே ஏற்பாடு செய்!''

''நல்லதுங்க'' —விநாயகம் மகிழ்ச்சியோடு திரும்பி, சிறிது தூரம் சென்றுவிட்டுத் திரும்ப வருகிறார்.

''என்ன?''

''பூசை அன்னிக்கு எல்லோரும் சுத்தபத்தமா இருக் கணும். ரவைல தூங்கப்போகும் போது கண்ணுக்கும் கறுப்புத்துணி கட்டிக்கிடணும். விளையாட்டா துணி அவுத்தாக்கூட ஆபத்து...''

''இதை ஏன் என்கிட்ட சொல்றே... வேலைக் காரங்க அத்தனை பேர்கிட்டயும் சொல்லு?''

''இல்லே நீங்களும்...''

''நான் ஊர்லேயே இல்ல. வெளிய போயிடறேன். போதுமா?''

''ஐய்யோ... நீங்கதான் மனை முதலாளி, நீங்க கட்டாயம் இருக்கணும்.''

''இல்லேன்னா...''

''பூஜை செய்யறதுல அர்த்தமே இல்லீங்க.''



விநாயகம் சொல்வதைக் கேட்டு பிள்ளை முகம் அதிக பட்சம் கசங்குகிறது. நெடுநேரம் கழித்து 'சரி' என்கிறார்.

விநாயகம் முகத்தில் நிம்மதிப் படர்வு.

வந்த வேலை முடிந்தது என்று சிறிது தூரம் செல் பவர் திரும்பவும் திரும்பி வருகிறார்.

''என்னய்யா, இன்னும் என்ன?''

''பகல்ல காளானுங்க நாலு பேரைக் கூட்டி வந்து வீடு முழுக்க மருடி வாசிச்சோம். ஒரு பாம்பும் அம் புடலை. அவுக போகும்போது ஒரு தைலத்தைத் தந் துட்டுப் போனாங்க.''

''அதை உடம்புல பூசிக்கணுமோ?''

''ஆமாங்க. தப்பித் தவறி பாம்புங்க வந்தாலும் நாக தாளித் தைல வாடைக்குக் கிட்ட வராதுங்க.''

''சரி சரி; இப்ப அது எங்கே?''

''நாச்சியாரம்மாகிட்ட கொடுத்துருக்கேன்.''

''சரி; போ நான் பாத்துக்கறேன். ஆமா... சந்தியா எப்ப வரப்போறா?''

''சாயங்காலமா கூட்டிகிட்டுப் போகச் சொன் னாங்க. நம்ப மேனேஜர் நான் பார்த்துக்கறேன்னுட் டாரு.''

''ஆஸ்பத்திரில யாரெல்லாம் இருக்காங்க?''

''மெட்ராஸ்ல இருந்து வந்துச்சே ஒரு தம்பி.''

''சேகரா...''

''ஆமாங்க. அவரு கூடவே இருக்காரு. அம்மாவும் தெம்பா இருக்காங்க.''

"அவரோட யாராவது எதையாவது பேசி, சர்ப்ப பலி நாகதோஷம்னு சொல்லி வைக்கப் போறாங்க. என்ன?"

"ஐய்யோ... ரொம்ப எச்சரிக்கையா இருக்கோங்க. அவர்தான் நம்ப வீட்டுக்கு மாப்ளையா வரப்போறா ராமே... நிசமாங்களா..."

நல்லமணி பார்வையால் ஆமோதிக்கிறார். கூடவே சித்தாப்பாக "அவரு யாரோ இல்ல. பெரிய எஞ்ஜினியர். அமெரிக்கால இருக்காரு. அங்க கோடிக்கணக்குல சொத்து இருக்குதாம்" என்று மீசையை நீவும்போது விநாயகத்துக்குச் சிரிப்பு வந்து விடுகிறது.

அடக்கிக் கொண்டு கிளம்புகிறார்.

சேகரே விநாயகத்திடம் தானொரு சென்னைவாசி. படித்து முடித்துவிட்டு வேலைக்கு காத்திருக்கும் நபர் என்று கூறியிருப்பதை எப்படிச் சொல்ல...?

முதலாளிக்கு எப்போழுதுமே வறட்டு ஜம்பம் அதிகம்.

எது எப்படியோ, சர்ப்ப பலி பூஜைக்கு ஒப்புக் கொண்டதே பெரிய விஷயம்.

அரசியலுக்காக சார்ந்திருக்கும் கட்சிக்காக பகுத்தறிவுவாதியாட்டம் தன்னைக் காட்டிக் கொள்ளப் போக, இறுதியில் நம்ப வேண்டியதைக்கூட நம்பாத படி போய்விட்டது புத்தி. இப்படித்தான் எடக்கு மொடக்கு பண்ணுகிறது.

விநாயகம் நினைத்தபடி நடக்கும்போது தோட்டக்காரன் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான்.

"ஐய்யா... ஐய்யா..."

"என்னய்யா... என்ன... என்ன?"



"தோட்டத்துல பாம்புங்க."

"பாம்பா... அடிக்கறதுக்கென்ன?"

"முடியலீங்க. பயங்கரமா சீறுது... கார்கோட நாகம்."

"வா... எலே காராளம், கடம்பா, வாச்சாத்தி ஓடி வாங்கடா...!"

விநாயகம் தோட்டக்காரனுடன் சேர்ந்து ஓடுகிறார்.

ஓடிச்சென்று அனைவரும் நிற்கும்போது மதில் மேல் அழகாக படம் எடுத்து ஒரு பார்வை பார்த்து விட்டு அப்படியே பின் பாகத்தில் சரிந்து விழுந்து மிகச் சில நொடிப்போதில் மறைந்தும் போகிறது அந்த கார்கோட நாகம்.

அனைவரிடமும் ஸ்தம்பிப்பு. நல்லமணியும் உள்ளிருந்து அங்கு வந்து சேருகிறார்.

"என்னய்யா...?"

"சர்ப்பங்க."

"எங்க... அடிச்சிட்டீங்களா?"

"இல்ல ஓடிடுச்சுங்க..."

விநாயகம் சொல்லவும் நல்லமணி முகம் கறுத்துப் போகிறது.

எல்லோரும் அவரையே பார்க்கின்றனர்.

"விநாயகம், போய்யா போய் உடனே சர்ப்ப பலி பூசைக்கு ஏற்பாடு செய். நம்பூதிரிய கூட்டிக்கிட்டு வா. போ...! ஓடு! ஓடு...!

விநாயகம் உடனேயே போர்டிகோ காரில் ஏறிச் சிட்டாகப் பறக்கத் தொடங்க, அந்த வீடு முழுக்க

வேலையாட்கள் தரையையே பார்த்தபடி கழியும் கையுமாக நடக்க ஆரம்பிக்கின்றனர்.

எப்படி இருந்த வீடு...

இப்படியா பயப்பிராந்தியமாக மாறிப் போகும்?

# 6

'சொப்பனத்தில் அரவம் துரத்தினால் அது இரண்டுக்கு அறிகுறி. ஸ்வப்னம் காண்பவன் பெண் இன்பம் காணாதவனாயும், ரகசியக் குற்றங்கள் புரிபவனாயும் இருப்பான்.

இந்த இரண்டுக்கும் ராகு, கேது என்னும் பாம்புக் கிரகங்களின் தப்பான பார்வை காரணமாக இருக்கும்.

இவர்கள் அரவத்தைத் தெய்வமாகவும், புற்றினைக் கோயிலாகவும் கருதி வாழைப் பந்தலிட்டு வணங்க நலமேற்படும்.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

• • *

ஹார்லிக்ஸ் கலக்கிக் கொண்டிருந்தான் சேகர். அவனையே பார்த்தபடி அமர்ந்திருக்கிறாள் சந்தியா. 'இனி இவன் கிடைக்கப் போவதில்லை. தற்கொலை செய்துகொண்டுவிடலாம்.'—என்று நினைத்திருந்தாள். ஆனால் எல்லாமே மாறிவிட்டது. முற்றிலும் எதிர்பாராத மாற்றம். மந்திரம் போட்டது போன்ற மாற்றம். சேகர் ஹார்லிக்ஸைக் கலக்கி முடித்து நீட்டுகிறான்.

''சாப்பிடு.''



''தேங்க்ஸ்.''

''தேங்க்ஸ் அந்நியர்களுக்குச் சொல்றது. நான் அந்நியனா சந்தி?''

''ஏன் சேகர் அப்படிக் கேக்கறீங்க? அந்நியனா ஆகியிருக்க வேண்டியவங்களைத்தான் அந்தப் பாம்பு என்கிட்ட கொண்டு வந்து சேர்த்துடுச்சே.''

''ஆமாம் சந்தியா கெட்டதுல ஒரு நல்லதுன்னு சொல்றது இதைத்தானோ என்னவோ— பெரிய போராட்டம் ஒண்ணு இருக்குன்னு நினைச்சு வந்தேன். ஆனா பழம் நழுவி பால்ல விழுந்து அதுவும் நழுவி வாய்ல விழுந்த மாதிரி ஆயிடிச்சி. வாழ்க உன்னைக் கடிச்ச பாம்பு! வாழ்க அந்த ஓடிப்போன'மாப்ளை!''

''அது இருக்கட்டும். ஓடிப்போன அந்த மாப்ளை என்ன சொல்லிட்டு ஓடினான் தெரியுமா?''

''என்ன சந்தியா?''

''எனக்கு சர்ப்ப தோஷம் இருக்காம்.''

''அப்படின்னா?''

''பூர்வ ஜென்மத்துல நான், ஜோடியா திரிஞ்ச இரண்டு நல்ல பாம்புகளை அடிச்சுக் கொன்னதால வந்த பாவம்தான் இந்த ஜென்மத்துல சர்ப்ப தோஷம்.''

''சூப்பர் கற்பனை ஆமா; போன ஜென்மத்துல நீ யாரு?''

''யாருக்குத் தெரியும்?''

''பாம்ப அடிச்சுக் கொன்னது தெரியும். ஆனா நீ யாரா இருந்தேங்கறது தெரியாதா?''

''என்ன நீங்க? சர்ப்ப தோஷம் எதனால வரும்னு கேட்டப்போ பாட்டி சொன்னதைச் சொன்னேன்.

உடனே நீங்க அத நிஜம்னு நம்பி யாரு என்னன்னுல்லாம் கேட்டுகிட்டு?''

''ஏய்... சும்மா விளையாட்டுக்குக் கேட்டேன். இந்த ஜாதகம், தோஷம் இதெல்லாம் தர்ம கப்ஸான்னு நினைக்கற ஆள்— உனக்கு தெரியாதா?''

''இருக்கலாம் சேகர். ஆனா என்னால இப்ப அப்படி நினைக்க முடியலை.''

''ஏன்?''

''நடந்த, நடந்துகிட்டிருக்கற சம்பவங்கள்தான் காரணம்.''

''என்ன — அந்த நடந்த, நடந்துகிட்டிருக்கிற சம்பவங்கள்?''

''இந்த நாகர்கோவில்ல எவ்வளவோ வீடுகள். லட்சக்கணக்கான மனுஷங்க. ஆனா என் குடும்பத்துல மட்டும்தான் மூணுபேரை பாம்பு கடிச்சுக் கொன்னுது.''

''நிஜமாவா?''

''ஆமாம் சேகர். சோகமான அந்த விஷயத்தை உங்ககிட்ட கூட நான் சொல்லலை. எங்க அதைக் கேட்டு நீங்க என்னை நேசிக்காமப் போயிடுவீங்களோங்கற பயம்தான் அதுக்குக் காரணம்.''

சந்தியா மெலிந்த குரலில் ஆனால் ஆழமாக வருத்தம் காட்டுகிறாள்.

ஆஸ்பத்திரியின் படுக்கையறையில் நல்லவேளையாக இருவர் மட்டுமே... சேகர் சிரித்தபடி கேட்கிறான்.

''சரி சந்தியா; இப்ப சொல்லேன், நான்தான் இதுல எல்லாம் நம்பிக்கை இல்லாதவன்னு சொல்லிட்டேனே.''

''ஒரு வேளை நான் சொல்றதக் கேட்டுட்டு நம்பிக்கை வந்துட்டா...''



''என் காதல் மேல உனக்கு இவ்வளவுதானா நம்பிக்கை?''

சேகர் சொல்லும் விதம்- பார்க்கும் விதம்—அவனது தோரணை எல்லாமே அவளை நெகிழ்த்துகிறது.

சுற்றிச் சுற்றி ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சொல்ல ஆரம்பிக்கிறாள்.

''எங்க வீட்டுக்குப் பின்னால ஒரு தோட்டம் இருக்கு. நயினார் தோப்புன்னு அதுக்குப் பேரு. அது விலைக்கு வந்தது. அப்பா அதை வாங்கிட்டார்...''

''சரி...''

''அந்தத் தோப்புல ஒரு பாம்புப் புத்து ரொம்ப வருஷமா இருந்தது அப்பா அதை இடிச்சுட்டு அந்த இடத்துல தோப்புக்கான Rest Shed கட்டச் சொன்னார். வேலைக்காரங்க பயந்தாங்க. அப்பாவே துணிச்சலா கடப்பாரையை வாங்கி புத்தை இடிச்சுத் தள்ளினாரு. அப்ப –உள்ள ஒரு நல்லபாம்பும் அதோட குட்டிகளும் இருந்தன.

அதை எல்லாம் அடிச்சுப் போட்டுட்டார். அப்ப தாய் நாகம் மட்டும் எப்படியோ தப்பிச்சிடிச்சு.

மறுநாளே அது என் அம்மாவும் என் தம்பியும் தங்கையும் படுத்திருக்கற அறைக்கு வந்து, தூங்கிகிட்டு இருக்கற அவங்களக் கடிச்சிடுச்சு.

விடிஞ்சு போய்ப் பார்த்தா மூணு பேரும் இறந்து கிடந்தாங்க. உடம்பெல்லாம் நீலம் பாரிச்சுக் கிடந்தது. அவங்களக் கடிச்ச அந்தப் பாம்பும் அங்கையே செத்துக் கிடந்தது.''

மூச்சு விடாமல் சந்தியா சொல்லிவிட்டு, சற்று இடைவெளி விடுகிறாள். சேகர் சிந்தனையோடு தாடையைத் தடவுகிறான்.

''என்ன சேகர்... எதாவது அம்புலி மாமா கதை கேட்ட மாதிரி இருக்குல்ல... ஆனா நான் சொன்னது சத்யமான உண்மை சேகர்.''

''சேச்சே... நீ சொன்னதை நான் கதைன்னுல்லாம் நினைக்கல. என் எண்ணமே வேற.''

''என்ன?''

''பாம்புப் புத்தை இடிச்சது உங்கப்பா. அந்தப் பாம்பு பழி வாங்க முடிவு செய்திருந்தா உங்கப்பா வைல்ல கடிச்சிருக்கணும்? ஏன் உங்கம்மாவையும் உன் சிஸ்டரையும் பிரதரையும் கடிச்சது? அதான் என் கேள்வி.''

''அப்பாவுக்கு அப்பதான் வேதனை தெரியும்கற தால இருக்கலாமில்லியா?''

''அப்படியா?''

''இருக்கலாமில்லியா?''

''இருக்கலாம்... இருக்கலாம்...'' சற்றுக் கிண்டலாக அவன் ஆமோதிக்கும்போது அவன் கண்களிரண்டும் பிதுங்கி விடுகிற மாதிரி விரிகின்றன.

''என்ன சேகர்... ஏன் உங்க பார்வை அப்படி மா...?''

அவளும் முடிக்கும் முன் கண்களை விரிக்கிறாள். முகத்தில் பய ரேகைகள். கைகள் நடுக்கமுடன் தந்தி யடிக்கத் தொடங்குகின்றன.

காரணம், எதிரில் வாஷ்பேசின் மேல் கம்பீரமாக படம் எடுத்த நிலையில் ஒரு நாகம்!

# 7

'தோஷங்களில் கொடியது சர்ப்பதோஷம். மரணம் வரும் வரை இது தோஷித்தவரைப் பெரிதும் துன்புறுத்தும். சர்ப்ப தோஷிகள் கண் பட்டால் கறந்த பால் திரிந்துவிடும்.

காளஸ்த்ரி சென்று ஒரு மண்டலம் நெய் தீபம் இட்டு உபவாசம் இருக்க தோஷம் விலகும். கைரேகையைக் கொண்டும் தோஷம் உடையவர்களைக் கண்டறியலாம்.

சர்ப்பம் ஒன்று கவிழ்ந்து படுத்துறங்குவது போல ஒரு ரேகை சந்திர மேட்டிலிருந்து குரு மேடு நோக்கி சென்றிருக்கும்.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

• • •

புத்திசாலித்தனமாகவும், சாமர்த்தியமாகவும் செயல் பட்டதில் அந்தப் பாம்பை அடித்துக் கொல்ல முடிந் தது. அதை ஒரு கோலால் தூக்கிச் செல்லும்போது ஆஸ்பத்திரியே பார்த்து நடுங்குகிறது.

வார்டு அறைக்குள் எப்படி பாம்பு வந்திருக்க முடியும்?

ஆளாளுக்குப் பீதியுடன் பேசிக் கொள்கிறார்கள்.

அது சந்தியாவைக் கடிக்கத்தான் வந்திருக்க வேண்டும் என்று முடிவு கட்டுகிறார்கள்.

அவளும் மிரண்டு பயத்தின் உச்சிக்கே போய் விட்டிருக்கிறாள். முதல் நாள் கடித்த விஷம் உடம்பை

விட்டு இறங்கி விட்டாலும் பயம் விஷத்தை விடக் கொடுமையாக உடம்பில் ஏறிவிட்டிருக்கிறது.

சற்று முன்வரை சாதாரணமாய் இருந்த சேகர்கூட இப்பொழுது பயப்பள்ளத்தில் விழுந்து கிடக்கிறான். அவனது மார்பில் புறாக் குஞ்சாட்டம் ஒடுங்கியபடி சந்தியா.

"சேகர், பயமா இருக்கு சேகர்!"

"பயப்படாதே! நான் இருக்கேன்ல?"

"இல்ல சேகர்... இந்த ரூமுக்குள்ளேயே அது வந்துடிச்சின்னா என்னால நம்ப முடியல சேகர். பயமா இருக்கு சேகர்."

"டோன்ட் ஒர்ரி... நான்தான் கூடவே இருக்கேனே."

"இன்னிக்கு டிஸ்சார்ஜாமே?"

"ஆமாம். வீட்டுக்குக் கிளம்ப வேண்டியதுதான்."

"ஐயோ அந்த வீட்டுக்கா?"

"லுக் சந்தியா... பிரச்சினைக்குரிய தருணங்கள்ல தான் நாம தைரியமா இருக்கணும்."

"தைரியமாவா... எப்படி சேகர்? நீங்கதான் பாத்தீங்களே? வீட்ல பாம்பு. இப்ப இங்க. இன்னும் எங்கெங்கியோ தெரியலியே..."

அவள் புலம்பும்போதே கதவைத் திறந்துகொண்டு படபடக்க உள் நுழைகிறார் நல்லமணிப்பிள்ளை.

"தாயி... என்னதாயி இங்கையும் வந்துடிச்சாமே அந்த ப்பூச்சி. ஒண்ணும் ஆகலையே?"

"ஒண்ணும் ஆகலைங்க. நல்ல வேளை பாத்துட்டேன்."

"அங்க வீட்லயும் இதே கதைதான். மாடிப்படில சாண்ட்லியர் விளக்குல, ஃபேன் விசிறில, கதவுமேல ஜலதாரைலன்னு— இந்த இடம்னு இல்லாம திரியுது. உயிரே கைல இல்ல..."

"அப்பா... பாட்டி சொன்ன அந்த சர்ப்ப பலி பூஜையைக் கட்டாயம் பண்ணுங்கப்பா. நீங்க அந்தப் புத்தை கை வெச்சிருக்க வேண்டாம். இன்னிக்கு இப்படி அலை பாயவும் வேண்டாம்."

"இப்ப எதுக்கும்மா அந்தப் பேச்சு? விநாயகன் திருவனந்தபுரம் போயிட்டான். நம்பூதிரிகளோடதான் வருவான். நாளைக்கே பூஜை."

நல்லமணி சொன்னபடி சேகர் பக்கம் திரும்புகிறார்.

"தம்பி இதை எல்லாம் பார்த்து உங்களுக்கு ஒண்ணும்..."— அவர் எதைக் கேட்க வருகிறார் என்பது அவனுக்கும் புரிகிறது.

"சார்... என் சந்தியாவை எந்த பாம்பும் கடிக்கவிட மாட்டேன். அப்படியே கடிச்சா அந்தப் பாம்பு வாயால நானும் கடிபட்டுச் செத்துப் போயிடுவேன்."

அவன் சொன்னதைக் கேட்டு மார்பு விம்ம, பூரித்துப் போகிறார் அவர்.

"சார்..."

"என்ன தம்பி...?"

"இதை எல்லாம் நம்பறீங்களா?"

"எதை எல்லாம்?"

"பாம்பு— சர்ப்ப தோஷம் – பழிக்குப் பழி..."

"நானும்தான் ஆரம்பத்துல நம்பலை. ஆனா ஆஸ்பத்திரின்னு பார்க்காம இங்கையே பாம்பு வந்துடிச்சுன்ன உடனே நம்பித்தானே தீர வேண்டியிருக்கு...?"

"இது விஞ்ஞான உலகம்— இன்சாட் பறக்கற காலம்."

''அதுக்காக எந்தக் கோயில்ல கூட்டம் குறைஞ்சிருக்கு?''

''அதனால...''

''புதிரான சில விஷயங்கள் அறிவுக்குப் புலப்படாதபடி அந்த நாள்ல இருந்து இன்றைய தினம்வரை கண்ணாமூச்சி காட்டிகிட்டுதான் தம்பி இருக்கு...''

''இந்தப் பாம்பு விஷயம் எனக்கு ஒண்ணும் புதிராத் தெரியலை சார்...''

''வேற எப்படித் தெரியுது?''

''இது ஏதோ மனுஷ சதி...''

''மனுஷ சதியா?''

''ஆமாம்... உங்க மனைவி குழந்தைகள் மரணத்துல இருந்தே அதுதான் காரணமா இருக்கணும்.''

''என்ன தம்பி, நீங்கதான் இப்ப புதிர்போட்றீங்க?''

''இது புதிர்தான். ஆனா விடையுள்ள புதிர். உங்களுக்கு எதிரிகள் யாராவது...''

''எனக்கு எதிரிகளா... ஐய்யோ... இந்த நாகர் கோவிலே நான்னா கைகட்டித்தானே நிக்கும்?''

''நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. உங்க அரசியல் ஈடுபாடு காரணமா எதாவது பொறாமை, போட்டி...''

''இல்லையே... நான்தான் எப்பவுமே தீவிர அரசியல்ல ஈடுபட்றதேயில்லை.''

''அப்ப விரோதிகள் எதிரிகள்னு யாருமே இல்லைங்கறீங்களா?''

''ஆமாம். அப்படியே இருந்தாலும் இந்த அளவு நிச்சயம் போகமாட்டாங்க தம்பி.''



''அப்படின்னா இது அந்த சர்ப்ப தோஷத்தால தானா?''

''வேற எப்படிச் சொல்ல?''

''திரும்பவும் சொல்றேன். இது இருபதாம் நூற்றாண்டு. கைக்குள்ள அடங்கற ஒரு செல்ஃபோன் மூலமா உலகத்துல எங்க வேணுமானாலும் யார்கூட வேணுமானாலும் பேசறோம். பார்த்துக்கறோம்.

வானவீதில பல லட்சம் மைலுக்கு அப்பால நடக்கற விஷயங்களையும் கணிக்கிறோம். எரிகல் மழை இன்னிக்கு ராத்திரி 12 மணிக்குப் பெய்யும்னா பெய்யுது. இந்த இடத்துல இவ்வளவு மழை பெய்யும்னா பெய்யுது!''

''சரி சரி... இதெல்லாம் எனக்கும் தெரியும். அதனால இந்த பாம்புங்க விஷயத்துல நிச்சயமா தோஷமோ, பழி உணர்வோ இல்லைங்கறீங்களா?''

''நிச்சயமா?''

''அப்படி இருந்தா அதுல எனக்குச் சந்தோஷம் தான். இவ்வளவு தீவிரமாச் சொல்ற நீங்களே அந்த மர்மத்தையும் கண்டு பிடிக்கலாமே...!''

''சொன்னாலும் சொல்லலேன்னாலும் நான் செய்யத்தான் போறேன்.''

''அதுக்கு நான் என்ன செய்யணும்.''

''நீங்க எதுவும் பண்ண வேண்டாம். உங்க நடவடிக்கைகளை எனக்காகவோ, என் கருத்துக்காகவோ மாத்திக்காம போய்கிட்டே இருங்க...''

''சரி.''

நல்லமணிப்பிள்ளை அரை மனதாகச் சம்மதிக்கிறார்.

# 8

'கானக நாகங்களில் 'மாணிக்க நாகம்' என்பது ஒருவகை. யாரையும் கடிக்காமல் விஷ சேதம் இன்றி பனிக்குளிர் நடுவில் வாழும் இதன் விஷம் திட சொருபமாகிக் கல்போலாகி விடும். இதை எடுத்து மோதிரம் செய்து அணிந்து கொண்டால் துஷ்ட தேவதைகளின் தாக்குதலிலிருந்தும் திருஷ்டி, ஏவல், சூன்யங்களில் இருந்தும் விடுபடலாம் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை.'

சர்ப்ப பலி பூஜா க்ருதி

* * *

பாம்பன் காட்டு நம்பூதிரி!

பார்க்க நன்கு உயர்ந்த தோற்றத்தோடும், கட்டுக் குடுமி களபச் சந்தனம் என்கிற லாவண்யத்தோடும், கச்சம் உடுத்திக் கொண்டவராக, கைவசம் ஒரு ஆனை முடி வளையம் தரித்தவராக, நல்லமணிப்பிள்ளையின் மாளிகைப் பிரவேசம் செய்கிறார்.

கூடவே கோபாலன் நம்பூதிரி, சொச்சு பாலன் நம்பூதிரி, சுப்ரமண்யன் நம்பூதிரி என்று சிஷ்யப் பிள்ளைகள் மூவர்.

திறந்த மார்பு, பருத்திப் பூணூல், ஈரச்சிரசு புருவத்தில் திருஷ்டி மைப்பூச்சு, விரலில் ஆனைமுடி மோதிரம், கால் விரல் ஒன்றில் வன்னிமர மெட்டித் துண்டு என்று நம்பூதிரிமார்களின் வேதமார்க்க பிராம்மண லட்சணங்கள்.



''வரணும் வரணும்... இரிக்கணும்...'' நல்லமணிப் பிள்ளை ஆசனத்தைக் காட்டி அமரச் சொல்ல, அருகிலேயே விநாயகம், சேகர், அழகம்மைநாச்சி, சந்தியா என்று குடும்பமே...

நம்பூதிரி ஆசனத்தில் அமராது நடுமையத்தில் நின்று, பிரம்மஸ்தானமாகிய கூரையை அண்ணாந்து பார்க்கிறார்.

இடுங்கிய கண்கள் வீட்டைச் சுழன்று பிடித்துப் பார்க்கிறது,

''இரிக்கணும் நம்பூதிரி. பால் அல்லெங்கில் சாய குடிக்காமோ?'' — நல்லமணிப்பிள்ளை உபசரணையைத் தொடர ''பச்சவெள்ளம் கூட வேண்டா''— என்று கரகரப்பான குரலில் சொல்கிறார் நம்பூதிரி.

''ஞங்கள் வலிய விஷமிச்சு. சர்ப்பங்கள் நாலாபுறமிருந்தும் வன்னு போய். எண்ட மகளை ஒரு சர்ப்பம் தீண்டிக் கடிச்சு...''

''அறியும்... அறியும். எனிக்கி எல்லாமறியும் பேடிக் கண்டா.''

''நம்பூதிரி சர்ப்ப பலி பூஜை செஞ்சு இந்தக் குடும்பத்துச் சிக்கலைத் தீர்த்து வைக்கணும்'' அழகம்மை நாச்சியும் இடையில் நுழைகிறாள்.

நம்பூதிரி தன் சிஷ்யக் கூட்டம் பார்க்கிறார். பின் நால்வருமாக கிணற்றடி எங்கே என்று கேட்டு அங்கே செல்கின்றனர்.

வரிசையில் நின்று கிணற்றில் இருந்து நீர் இறைத்துக் கொட்டிக் கொள்கின்றனர். பின்னர் துவட்டிக் கொண்டு ஈரவேட்டியையும் பிழிந்து அப்படியே உடுத்திக் கொள்கின்றனர்.

கொண்டு வந்திருந்த பனை ஓலைப்பெட்டி ஒன்றில் சந்தனக்கட்டி. அதை எடுத்துக் குழைத்து நெற்றியில் தீட்டிக் கொள்ள, கூடவே ஒரு மைக்குப்பி. கட்டை விரலில் மையைத் தீய்த்து எடுத்து புருவம் மேலே பூசிக் கொள்கின்றனர்.

அடுத்த செயலாக நால்வரும் நான்கு திக்குப் பார்த்து கை கூப்பி நின்று கொண்டு கண்கள் இடுங்கப் பிரார்த்திக்கின்றனர்.

''என்ன செய்யறாங்க சந்தியா?'' — சேகர் பார்த்த படியே கேட்கிறான்.

''இவங்க நம்பூதிரிங்க. அதுலையும் விசேஷமான பாம்பன் காட்டு நம்பூதிரிங்க. ரொம்ப ஐதீகமானவங்க! இவங்க செயல் எல்லாம் நமக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கும். ஆனா இவங்களோட யாரும் போட்டி போடவோ— இவங்களைப் போல செயல்படவோ முடியாதுன்னு பாட்டி சொல்வாங்க...''

சந்தியா விளக்கமளிக்கும் போது வயதான பாம்பன் காட்டு நம்பூதிரி, ஒரு அகல்விளக்கேற்றி, கையில் பிடித்துக் கொண்டு அந்தத் தோட்டத்தைச் சுற்றிவரத் தொடங்குகிறார். மிச்சமுள்ள மூவரும் ஏதோ மந்தி ரத்தை உச்சரித்தபடி அவனைத் தொடர்கின்றனர்.

மெலிதாகக் காற்று வீசுகிறது. தோட்டத்துச் செடி கொடிகள் எல்லாம் தழைந்து அசைகின்றன. ஆனால், தீபச்சுடர் துளியும் அசையாமல் எரிகிறது.

''எப்படி சந்தியா இது சாத்யம்?''

''அதான்... அதான் நம்பூதிரிகளோட சாமர்த்தியம், பொறுங்க என்ன நடக்குதுன்னு பார்ப்போம்...''

தீபமேந்திய நம்பூதிரி தோட்ட பாகம் முழுக்கச் சுற்றி வந்துவிட்டு வீட்டுக்குள் நுழைகிறார். எல்லோரும் பின் தொடர்கின்றனர்.



வீட்டின் பிரம்ம பாகக் கூரைக்குக் கீழே போய் அமர்கின்றனர். பார்வை சந்தியா பக்கம் திரும்புகிறது.

''நீ தானே பிள்ளையிண்ட புத்ரி?''

''ஆமாம்.''

''போய் பஞ்ச தீபமிட்ட பூஜா விளக்கு ஒண்ணு கொண்டுவா.''— அவரது கட்டளை அடுத்த நிமிடத் தில் ஈடேறுகிறது.

''கீழே ஒரு ஸ்ரீ சக்ர கோலமிடு.''

அவ்வாறே இடுகிறாள்.

''அதுமேல தீப விளக்கை வை.''

வைக்கிறாள்.

' உள்ளே நெய்விட்டு தீபம் போடு.''

போடப்படுகிறது.

''ஒதுங்கிப் போய் நில்லோ...''

அவர் கட்டளைப்படி ஒதுங்கிப்போக, நம்பூதிரியின் பார்வை தன் சிஷ்யப் பிள்ளைகளில் ஒருவனிடம் விழு கிறது. அவன் ஒரு பனை ஓலைப் பெட்டியை அவர் முன் வைத்து அதன் மூடி வாயை திறக்கிறான். உள்ளே கடல் சோழிகள்.

''பெண்ணே இதில் ஒரு கை பாகம் சோழி எடுக்கோ...''— நம்பூதிரியின் ஆக்ஞைப்படி சந்தியா நெருங்கி வந்து சோழியைக் கையில் அள்ளுகிறாள்.

அவள் அள்ளிய சோழிகளைத் தரை மேல் வைத்து அதில் ஒரு உள்ளங்கை அளவு ஒதுக்கி எடுத்து தரை மேல் விளக்கின் முன் போடுகிறார் நம்பூதிரி. சரிபாதி சோழிகள் கவிழ்ந்தும், மறுபாதி நிமிர்ந்தும் விழுகின்றன.

முகம் உடனே மாறிப் போகிறது.

"என்ன நம்பூதிரி... பிரஷ்னமா?"

"ஆமாம்."

"என்ன வந்துருக்கு?"

"எட்டு..."

"அப்படின்னா?"

அழகம்மை நாச்சி விளக்கம் பெறத் துடிக்கிறாள். பாம்பன் காட்டு நம்பூதிரி நிமிர்ந்து பிரம்ம பாகத்துக் கூரையின் கூரிய முனை பார்க்கிறார்.

"பிள்ளை... இந்த மனை ஒரு கால சர்ப்ப தோஷம் தாக்கிய மனை..."

"புரியலையே நம்பூதிரி..."

ஒரு காலத்துல இங்க நாகராஜனுக்கும் கோவில் இருந்தது.

அதை இடிச்சு இந்த மனை கட்டப்பட்டது. பின்னே சாந்தி பரிகாரம் செய்ததால அந்தச் சாபம் வீர்யமில்லாது போனது. ஆனா நீ திரும்ப அதே தப்பை செய்து அந்த சாபத்துக்கு உயிர் வரவழைச்சுட்டே..."

"............"

மௌனம் காக்கிறார் நல்லமணிப்பிள்ளை.

"நான் அப்பவே சொன்னேன். கேக்கல இவன். நல்ல பாம்பை அடிக்கலாமா? அதுலையும் அது ஒரு தாயா குட்டிகளை ஈனும்போது அவைகளை அடிக்கலாமா?"

"அம்மா வாய மூடு... அது ஒரு விஷ ஜந்து. சிங்கம், புலி கடிக்க வந்தா திருப்பித் தாக்க மாட்டியா?— அந்த மாதிரிதான் நான் செய்தேன்."



நல்லமணி விளக்கம் நம்பூதிரியைக் கோபப் படுத்துகிறது. தன் சிஷ்யப் பிள்ளையின் பக்கம் பார்வை ஸ்ருட்டென்று திரும்புகிறது. அதில் அம்பின் கூர்மை அனலாய் வெம்மை.

"வாங்க போகலாம்..."— என்று உடனேயே அவர்களை அழைத்துக் கொண்டு கிளம்புகிறார்.

"நம்பூதிரி என்ன இது? எங்க பூஜை?" அழகம்மை அலறுகிறாள்.

"பின்ன எந்தா? சர்ப்பதாக்கம் செய்துவிட்டு அதை ஒரு தற்காப்புன்னு சொல்லிகிட்டு, நல்ல சர்ப்பம் ஒரு தெய்வம். அது ஒரு சின்னக் குழந்தையைக்கூட தானா தீண்டாது."

நம்பூதிரியின் விளக்கம் சேகரை ஆச்சரியப் படுத்துகிறது.

"அப்ப நல்ல பாம்பைப் பார்த்தா அடிக்கக் கூடாதா... விட்டுடணுமா?" கேட்கிறான்.

நம்பூதிரி பார்வை உடனே அவன் பக்கம் திரும்புகிறது.

"யார் நீ?"

"நான்... நான்... சேகர்."

"ஆமாம் நம்பூதிரி. அவர் இந்த வீட்டு மாப்ளையா வரப்போறவர்."

"ஓஹோ... கவனிச்சுக் கேள்! சர்ப்பங்களைக் காண நேரிட்டால் அது உன் கெட்ட சமயம். உடனே சிவநாமம் சொல்லிக் கண்ணை மூடிக்கணும். அல்லெங்கில் கெட்ட சமயம் உன்னை நசிப்பிக்கும். அந்த சர்ப்பத்தைத் தீண்டி கொல பாதகம் செய்யச் சொல்லும். பின்னே சாபம் வந்து சேரும். சிவநாமம் சொல்லிக் கெட்ட சமயத்த ஜெயிக்க வேண்டிய நீ பாதகம் செய்து பழியைச் சுமப்பாய்.

ஒரு கன்னிப் பெண்ணின்ட ஜீவன்போல் ஆயிரம் மடங்கு உயர்வானது ஒரு சர்ப்பத்தின் ஜீவன். ஒரு ஜீவன் சர்ப்பமாய் ஜனிக்க நிறைய பாப காரியங்கள் காரணம்.

அப்படி பாபம் செய்து பெற்ற சர்ப்ப ஜீவனை நீ நசிப்பிச்சால் அந்த ஜீவனின் பாபம் விலகி அது முக்தி யடையும். ஆனால் அந்த பாவங்கள் உன்னை சேரும்.

பின்னே நீ ஒரு சர்ப்பமாய் ஜனிப்பாய். எலியும் தவளையும் விழுங்கிப் பதுங்கி ஜீவிப்பாய்.''

நம்பூதிரி ஒரு சர்ப்ப புராணமே படிக்கத் தொடங்க சேகர் சிரிக்கிறான்.

''எந்தா இது விஷமம்?''

''விஷமமில்ல நம்பூதிரி... என்னமோ ஜீவன்களோட பக்கத்துல இருந்து நேர்ல பார்த்த மாதிரி நீங்க சொல்றதக் கேட்டு சிரிக்காம என்ன பண்றது?''

பாவம் செய்து பிறந்த பிறப்பு சர்ப்பம்னா அதைக் கொல்றதுல என்ன தப்பிருக்கு? நீங்கள்லாம் உங்க பிழைப்புக்காக இந்த மாதிரி கதை விட்றீங்க.

சைனால பாம்பு சூப்போட்டு சாப்பிட்றாங்க. அவங்களைப் பொருத்தமட்டுல அது முருங்கைக்காய், புடலங்காய் போல ஒரு வெஜிடபிள். அவ்வளவுதான்! அங்க எல்லாம் என்ன எல்லோரும் தினமும் பாவத்தச் சுமந்து அழிஞ்சா போயிட்டாங்க?''

வாதம் வளருகிறது. அழகம்மை சேகரை முதல், தடவையாக மிகுந்த கோபத்துடன் பார்க்கிறாள்.

''தம்பி வேண்டாம்... எதுவும் பேசாதீங்க. நம்பூதிரி, நீங்க உங்க பூஜையைத் தொடருங்க. நான் நம்பறேன்.''

வில் சேரினைத் தள்ளிக்கொண்டு வேகமாய் முன்னுக்கு வருகிறாள் அழகம்மை. நம்பூதிரி சிரிக்கிறார். ஈரவேட்டி கிட்டத்தட்ட காய்ந்து விட்டது. மற்ற



மூவரும்கூட உடை காய்ந்த நிலையில் நின்ற வண்ணம் பார்க்கின்றனர்.

பிரஷ்னத்தில் கவிழ்ந்து விழுந்த எட்டு சோழிகளை பார்க்கிறார் நம்பூதிரி. அதை சேகரைப் போய் எடுக்கச் சொல்கிறார்.

''நீ போய் அந்தச் சோழிகளை எடு...''

எடுக்கிறான் அவன்.

''போடு...''— கட்டளையைத் தொடர்ந்து கைகளைக் குலுக்கி, தரையில் சோழிகளைப் போடுகிறான். கூர்ந்து கவனிக்கச் சொல்ல, கவனிக்கிறான்.

ஆச்சரியமாய்—திரும்பவும் எட்டு சோழிகளே கவிழ்ந்து கிடக்கின்றன.

''எத்தனை...?''

''எட்டு.''

''பெண்ணே நீ வந்து போடு.''

நம்பூதிரி சந்தியாவை அழைக்க, அவளும் சோழிகளை வாங்கிக் குலுக்கி தரையில் விசிறுகிறாள்.

மீண்டும் ஆச்சரியம். அவளது வீச்சிலும் எட்டுச் சோழிகள் நிமிர்ந்தும் மற்றவை கவிழ்ந்தும் விழுகின்றன.

''பிள்ளை இனி நீ...''

பிள்ளையும் சற்று நடுக்கமுடன் சோழிகளைக் குலுங்கி தரை மேல் பரத்தி வீசுகிறார். திரும்பவும் எட்டு சோழிகள் மட்டும் நிமிர்ந்து விழுகின்றன.

''எந்தாமாறனே... இப்படி எட்டு விழுந்ததே காரியம் அறியுமோ நீ?''- நம்பூதிரி சேகரைப் பார்த்துக் கேட்கிறார்.

''தெரியல...''

''சர்ப்ப தோஷ மனையில் மட்டும் இப்படி நிகழும் அறிஞ்சோ? ஈ வீட்டின் சனி மூலையில் ஒரு சர்ப்ப

30164 4655921

விக்ரகம் உண்டு'' — என்று ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறார்.

''இந்த வீட்ல சர்ப்ப விக்ரகமா?''

''ஆமாம்...'' — அவர் ஆமோதிப்பதோடு பஞ்ச தீப விளக்கைக் கைகளில் பிடித்துக் கொண்டு வாஸ்து சாஸ்திரப்படி கூறப்படும் சனி மூலை எனப்படும் வீட்டுக்கு வெளியிலான நைருக பாகம் நோக்கி நடக்கிறார்.

சிஷ்யர்கள் பின் தொடருகின்றனர்.

நைருக பாகத்தில் ஒரு பெரிய ஒதிய மரம். மரக் கிளைகளில் காக்கை குருவிக் கூட்டம்.

திம் திம் என்று விளக்கோடு நம்பூதிரி நடந்து வருவதைப் பார்த்து அவை வானில் ஏறிப் பறக்கத் தொடங்குகின்றன.

அவைகளில் காக்கைக் கூட்டம் நிறைய... அவை நம்பூதிரி தலைமேல் வட்டம் கட்டி பறக்க ஆரம்பித்து கரையத் தொடங்குகின்றன.

நம்பூதிரி நிமிர்ந்து சிவந்த கண் கொண்டு பார்க்கவும் பயந்தது போல் ஒதுங்கிப் போகின்றன.

மாளிகைப் பணியாட்கள் ஒரு ஓரமாகக் கூடிக் குசுகுசுத்த வண்ணம் இருக்கின்றனர்.

நம்பூதிரி விளக்கோடு வருவதையும், காக்கைக் கூட்டம் கத்தியபடி பறப்பதையும் இமைக்கக்கூட மறந்து பார்க்கின்றனர்.

ஒதிய மரத்தடியில் சமதளமாய் நிலம்.

அதில் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக்காட்டி ''பிள்ளை இந்த இடத்தைத் தோண்டு'' என்கிறார் நம்பூதிரி.

''எதுக்கு நம்பூதிரி?''



''தோண்டு.''

அடுத்த நொடி நம்பூதிரியின் கட்டளை செயல் படுத்தப்படுகிறது. ஒரு பணியாள் மண் வெட்டியும் கையுமாக வந்து மண்ணைப் புண்படுத்த ஆரம்பிக்கிறான்.

ஒரு அடி...

இரு அடி...

மூன்று அடி

நான்கு அடி...

ஐந்தாவது அடியில் கடப்பாரை முனையில் தீக் கதிர் புறப்படுமளவு சப்தம். குனிந்து எல்லோரும் பார்க்கின்றனர். உள்ளே ஒரு சர்ப்ப விக்ரகக்கல்லின் தலைப் பாகம் தெரிகிறது. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் முழுவதுமாகத் தோண்டப்பட்டு இரண்டடி உயர சர்ப்ப விக்ரகப் பட்டியக்கல் அனைவர் கண்களிலும் படுகிறது.

''நோக்கியோ... நோக்கியோ...''

நம்பூதிரி கத்தவும் எல்லோரும் வாயை இறுக்க மூடிக் கொள்கின்றனர்.

''இது ஒரு நாக கன்னியிண்ட பிரதமை. பூஜைகள் காணாது புதைஞ்சு போய். அதனால் சர்ப்ப தோஷம் பிடிச்ச மனையாக இது ஆனது. இருந்தும் பாதகமில்லாது போகும்படி கருட பந்தனம் செய்யப்பட்டது...''

''கருட பந்தனமா?''

''ஆமாம் வரு...'' நம்பூதிரி நேர் கோணத்தில் உள்ள வடகிழக்கு பாகம் நோக்கித் திரும்பவும் விளக்குடன நடக்கிறார். எல்லோரும் அவரைத் திரும்பப் பின் தொடர்கின்றனர். வடகிழக்குப் பாகத்தில் நல்ல

மணி மாளிகைக்கே எழில் சேர்க்கும் ஒரு சிறிய தடாகம் போல கிணறு.

"இந்த கிணற்றில் ஒரு கருட விக்ரகம் உண்டு... இறங்கி நோக்கு..." என்று கத்துகிறார் நம்பூதிரி.

ஒரு பணியாள் தயங்கித் தயங்கி அதைத் தொடர்ந்து கிணற்றுக்குள் இறங்குகிறான். ஒரு ஓரமாய் மோட்டார் பம்பு செட். அதைப்பற்றி நிற்கிறான்.

"உம்... நடுவில் மூழ்கி பூமி தொடு. கருட விக்ரகம் தட்டுப்படும்" என்கிறார்.

அவன் நல்லமணிப் பிள்ளையைத் தயக்கத்துடன் பார்க்கிறான். அவரிடம் கட்டளை.

"உம் இறங்குடா... நம்பூதிரி சொல்றதையும்தான் பாத்துடுவோமே..."

'ஸ்ரெளக்க்க்...' என்று ஒரு சப்தம். அவன் தண்ணீரைத் திருகிக் கொண்டு உள் பாய்ந்துவிட்டான். மேலே எல்லோரும் இமைக்க மறந்து கொண்டிருக்க விநாடிகள் நிமிடங்களின் முதுகில் ஏறப் பார்க்கிறது.

வானில் காக்கைகளின் இரைச்சல்.

நிமிரும் நம்பூதிரி "ஸ்செள..." என்று சப்தமிட, அவை அந்த வீட்டின் தோட்டத்து நாவல் மரம் ஒன்றின் கிளை நோக்கி ஒடுங்கிப் பறக்கின்றன.

'ப்ளெக்ச்ச்...' நீரின்மேல் சப்தம். அந்தப் பணியாள் மூச்சு வெடிப்போடு தலையினைக் காட்டி கத்துகிறான்.

"முதலாளி... இருக்கு...இருக்கு... ஒரு பெரிய சிலை ஒண்ணு உள்ள இருக்கு..."

"எடுத்துகிட்டு வரதுக்கென்ன?"

"ஐய்யோ... பொண பாரம்!"

"வேண்டா... அதை எடுக்க வேண்டா. அது அங்கையே இருக்கட்டும். அது கருட விக்ரகம்.



மூந்தைய நாகதோஷத்துக்கான பந்தனமாயிட்டு. அதை உன்னோட முன்னோர்கள் செய்தாங்க.

இப்ப நீயும் சர்ப்ப பலி பூசையும், பந்தனமும் செய்யணும். இல்லேன்னா..."

"இல்லேன்னா..."

"மரணங்கள் தொடரும்— இந்த மனை ஒரு சர்ப்பக் காடாகி விடும்."

"நம்பூதிரி இன்னும் என்ன பேச்சு? பூசையையும் பந்தனத்தையும் பண்ணிடுங்க. தாமதிக்காதீங்க...!" அழகம்மை கெஞ்சுகிறாள்.

"ஏன் அதை நல்லமணி பறைய மாட்டாரா?" நம்பூதிரி நல்லமணி பக்கம் திரும்புகிறார்.

"என்ன கேட்டீங்க நம்பூதிரி...?"

"பந்தனமும் பூசையும் செய்யலாமோ?"

"அதுக்குத்தானே கூட்டிகிட்டே வரச்சொன்னேன்."

"அரை மனசாவா?"

"இல்ல முழு மனசா இப்ப சம்மதிக்கிறேன். இனி எங்க யார் கண்ணுலையும் பாம்புங்க படாம இருந்தா போதும்."

"அப்படின்னா உள்ள வா..." அவர் திரும்ப விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு வீடு நோக்கி நடக்கிறார். எல்லோரும் பின் தொடர ஒரு இடத்தில் அவரது கால்கள் தேங்கி நின்று இடப் பாகமாய் உள்ள மனோரஞ்சித மரத்தைப் பார்க்கின்றன.

அதன் உச்சந்தலை மேல் மஞ்சளாய் வாசம் கமகமக்க மலர்கள். அதன் மேல் நம்பூதிரியையும் அவன் பின் வரும் சகலரையும் பார்த்தபடி ஒரு நாகம்!

பிள்ளை முதல் சகலருக்கும் சுருக்கென்கிறது.

# 9

'மகிழம், தாழம், மனோரஞ்சிதம், முல்லை, மல்லி என்கிற நுண் மகரந்தமும், அளவிற்கதிக மான வாசமும் மிகுந்த மலர்க்காடுகள் எப் பொழுதும் நாகங்களுக்கு மிக உசிதமானவை. இவைகளின் வாசத்தை நெடுந்தூரத்திலேயே நுகர்ந்தறிந்து வந்துவிடும்.

தாழம் புதர்களில் நாகங்கள் மயங்கிப் படுத்து விடுவதும் உண்டு. நாகப் பிரீதியான இந்த மலர்களைக் கொண்டு நாக விக்ரகங் களை வழிபாடு செய்தால் அவைகளின் தோஷங்களிலிருந்து மீளலாம்.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

• • •

அந்த நாகம் ஆற அமர விடைத்துப் படமெடுத்து அனைவரையும் பார்க்கிறது. எல்லோரும் உறைந்து போகின்றனர்.

நம்பூதிரியின் கால்கள் அந்த மகிழ மரம் நோக்கி நடக்கின்றன. நாகத்திற்குச் சில அடி முன் வரை சென்று நிற்கும் நம்பூதிரி கை கூப்பி வணங்குகிறார். அது 'புஸ் புஸ்' என்று சீற்றமுடன் தலையை முன்னும் பின்னும் வட்டமிட்டு ஆட்டியபடி அவரைப் பார்க்கிறது.

சேகர் நம்ப முடியாதவனாகி விட்டான்.

சந்தியா அவனை ஒட்டிக்கொண்டு நடுங்கத் தொடங்கி விட்டாள்.



நாகம் மெல்லத் தழைகிறது — அப்படியே மரத்தை விட்டுக் கீழ் இறங்குகிறது. புல்தரையில் ஓடத் தொடங்குகிறது. அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க மாளிகைப் பின் சுவரை ஒட்டிய அடர்ந்த புதர்க் கூட்டத்துக்குள் புகுந்து மறைந்தும் போகிறது.

"அப்பாடா...!"

அனைவரின் மூச்சிலும் இப்பொழுதுதான் குளுமை.

"நோக்கியோ... ஞான் அதைப் பிரேமிச்சு நமஸ் காரம் செய்தேன். அது தன் வழியே போய்... அதே நாக சர்ப்பம்."

விளக்கமளிக்கிறார் நம்பூதிரி. கண்ணால் பார்த்தால் தான் நம்புவேன் என்று சொல்லும் நபர்களால் கூட வாய் திறக்க முடியாது

அப்படி ஒரு அதிசயக் காட்சி.

பிள்ளை பெட்டிப் பாம்பாய் அடங்கி விட்டார்.

"நம்பூதிரி... நான் ஒத்துக்கறேன்." சர்ப்ப பலி பூசையை எவ்வளவு சிறப்பாகவும் நல்ல விதமாகவும் செய்யணுமோ செய்துடுங்க. நான் அன்னிக்கு அந்த நாகங்களை அடிச்சிருக்கக்கூடாது. ஒத்துக்கறேன்."

நெடுஞ்சாண் கிடையாக விழுந்து ஒப்புதல் வாக்கு மூலம் தருகிறார் பிள்ளை.

"சரி சரி; மனைக்குள்ள வா..."

நம்பூதிரி மனைக்குள் நுழைய வேண்டி நடக்கக் காலெடுக்க மற்றவர்கள் பின் தொடர்கின்றனர்.

பார்க்கும் வேலைக்காரப் பணியாட்களில் ஒருவன் அதைப் பார்த்து சற்று வியந்து போகிறான்.

"பரவால்லியே... இந்த பாம்புங்க என் முதலாளியை கீழே விழ வெச்சுடுச்சே."

"சத்தம் போடாதடா...! கட்டி வெச்சு தோலை உரிக்கப் போறாரு..."

"கிழிப்பாரு... அவரே இப்ப கிழிஞ்சு கிடக்கறாரு... என்னைத்தான் உரிக்கப் போறாராக்கும்..."

அவர்கள் பேச்சு விநாயகம் காதில் விழுந்து விட திரும்பிப் பார்க்கிறார்.

கட்டி வைத்து உதைக்க முடிவெடுத்தால் அதைச் செயல்படுத்த வேண்டியவர் அவர்தானே?

விநாயகம் பார்ப்பது தெரிந்து உடனே அங்கிருந்து நழுவ ஆரம்பிக்கிறான் அவன்.

பார்த்துக் கொண்டே இருக்கிறார் விநாயகம்.

* * *

வீட்டின் மைய பாகம்.

சர்ப்ப பலி பூஜைக்கான ஏற்பாடுகள் தொடங்கி விட்டன. 'வீட்டில் எந்த ஒரு கதவையும், ஜன்னலையும், அடைத்து வைத்திருக்கக்கூடாது. திறந்து வையுங்கள்'— என்கிற உத்தரவுக்கேற்ப நல்லமணிப் பிள்ளையின் மாளிகை மொத்தமும் வெயில் படத் திறந்து கிடக்கிறது.

கழிப்பறைத் துவாரங்கள் அடைக்கப்பட்டிருந்தால் அதையும் திறந்து வைக்கச் சொல்லி உத்தரவு பறக்கிறது.

எதற்கு?

எதன் வழியாகவும் பலிநாகம் வரலாம் என்பதாலா?

ஆம்...!

ஒன்று வரும் அல்லது ஒன்பது வரும்!

இரவில் பலி பூசை செய்த இடத்தில் சுற்றிலும் மூங்கில் தட்டி அடைத்துப் பூட்டப்படும். பின் சாவித் துவாரங்களில் கூடச் சந்தனம் வைத்து அடைக்கப்



பட்டு இன்று பகலில் எத்தனைக்கெத்தனை திறந்து கிடக்கிறதோ அத்தனைக்கத்தனை அது மூடப்படும்.

இதன் நடுவில் ஒரே ஒரு நடுத்துவாரம் வழியாக நாகங்கள் வந்து மஞ்சள் குங்கும மேடையில் ஒன்பது கிண்ணங்களில் வைக்கப்பட்ட நவதான்யங்கள் மேலும் பூஜைப் பிரசாதங்கள் மேலும் விழுந்து புரண்டு அவைகளை ஆசிர்வதித்து விட்டுச் செல்லும். பின் மறுநாள் அவைகளை நாம் அப்படியே வழித்தெடுத்துக்கொண்டு சென்று ஓடும் நதியிலோ அல்லது கிணற்றிலோ அல்லது குழிதோண்டியோ புதைத்து விடவேண்டும்.

அப்படிச் செய்தால் தோஷம் நீங்கி விடும் என்பது ஐதீகம்.

அதற்கேற்ப அனைத்துப் பாகங்களும் திறந்து வைக்கப்பட, முடிந்த இடமெல்லாம் தாழம்பூ மடல் தோரணமாகக் கட்டப்படுகிறது. தென்னம்பாளை— செவ்விளநீர்க் குலைகளும் ஆங்காங்கே கட்டப்படுகின்றன.

அழகம்மை பார்த்தபடி இருக்கிறாள்.

திரும்பவும் குளித்து முடித்துவிட்டு ஈரம் சொட்ட வந்து நிற்கின்றனர் நம்பூதிரிகள்.

ஹோமம் வளர்த்து யாகமெல்லாம் செய்தாக வேண்டும். மொத்தமாய் லட்சம் ஆவர்த்தி... தலைக்கு 25000 ஆவர்த்தி வீதம் ஹோம குண்டம் வளர்ப்பார்கள் ஒவ்வொரு நம்பூதிரியும். அதற்குத் தேவையான பத்து டின் நெய்யும் வந்து இறங்கி விட்டது.

கூடவே அது என்ன கறுப்புத் துணி! அதை நன்கு விரித்து ஹோம குண்டத்தைச் சுற்றிப் பரத்துகிறார் ஒரு நம்பூதிரி.

பாம்பன் காட்டு நம்பூதிரி ஹோம குண்டம் முன் அமருகிறார். நல்லமணிப் பிள்ளையைக் குளித்து விட்டு வரச் சொன்னதில் அவரும் ஈர உடலோடு...

''கிட்ட வா...''— செல்கிறார் பிள்ளை.

''உக்காரு...''— உட்காருகிறார். அவர் கையில் ஒரு— கோலைத் தருகிறார். வேலமரத்தைக் குடைந்து செய்த மாதிரி இருக்கிறது கோல். பார்க்க சர்ப்ப உரு போலவும் இருக்கிறது.

அந்தக் கோலைப் பற்றிக் கொண்டு ஹோம குண்டத்துப் பீடபாகத்தைத் தொடச் சொல்ல, பிள்ளையும் தொடுகிறார்.

''நீ இப்போ கர்த்தா பிள்ளை... கண் மூடிப் பிரார்த்தனை செய்துக்கோ... ஞான் இப்ப நாகம்மையை விளிக்கப் போறேன். நாகம்மை என்மேல் வரும். அப்போ நாகம்மை எதைக் கேட்டாலும் அதை நீ நிவேதனம் செய்யணும்... செய்வியோ?'' தலையசைக்கிறார் பிள்ளை.

வலது கரம் கோலை ஹோம குண்டத்துப் பீட பாகம் மேல் வைத்துப் பிடித்துக் கொண்டிருக்க, நம்பூதிரியின் கண்கள் குவிந்து பிரார்த்தனையோடு இடுங்குகின்றன. உதட்டில் மந்திர முணுமுணுப்பு.

சுற்றி நிற்பவர்களிடம் உறைந்தது போன்ற நிலை. சேகர் ஒரு வீடியோ காமிராவால் நடப்பதை எல்லாம் படமெடுத்தபடி சுற்றிச் சுற்றி வந்தான்.

''உம்... ஹீம்... ஹம்... ம்ம்... ம்... ம்...''

நம்பூதிரி தன் தலை கேசம் முன் விழ, மெல்ல முணுமுணுப்போடு நடுங்க ஆரம்பித்து சப்தத்தை கூட்டிக் கொண்டே போனார்.

''ஹீம்...ம்ம்...ஹீம்...ஹம்!...ஹம்!

உடம்பில முறுக்கு விழுகிறது. நரம்புகளில் அவர் மேனியைக் கட்டியது போல் நெறிப்பேற்படுகிறது.



''ஹீம்... ஹீம்... ஞான் நாகம்மை வந்து. நாகம்மை வந்நு...'' லகுவாக எகிறிக் கொண்டு கத்த ஆரம்பிக்கிறார்.

''நல்லமணி என்னன்னு கேளு...அம்மா வந்துட்டா. அம்மா வந்துட்டாடா...'' அழகம்மை வீல் சேரில் இருந்தபடி கத்துகிறாள்.

''தாயே வந்துட்டியா, நமஸ்காரம்மா.''

''வந்துட்டேன்... வந்துட்டேன்... கொலபாதகனே, எதுக்குடா கூப்பிட்டே...?''

''தாயே! என்னை மன்னிச்சுடும்மா. நான் தெரியாம தவறு செய்துட்டேன்.''

''தெரியாம செய்ய நீ என்ன கொச்சு மகனா?... பாதகா! பாதகா!''

''ஷமிக்கணும்மா... ஷமிக்கணும்மா... உன்னை சாந்திபடுத்தத்தான் இந்த பூஜையே. நீ என்ன சொன்னாலும் கேக்கறேன். நிவேதனமா உனக்கு என்ன வேணும்...''

''எதைக் கேட்டாலும் தருவியா?''

''தரேன் தாயே!''

''சத்யம் செய்...''

''சத்யம்...சத்யம்...சத்யம்...''

''என்னோட எத்தனை குஞ்சுகளைக் கொன்னே நீ?''

''பன்னெண்டு...''

''பரிகாரம் சொல்லட்டுமா?''

''சொல்லு தாயே...''

''உன் மகளோட எடைக்கு எடை தங்கத்தை இந்த யாக குண்டத்துல சேர்ப்பியா?''

நல்லமணிப்பிள்ளை சற்று திகைத்து தடுமாறுகிறார்.

''என்ன பதிலைக் காணோம்... தங்கம்ன உடனே மனசு வரமாட்டேங்குதா...?''

''சரி தாயே... உன் விருப்பப்படியே செய்யறேன்''

''ஒரு குந்துமணி அளவு கூட, தங்கம் குறையக் கூடாது.''

திரும்ப பிள்ளை திகைத்து விடைக்கிறார்.

''என்ன பேசமாட்டேங்கறே? சர்ப்ப பலி பூஜைல சர்வ பரித்தியாகமும் செய்யணும். அப்பதான் பூஜை நல்லபடி நடந்து முடியும். சாந்தியும் ஏற்படும். இல்லேன்னா உன் சந்ததியில யாரும் உயிரோட இருக்க முடியாது... இருக்க விடமாட்டேன்...''

''சரி தாயே... சரி... சரி... எங்களை வாழவை! அதுபோதும்...''

''பேச்சு மாறமாட்டியே...?''

''மாறமாட்டேன் தாயே... மாறமாட்டேன்.''

''கோலை எடுத்துக்கோ! எழுந்து ஒத்திப்போய் நில்லு!''

அடுத்த நொடி கோலை எடுத்தபடி எழுந்து கொண்டு ஹோம குண்ட பீடத்தைவிட்டு விலகிச் சென்று நிற்கிறார் பிள்ளை.

முகத்தில் இனம் புரியாத கலவரம்.

சேகர் நெருங்குகிறான்.

''சார்...''

''இன்னும் என்ன, சார்? மாமான்னு கூப்டுங்க மாப்ளை.''

''ஏதோ ஒன்னு. இதென்ன எடைக்கு எடை தங்கம் கேக்கறதெல்லாம்...?''



''அதான் கேட்டீங்களே? நிவேதனம்!''

''அதைத் தங்கத்துலதான் பண்ணணுமா?''

''இதுக்குப் பதிலே நம்பூதிரிதான் சொல்லணும்...''

''நம்பூதிரி...'' சேகர் உடனேயே நம்பூதிரிப் பக்கம் திரும்புகிறான். முறைப்பாகப் பார்க்கிறார் நம்பூதிரியும்.

''தங்கத்துலதான் நிவேதனம்... அதுலையும் சந்தியா எடைக்கு எடைன்னா என்ன அர்த்தம்?''

''அதெல்லாம் எனக்கு அற்பம். நாகம்மைக்காக உயிரையே தருவேன்— பாபம் போனா போதும்னு நினைக்கணும்— தங்கம் பெரிசில்ல. அது குப்பைன்னு நினைக்கணும்.''

''அதுக்கு ஏழைகள் யாருக்காவது தானம் பண்ணச் சொல்லலாமே...''

''அதுபத்தி எனக்குத் தெரியாது... நாகம்மை சொல்றத நான் சொல்றேன். அவ்வளவுதான்.''

''அவ்வளவு தங்கம் இல்லேன்னா என்ன பண்றது?''

''இல்லேன்னா நல்லமணி நாகம்மாகிட்ட சொல்லட்டும். அவளுக்குத் தெரியும். நல்லமணி கிட்ட எவ்வளவு இருக்கு— எவ்வளவு இல்லைன்னு...''

நம்பூதிரி பதில் நல்லமணிப் பிள்ளையைச் சற்று இடிக்கிறது.

''இருக்கோ இல்லையோ... எதையாவது வித்து வாங்கியாவது நான் அவ்வளவு தங்கத்தையும் நிவேதனமாக்கறேன். நான் இந்த மிரட்டல்ல இருந்தும் சாபத்துல இருந்தும் விடுபட்டா போதும்...''

பிள்ளை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி ஒப்புதல் தருகிறார். சேகர் நகத்தைக் கடிக்கிறான்.

எல்லாமே முட்டாள்தனம்!

சந்தியாவிடம் சொல்கிறான்.

''உஸ்ஸ்... எதையாவது சொல்லி நாகம்மா கோபத்துக்கு ஆளாகாதீங்க...'' அவள் பயபக்தியோடு கட்டுப்படுத்துகிறாள்.

# 10

'ஹோமம், யாகம் இவைகளில் சொர்ணம் சேர்ப்பதும் பட்டு சேர்ப்பதும் மிக விசேஷமானது. பூஜையின் உச்சக்கட்டமான அந்த இழப்பிற்கு தேவதைகள் மகிழ்ந்து வரம்தருவர்!

சொர்ணதானம் பலவித தோஷங்களை நிவர்த்தி செய்ய வல்லது.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

யாகருண்டம் எரியத் தொடங்க, ஆவர்த்திகள் நிகழ ஆரம்பிக்க நல்லமணிப்பிள்ளை மாளிகை முழுக்கப் புகை மூட்டம்.

கைகூப்பிக் கொண்டு பேசாமடந்தையாக அமர்ந்திருக்கிறாள் அழகம்மை. நான்கு நம்பூதிரிகளும் மந்திர உச்சாடனங்களோடு நெய்விட்டுத் தீ வளர்த்த அந்தத் தீ நாக்கு, பிரம்ம பாக கூரை மேல் திருதிருவென ஏறி ஏறி மறைந்து கொண்டிருக்கிறது.

''சந்தியா நீ எவ்வளவு எடை?''

''நாப்பத்தெட்டு கிலோ!''

''மைகுட்நெஸ்... அவ்வளவு தங்கம் வாங்கி இந்த நெருப்புல போடவா...''



''அதான் சர்ப்ப பலி பூஜை நிவேதனம். நல்ல வேளை அம்மா தங்கத்தோட விட்டா. சில வீடுகள்ல சாகற மட்டும் உப்புப் போட்டுச் சாப்பிடக்கூடாது, சொந்தமா எதையும் வெச்சுக்கக் கூடாது, கோயிலுக்குக் கொடுத்துடணும்னு எல்லாம் பிரஷ்னத்துல வரும்.''

''என்னால ஒத்துக்க முடியாது. தங்கம் என்ன லேசுப்பட்ட சமாச்சாரமா? அதுவும் 48 கிலோ...''

''உங்களுக்கு என்னைவிட 48 கிலோ தங்கம் பெரிசா சேகர்.''

''முட்டாள் மாதிரி பேசாதே...! இழப்புக்காக வருத்தப்பட்டுப் பேசலை. அந்தக் காரணம்தான் எனக்குச் சரியாப்படலை.''

''போனா போகட்டும் சேகர். செத்துச் செத்துப் பிழைக்க என்னால முடியாது.''

''அது சரி; உங்க அப்பா அவ்வளவு தங்கத்துக்கு என்ன பண்ணப் போறார்? மொத்த நாகர்கோவில்லயே அவ்வளவு தங்கம் இருக்குமாங்கறதே சந்தேகம்.''

''அதெல்லாம் எதையாவது பண்ணி ஏற்பாடு செய்திடுவார்...''

''சந்தியா... கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபா சரக்கோட மதிப்பு. உடனடியா எங்க போவார்? அவகாசம் வேண்டாமா? பணம் வேணும்— தங்கமும் கிடைக்கணும். ஏன் எதுக்குன்னு இதுக்குப் பின்னால எவ்வளவோ கேள்விங்க இருக்கு. இட் ஈஸ் நாட் எ ஈஸி திங். ஆமா எங்க உங்கப்பா?''

''விநாயகத்தைக் கூட்டிக்கிட்டு மாடிப்பக்கம் போனார்...''

"இந்த நம்பூதிரிங்க கேட்டது அபத்தம்னா. உன் அப்பா அதை தர ஒத்துக்கிட்டது அதைவிட அபத்தம். நான் சொல்றேன் சந்தியா... யாரோ பிள்ான் பண்ணி ஏமாத்தறாங்க. அவங்க துருப்புச் சீட்டுங்கதான் பாம்புங்க."

"என்ன சொல்றீங்க?"

"உலகத்துல ஏமாத்தறதுக்கு எவ்வளவோ வழிகள், அதுல இதுவும் ஒரு வழி. பயம் பீதியை உருவாக்கி, பலி பூஜைல சரி செய்யறேன்னு டபாய்க்கறது..."

சந்தியா அவனைக் கலக்கமாய்ப் பார்க்கிறாள். 'என்னாலும் மறுக்க முடியவில்லை' என்கிற ரகமாய்ப் பார்த்தாலும், கூடவே, 'இருக்காது' என்கிற நம்பிக்கையும் இழைந்தோடுகிறது.

சேகர் அதை லட்சியம் செய்யாமல் மாடி நோக்கித் தாவுகிறான்.

புகை மூட்டம் நடுவில் ஒரு தேவன்போலக் கலைத்துச் செல்கிறான்.

மாடி பாகம் மிகப் பெரியது... இருபது அறைகளை உடையது. அதில் எந்த அறையில் இருக்கிறார் பிள்ளை...? தேடி நடக்கிறான். ஒரு அறையில் இருந்து மெலிதாய் சப்தம். கதவு உட்பக்கமாய்த் தாழிடப் பட்டிருக்கிறது. போய்க் கதவைத் தட்டிப் பிள்ளையை அழைக்கலாம் என்று கையை ஓங்குபவனை உள்குரல் கட்டிப் போடுகிறது.

"யாருடா அந்த நம்பூதிரிங்க..."

"பாம்பன் காட்டு நம்பூதிரிங்கதான் முதலாளி..."

"செருப்பால் அடிப்பேன். உண்மையை சொல்லு."



"ஐய்யோ அவங்க நம்பூதிரிங்கதான் முதலாளி."

"என் காதுலையே பூ சுத்தறியா? நான் ஈரைப் பேனாக்கி பேனை பெருமாளாக்கி பெருமாளையே எனக்கு வேலக்காரனா வெச்சுக்க முடிந்தவன். என் கிட்டையா காது குத்தறே...?"

"முதலாளி என்ன ஏதேதோ சொல்றீங்க..."

"உண்மைய ஒத்துக்க விநாயகம். அவங்க கஸ்டம்ஸ் கலெக்டருங்கதானே?"

"கஸ்டமஸ் கலெக்டருங்களா... முதலாளி."

"டேய்... ஒரேயடியா நடிக்காதே. வசமா மாட்டிக் கிட்டே நீ. பாம்பை விட்டுப் பீதி கிளப்பறியா? பாம்பு பழி வாங்க வருதா?"

"முதலாளி... அது வந்து... வந்து."

"உம் சொல்லு...! என்ன பண்ணுனே?"— இந்த நாயுங்களை எங்க பாத்தே? நீ இவங்களப் பாத்தியா...? இல்லை இவங்க உன்னை வந்து பாத்தாங்களா?"

"அவங்கதான்."

"எதுக்கு வந்து பாத்தாங்க? எப்பப் பாத்தாங்க? விலாவாரியாச் சொல்லு."

"அம்பது கிலோ தங்கத்தை நீங்க வெளிநாட்ல இருந்து கடத்திகிட்டு வந்ததைக் கண்டு பிடிக்கணும் னாங்க. சமூகத்துல பெரிய பொறுப்புல இருக்கற தாலையும், அரசியல் செல்வாக்கெல்லாம் இருக்கற தாலையும் உங்களை அவங்களால நேரா வந்து பிடிக்க முடியலை.

அப்படியே பிடிச்சாலும் நீங்க நழுவிடுவீங்கன்னு நினைச்சாங்க. அதனாலதான் சாமர்த்தியமா இப்படி ஒரு ட்ராமா போட்டோம்.

எதார்த்தமா நம்ம அம்மாவையும் பசங்களையும் பாம்பு கடிச்ச விபரத்தை அவங்ககிட்ட சொன்னேன். அதை வெச்சே ட்ராமாவ பில்டப் பண்ணுனாங்க.

பாம்புகளை சரமாரியா உள்ளவிட்டு பீதியை உருவாக்கறதுன்னு திட்டம் போட்டோம். நல்லபடி செய்தோம். அதுல ஒன்னு எப்படியோ நம்ம சந்தியாம்மாவக் கடிச்சிடுச்சு. விஷம் எடுத்த பாம்பா இருந்த தால அவங்களுக்கு ஒன்னும் ஆகலை.

நாங்க நினைச்ச மாதிரி இதெல்லாம் சர்ப்ப தோஷம்னு சாதிச்சு, சர்ப்ப பலி பூசைக்கு ஏற்பாடு செய்தோம். அதுல நிவேதனமா தங்கம் கேட்கறதுன்னு அப்பவே முடிவு.

உசுருக்குப் பயந்துகிட்டு கடத்தின தங்கத்தை நீங்க வெளிய எடுத்துக்கிட்டு வரும்போது கையும் களவுமாகப் பிடிக்கத் திட்டம் போட்டோம்.

ஆனா நீங்க இதை எப்படிக் கண்டு பிடிச்சீங்கன்னு தான் தெரியல...''

விநாயகம் வெலவெலக்கிறான்; பிள்ளையின் பிடியில் தத்தளிக்கிறான்.

''இதை நான் நேத்தே ஆஸ்பத்திரில வெச்சே கண்டு பிடிச்சிட்டேன் விநாயகம். சந்தியா ரத்தத்துல துளிகூட விஷம் இல்லைன்னு டாக்டர் சொன்னப்பவே எனக்கு சந்தேகம். அதோட அப்ப இருந்தே நீ பூசை பூசைன்னு புலம்ப ஆரம்பிச்சே. உன் மேல ஒரு கண்ணு வெச்சேன். என் மாப்பிளை வேற என் நினைப்புக்கு தோதா இது ஏதோ மனுஷ சதிங்கற மாதிரி எனக்கு எடுத்துக்க கொடுத்தாரு. நானும் எதுவரைல போறீங்க பாக்றேன்னுதான் விட்டுப் பிடிச்சேன். கடைசில அவர் நினைச்ச மாதிரி எல்லாம் சரியாதான் இருக்கு.''



தாடையைச் சொறிந்து கொண்டே நல்லமணிப் பிள்ளை பேசுவது வெளியில் சேகர் காதுகளில் விழ, அவன் சிலிர்த்து நிமிர்கிறான்.

நல்ல வேளை

நல்லமணிப் பிள்ளை சுதாரித்துக் கொண்டார்.

கில்லாடிதான்!

நம்புவது போல் நம்பி வளைத்திருக்கிறார்.

சபாஷ்...

உற்சாகமாகக் கதவை உடனடியாகத் தட்டுகிறான் சேகர்.

''மாமா... மாமா...''

சிறிது நேரம் கழித்துத்தான் திறந்தார் பிள்ளை. உள்ளே பார்த்தபோது பொட்டில் வலித்தது. விநாயகம் தாக்கு வெளித் தள்ளிய நிலையில் பிணமாக!

''மாமா, என்ன இது?''— பதைக்கிறான் சேகர்...

''துரோகி மாப்ள இவன். அதான் போட்டுத் தள்ளிட்டேன்.''

''ஐயோ தப்பு பண்ணிட்டீங்க. போலீசு கேசுன்னு வருமே. கீழே வேற அந்த அதிகாரிங்க...''

''ஒன்னும் வராது மாப்ள. சர்ப்ப பலி பூசைக்கு வந்த பாம்பு ஒன்னு கடிச்சிட்டதா சொல்லிக்கலாம். எவ்வளவு பெரிய நரித்தனம் பண்ணியிருக்கான் நாயி. உயிரோட விட்றதா?''

''இவனைக் கொன்னுட்டீங்க. அந்த நம்பூதிரிகளை.''

''நம்பூதிரிகளா அவங்க. நாயுங்க. கஸ்டம்ஸ் அதிகாரிங்க.''

"கரெக்ட் அவங்கதான். அவங்களை எப்படிச் சமாளிக்கறதாம்?"

"என்ன மாப்ள பெருசா... தங்கத்துல பாதிய லஞ்சமா கொடுத்தா விஷயம் முடிஞ்சிடுச்சு. லஞ்சத்துல விழாத அதிகாரிங்களும் உண்டா என்ன?"

"மாட்டேன்னு சொன்னாங்கன்னா?"

"அவங்க விட்ட பாம்பை அவங்களுக்கே விட்டு அவங்களையும் கடிக்க வைப்பேன். பழி பாம்புங்க மேல— தங்கம் எனக்கே எனக்கு..."

"இது ஆனாலும் அசாத்யமான நெஞ்சழுத்தம் மாமா..."

"அப்படி எல்லாம் இருந்தாதான் மாப்ள இந்தக் காலத்துல வாழலாம். சந்ததிகளுக்கும் சேர்த்து வைக்கலாம். நீங்க இதுல எல்லாம் மூக்கை நுழைக்காம அமெரிக்கா கிளம்பற வழியைப் பாருங்க. இந்தக் கொலையைப் பார்த்து மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க. இதெல்லாம் எனக்கு சகஜம்..."

பிள்ளை பேசிக்கொண்டே அறைக் கதவைப் பூட்டுகிறார். அவனை எதிர்பார்க்காமல் கீழே இறங்கி நடக்கிறார். அவன் பின்தொடர்கிறான். நெஞ்சு கனத்துப் போய் இருக்கிறது. ஒரு கொலையைப் பார்த்த அதிர்ச்சி. அதை ஏதோ ஒரு சாதாரண சம்பவமாகச் செய்துவிட்டுப் போகிறார் நல்லமணிப் பிள்ளை.

துளிகூடப் பதட்டமில்லை. எல்லாவற்றையும் வாங்க முடியும். எல்லாவற்றிற்கும் விலை இருக்கிறது என்று கருதுபவராகக் காட்சி தருகிறாரே?

எப்படி இது ஒரு மனத்துக்குச் சாத்யம்...?

அவனுக்குள் நிரடல்...



ஐம்பது கிலோ தங்கத்தை எல்லாம் சாதாரணமாகக் கடத்தி வர முடிந்திருக்கிறதே இவரால்...

தெரிந்தது இது ஒன்றுதான்...

தெரியாதது இதுபோல் இன்னும் எத்தனை? எத்தனை? அவன் முகத்தில் பீதியின் பெருக்கம்.

கீழே விமரிசையாய் சர்ப்பபலி பூஜை... சாஸ்திரத்தால் மிக உடர்வாகவும் அரிதாகவும் சொல்லப்படும் ஒரு விஷயம்...

சிலருக்கு ஆயுதமாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. பரவாயில்லை. அவர்களும் நன்றாகவே நடிக்கிறார்கள்! தோட்டத்தில் நாக சர்ப்ப சிலையைப் புதைத்து வைத்து, கிணற்றில் கருடன் சிலையைப் போட்டு ஒரு மாஸ்டர் பிளானை முடிந்த அளவு மைக்ரோன் சுத்தமாகத்தான் செய்திருக்கின்றனர்.

ஆனால் இந்த மனிதரோ எல்லாவற்றிற்கும் பெப்பே காட்டி விட்டார்.

எடுத்த எடுப்பில் சந்தியாவின் எடைக்கு எடை தங்கம் என்று வைத்த குறிதான் தப்பி விட்டதோ?

சேகர் சிந்தனைகளின் நீட்டத்தோடு படி இறங்குகிறான். புகை மூடிக்கிடக்கிறது ஹாலை. அழகம்மை நாச்சி இறங்கி வருபவனைப் பார்க்கிறாள்.

"எங்க போயிட்டீங்க? என்னமா பண்றாங்க? இருந்து கவனிங்க."

மற்ற நேரமாக இருந்தால் சிரிப்பு வந்திருக்கும். ஆனால் இப்பொழுது முடியவில்லை.

"ஆமாம்; எங்க விநாயகம் ஆளையே காணோமே...?"— அழகம்மை அடுத்தடுத்து சங்கடமான கேள்விகளையே கேட்கிறாள்.

முழிக்கிறான் சேகர்.

சந்தியா அருகில் வருகிறாள். புகை காரணமாகக் கண்களில் எரிவு.

"எங்க போய்ட்டீங்க? அப்பாவைப் பார்த்தீங் களா?"

"கீழதானே இறங்கி வந்தார்?"

"புகைல சரியா தெரியலை. எங்கையோ வெளிய போயிருக்கணும்..."

"சந்தியா உங்கப்பா பெரிய..."

சேகர் தடுமாற்றத்துடன் எதையோ சொல்ல வாயெடுப்பவன், அவளாலேயே மடக்கப்படுகிறான்.

"என்ன சொல்லப் போறீங்க? பக்தி நம்பிக்கைன்னு மோசம் போற ஒரு முட்டாள்னுதானே?"

பரிதாபமாக இருக்கிறது சந்தியாவைப் பார்ப்ப தற்கு. அப்படி ஒரு மனிதர் வயிற்றில் இப்படி ஒரு அப்பாவிப் பெண் எப்படிப் பிறந்தாள்?

வியப்பேற்படுகிறது.

நடுவில் வேலைக்காரன் ஒருவன் — சேகரை நெருங்குகிறான்.

"ஐயா உங்கள பெரிய ஐய்யா கூப்பிட்டாரு..."

"எங்க..."

"வெளிய போர்டிகோல நிக்கறாரு..."

உடனேயே ஓடுகிறான்.

"வாங்க மாப்ள. அந்த நாயிங்க பூசையை செய்து கிட்டே இருக்கட்டும். கேட்டா தங்கம் வாங்கப் போயி ருக்கேன்னு சொல்லுங்க. ஒரு முக்கியமான வேலை இருக்கு. முடிச்சிட்டு வந்துடறேன்."



சேகர் கோவில் மாடு போல தலை ஆட்டுகிறான். அவரது கார் சீறிக் கிளம்புகிறது!

# 11

'பூஜா நியமங்களில் சக்தி மிக்கது சர்ப்ப பலி பூஜை. இதை ஒருவர் விளையாட்டாகவோ விநயமாகவோ கருதினால் அவர்கள் மிகவும் அவதிப்படுவர். உரிய முறையில் பூஜிப்பவர் களை சர்ப்பங்கள் ஆசீர்வதிக்கவும் தவறுவ தில்லை.'

—சர்ப்ப பலி பூஜா க்ருதி

* * *

லட்சம் ஆவர்த்திகள் முடிந்து நம்பூதிரிகள் நால் வரும் பால் பழம் சாப்பிடுகின்றனர்.

இருட்டிவிட்டது.

பூஜா விதிப்படி அனைத்து திறந்த பாகங்களும் அடைக்கப்பட்டு மூங்கில் தட்டியால் ஹோம பீடபாகம் அடைக்கப்படுகிறது.

சாவித்துவாரத்தில் கூட சந்தனம் அடைக்கப்பட்ட நிலையில்...

"நல்லமணி எவ்விட?" — பாம்பன் காட்டு நம்பூதிரி கேட்கிறார்.

"வந்துடுவார்... தங்கம் வாங்க திருவனந்தபுரம் வரை போயிருக்கார்..."

"திருவனந்தபுரத்துக்கா...? ஏன் இங்க அவர்கிட்ட இல்லையாக்கும்?"

சேகர் அதைக் கேட்டு லேசாய் முறைக்கிறான்.

"இல்லேங்கறதாலதானே போயிருக்கார்?" என்கிறான்.

"இல்லா... இல்லா... நாகம்மை இருந்தால்தான் கேட்பா"— என்று அவர் கடுரிக்கிறார்.

"அப்படியா... அவர் வந்துடுவார். வந்தவுடனே அவர்கிட்டையே கேட்டுக்குங்க."

"நம்பூதிரி... பூஜை முடிஞ்சுதா? தங்கத்தை ஹோம குண்டத்துல போடணும்னு சொன்னீங்களே அது எப்ப?" அழகம்மை இடையிடுகிறாள்.

"ஹோமம் முடிஞ்சது. தங்கம் வந்தா நிவேதனம் பண்ணி ஆரத்தி காட்ட வேண்டியதுதான்."

"பாம்... பாம்..."

வாசல்புறமாய் நல்லமணிப்பிள்ளை வந்து விட்ட தற்கான அறிகுறி.

"என் பையன் வந்துட்டான்..." அழகம்மை வாசல் பக்கம் பார்க்கிறாள்.

பெட்டி ஒன்றோடு உள்ளே பிரவேசிக்கிறார் நல்ல மணிப்பிள்ளை.

உள்ளே நுழைபவர் மாடிப்படி ஏறி பாதிப்படியில் நின்று திரும்பி நம்பூதிரிகளை மேலே அழைக்கிறார்.

"தங்கம் எங்க?"

"வாங்க நம்பூதிரி... மேலதான் இருக்கு தரேன்."

அவர்களும் உற்சாகமாய் அவரைப் பின் தொடர்கின்றனர். சந்தியாவும் சேகரும் சேர்ந்து நின்றுகொண்டு இதைப் பார்க்க, ஊடே ஹோமப் புகையின் மிகச் சன்னமான குறுக்கீடு.



சேகர் சிறிதுநேரம் பார்த்துவிட்டு அவனும் மாடி ஏறுகிறான்.

பிள்ளை எப்படிச் சாதிக்கப் போகிறார் என்பதைப் பார்க்க...

நெருங்க நெருங்க உள்ளே சிரிப்பு சப்தம் கேட்கிறது. நான்கு பேரும் சேர்ந்து சிரிக்கும் சப்தம். ஜன்னலை ஒதுக்கித் தள்ளிப் பார்க்கிறான்.

பிள்ளை தான் ஒரு பெரிய முதலை என்பதைச் சாதித்து விட்டிருக்கிறார். அவர்கள் முன் பிரீஃப்கேஸ் திறந்து கிடக்க, அதில் கட்டி கட்டியாக தங்க பிஸ்கட்டுகள்.

"பிள்ளை நீங்க நிஜமாலுமே பெரிய சாணக்யன்."

"நீங்க மட்டும் என்ன... பாம்ப விட்டு இப்படியா மிரட்டுவீங்க...?"

"எப்படியோ வழிக்கு வந்தீங்களே?"

"சரி; எல்லாம்தான் முடிஞ்சுடுச்சே. இந்த பூஜை ட்ராமாவையும் முடிச்சுடுங்களேன்..."

"முடிச்சிட வேண்டியதுதான்... ஆனா ஒண்ணு. போட்ற வேஷத்த நல்லவிதமா போடணும்— நீங்களும் சந்தேகப்பட்டுடக் கூடாதுங்கறதுக்காக நிஜமாலுமே ஒரு சர்ப்ப பலி பூஜையை நேர்ல போய்ப் பார்த்தோம்."

"ஓஹோ... அதுல நிஜமா பாம்புங்க வந்ததா என்ன?"

"அதை யார் பார்த்தா? அதைத்தான் பார்க்க முடியாதபடி சாவித் துவாரம்கூட அடைச்சிட்றோமே."

"அப்ப இங்க."

"இது ட்ராமான்னாலும் கொஞ்சம் உண்மையான ட்ராமா. பூஜாகிரமங்கள் எதையும் நாங்க விடலை... இருந்தும் நீங்க எங்களைக் கண்டு பிடிச்சதுதான் ஆச்சர்யம்."

"போதும். இதோட பேச்ச விடுங்க. நீங்க கிளம் புங்க. விநாயகத்தை வேற கழுத்த நெறிச்சுக் கொன் னுட்டேன். இன்னிக்கு ராத்திரி பாம்புங்க வரும்போது பாத்தான். சுடிச்சிடிச்சுன்னு சொல்லிச் சமாளிக்கணும். நீங்க...?"

"மூச்சு விட மாட்டோம். கள்ளனுக்குக் கள்ளன், இந்த நம்பிக்கையும் நேர்மையும் தானே முக்கியம்."

"அப்ப அடுத்தடுத்த கடத்தல்லயும் உங்க தயவை எதிர்பார்க்கலாமா?"

"நிச்சயமா?"

"எது வேணும்னாலும் நேர்ல வாங்க. பாம்பு விடாதீங்க என்ன?"

பிள்ளை சொல்லிவிட்டுக் கெக்கலிக்கிறார். அவர் களும்...

சேகர் ஆச்சரியம் அதிர்ச்சி என்று ஒட்டு மொத்த விஷயங்களின் உச்சியில்!

கார் கிளம்பத் தயாராய்...

டிரைவிங் சீட்டில் நல்லமணிப் பாண்டியன். உள்ளே நம்பூதிரிகள் நால்வரும்...

காருக்கு வெளியில் சேகர்.

"மாப்ள இருங்க. இவங்கள ட்ராப் பண்ணிட்டு வந்துடறேன். ராத்திரி எல்லாரும் கண்ணைக் கட்டி கிட்டுப் படுக்கணுமாம். சொல்லுங்க."



"ட்ராமாதானே மாமா?"

"யார் இல்லேன்ன...? ஆனா ஆத்திரத்துல விநா யகத்தைக் கொன்னுட்டேனே? ட்ராமா தொடர்ந்தா தானே பழியைத் தூக்கிப் போட முடியும்?"

சொல்லிக்கொண்டே காரைக் கிளப்புகிறார் நல்ல மணிப்பிள்ளை. கார் சீறிப் பாய்கிறது. பார்த்துக் கொண்டே நிற்கிறான் சேகர்!

நெடு நேரம் பார்த்துவிட்டுத் திரும்புகிறான். அழகம்மை வீல் சேரைத் தள்ளிக்கொண்டு வருகிறாள்.

"எம்ப்பா... கடைசி வரைல ஹோமத்துல தங்கத் தைப் போடல... இப்ப அவங்க எங்க போறாங்க? இனி பாம்புத் தொல்லை இருக்காது தானே?"

சந்தியாவும் இதையேதான் கேட்கிறாள்.

உண்மைகளைச் சொல்லிவிடலாமா? சொன்னால் தாங்குவார்களா? கேள்விக்குள் புரண்டெழுந்து தடு மாறுகிறான் சேகர். அதே சமயம்...

* * *

காரிடம் நல்ல வேகம். நால்வரிடமும் சிரிப்பும் கும்மாளமுமாகப் பேச்சும். நடுவில் திடும்மென்று பிள்ளையின் இடுப்பருகே ஏதோ வழவழவென்று...

"என்னவே இடுப்புல கையெல்லாம் போட்டு கிட்டு?" ஸ்டியரிங்கைப் பற்றிய கையோடு நெளிகிறார் பிள்ளை.

"கையா... நாங்களா?" பக்கத்து சீட்டில் பாம்பன் காட்டு நம்பூதிரியாக நடித்த மனிதர் கேட்டுத் திரும்பு கிறார். பார்வையைப் பிராண்டுகிறது அந்த வழவழப் புக்குக் காரணம்.

நல்ல நீளமான கார்கோடக நாகத்தின் நெளிசல் அருகே.

''ஐய்யோ பாம்பு...!''

''எங்கைய்யா?''— பிள்ளை கேட்டுக் கொணடே பக்கவாட்டில் பார்க்கிறார். இருவருக்கும் இடையில் அந்த நாகம் தன் இரட்டை நாக்கை கொடூரச் சீற்றத்தோடு நீட்டியபடி எம்பி எழுகிறது!

''ஐய்யோ!''— பிள்ளை பதைத்துப்போய் ஸ்டியரிங்கை கண்டபடி திருப்புகிறார்.

சாலையோரமாக ஒரு அரக்கத்தனமான புளிய மரம்!

அதில் போய் மோதியதில் அந்தக் காரையே நசுக்கிச் சிதைக்கிறது அந்த மரத்தின் அடிப்பாகம்.

அங்கும் இங்குமாக சாலையில் போய்க் கொண்டிருப்பவர்கள் ஓடி வருகிறார்கள்.

காரின் கதவுகள் எல்லாம் மோதிய வேகத்தில் பிய்ந்துபோய் திறந்து கொள்ள, அந்த நான்கு பேரோடு நல்ல மணிப்பிள்ளையும் ரத்தச் சகதியாக பிசைந்து போய்க் கிடக்கிறார்!

• • •

விநாயகத்தின் உடலை போலீசில் ஒப்படைத்து விட்டு— நல்லமணிப்பிள்ளையின் மேலும் கம்ப்ளைண்டைப் பதித்துவிட்டு ஒரு காரில் திரும்பிக் கொண்டிருக்கிறான் சேகர். கூடவே கலங்கிய விழிகளோடு சந்தியா.

''சட்டப்படி நான் செய்ததுல தப்பில்லையே சந்தியா...''



''..........''

''உன் வேதனை எனக்குத் தெரியுது. வேடிக்கை பார்க்கவும் ஒத்துப் போகவும் என்னால முடியலை. முடிஞ்சா நான் நல்ல மனுஷனில்ல...''

அவள் திரும்பிப் பார்க்கிறாள்.

''உங்களப் பாராட்றேன் சேகர். ஆனா அப்பா எப்படியும் தப்பிடுவாரு... அவரோட சாமர்த்தியம் எனக்குத் தெரியும். பழி வாங்க மேல திரும்பிட்டா என்ன பண்றதுன்னுதான் கவலைப்பட்றேன்.''

''அதையும் பார்ப்போம். நீ என் பக்கம் நிப்பியா?''

''நான் நின்னு என்ன பிரயோஜனம். அந்த தெய்வம் நிக்கணும் சேகர்...''

விசும்பலோடு கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள் சந்தியா.

கார் வளைந்து திரும்புகிறது.

எதிரில் ஒரே கூட்டம்...

காரை பிரேக்கடித்து நிறுத்துகிறான்.

''என்ன கூட்டம்?''— ஒருவரிடம் கேட்கிறான்.

''நல்லமணி ஐய்யா கார் ஆக்சிடென்ட் ஆயிடிச்சு. எல்லாரும் செத்துக் கிடக்கறாங்க...''

சேகருக்கும் சந்தியாவுக்கும் தூக்கியடிக்கிறது. இறங்கி கூட்டத்தைக் குடைகின்றனர்.

சப்பளிந்து கிடக்கும் காரைப் பார்க்கின்றனர்.

எப்படி?

எப்படி?

பதில் தெரியாதபடி தத்தளிக்கும்போது திறந்து கிடந்த கதவுப் பாகத்தில் இருந்து ஓசைப்படாமல் இறங்குகிறது அந்த நாகம். கூட்டம் கண்களை கா வரை விரிக்கிறது. சிறிது தூரம்வரை சென்ற அது நின்று பயமே துளியுமின்றி திரும்பி சேகரையும்— சந்தியாவை யும் ஒரு பார்வை பார்த்துவிட்டு சரசரவென ஊர்ந்து பக்கத்து புதர் அடைவில் மறைந்தும் போகிறது.

அதுவரை கும்பிடாத சேகரின் கைகள் நிஜமான சர்ப்ப பலியைப் பார்த்து நிமிர்ந்தெழுந்து குவிகின்றன.

சந்தியா காதோரம் சொல்கிறாள். ''தெய்வம் நம்ம பக்கம் இருக்குங்க!''

30164
4655921

முற்றும்